Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 20 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 மார்ச் 2022










## எங்கள் உறவுகள் எங்கே? சிங்கள ஆக்கிரமிப்பு கொடுங்கோல் அரசு பதில் தர மறுப்பது ஏன்? இது ஒரு இன அழிப்பின் இன்னொரு வடிவம்...

# மார்ச் 08ன் முக்கியத்துவம்

அமெரிக்கத் தொழிலாளர்கள் எட்டுமணி நேர வேலை நேரத்துக்காக போராடி வெற்றி பெற்ற நாளை நினைவு கூரவே மே நாள் அறிமுகமானது. அது அன்று உலகத் தின ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவராலும் கொண்டாடப் படும் ஒன்றாகியுள்ளது. அதேபோலவே, அதே அமெரிக்கப் பெண் தொழிலாளர்கள் 10 மணி நேர வேலைகேட்டும், ஆண்களுக்கு சமமான ஊதியத்தைக் கேட்டும் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினார்கள் ஆர்ப்பாட்ட அணி வகுப்புகளையும் நடத்தினார்கள். அமெரிக்கப் புடவை ஆலைப்பெண் தொழிலாளர்களே இதில் முன்னணி வகுத்தார்கள். இது நடந்து 1857 ம் ஆண்டு மார்ச் 08ம் திகதியிலாகும்.

அமெரிக்காவிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் முதலாளித்துவ வர்க்கம் ஆட்சிக்கு வந்தது. தொழிலாளர்களின் போராட்டங்கள், எதிர்பார்ப்புகள் யாவும் அடக்கப்பட்டன. அவர்களது போராட்ட வரலாறுகளும் மறைக்கப்பட்டன.

ஆனால் வரலாற்றின் உண்மைத் தோற்றத்தை யாராலும் மறைக்க முடியாது உலக சமதர்ம அனைத்துலக பெண்கள் அமைப்பு என்றோர் பெண் விடுதலை அமைப்பு 1907ம் ஆண்டு தோற்றம் பெற்றது. இது இன்று சமதர்ம அனைத்துலக அமைப்பின் (Socialist International) சகோதரத்துவ அமைப்பாக சமதர்ம அனைத்துலக பெண்கள் அமைப்பு என்ற பெயரில் இன்றும் இயங்கிவருகின்றது.

இவ்வமைப்பின் 2வது மகாநாடு 1910ம் ஆண்டு டென் மார்க்கில் கோபன் ஹேகன் நகரில் கூடியது. முதலாளித்துவவாதிகளால் மறைக்கப்பட்ட வரலாற்றை இவர்கள் வெளிக்கொணர்ந்தார்கள். அமெரிக்க பெண் தொழிலாளர்களின் போராட்ட எழுச்சி நாளான மார்ச் 08ஐ அனைத்துலகப் பெண்கள் நாளாக பிரகடனம் செய்தார்கள். ஜேர்மனிய பொதுவுடமைக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான கிளாரா செட்கினே இத் தீர்மானத்தை முன்வைத்தவராகும்.




**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404
For All Your Mortgage Needs
• Purchase • Refinance
• First | Second Mortgage • Equity Line of Credit
Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronot, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE
SERVICES
Purchasing a Residential Property
Selling a Residential Property
Residential Mortgage Refinancing
Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
வீடுகள், கொண்டோக்கள், வாடகை வசிப்பிடங்கள், விட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேளைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI
SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1647-278-3100

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copys
Inside 32 Pages, B&W 20lb
with colour glossy cover
c $ 310.00
Large Format Digital Printing
Design Only
c $ 9.99 /Sq. Ft (c$ 34.99 / ft.)
1000
Business Cards
with out design c $ 59.99
One Side - 16pt Card Stock
with out design c $ 29.99
One Side,10pt Card Stock
We print all kind of products
Call Me : Silver Print House - 647 712 1266

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

SELVAM
GENERAL PEST CONTROL
Cockroaches, Silverfish, Carpet Beetles, Moths, Fleas
Rodents, Spiders, Wasps/Bees/Hornets & Ants...
எலி, பூச்சி தொல்லையிலிருந்து விடுபட
உடங்களுக்கு உதவிட 24 மணி நேரமும்
7 நாட்களும் இலவச மதிப்பீட்டுடன் 100 வீத
உத்தரவாதத்துடன் சேவையாற்றிட அழையுங்கள்
இந்த விளம்பரத்தாலோ எந்த வேளைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி,
வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)
வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
• AUDIT • CORPORATE TAXES
• REVIEW ENGAGEMENT • PERSONAL TAXES
• NOTICE TO READER • FINANCIAL PLANNING
• BUSINESS ADVISORY • CRA AUDITS
• CONTROLLERSHIP SERVICES • PAYROLL
• BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

2023 உலக வணிகம்
ULAGA VANIKAM உலக வணிகம்
Ulaga VANIKAM
Tel: 437 345 4203
www.ulagavanikam.com
ulagavanikam@gmail.com

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு, சாதாரண மரண நிகழ்வு அல்ல, எனது தேச விடுதலையின் ஆன்மீக அறை கூவலாகவே மாவீரர்களது மரணம் திகழ்கின்றது.**






## சங்கத்தமிழ்

**தொடர்புகளுக்கு**

**தொலைபேசி**
437 345 4203

**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com

**முகநூல்** (Facebook)
Sangathamil Canada

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# கரும்புலி

# லெப். கேணல் பூட்டோ “நம்பர் வண்”




இந்தியப் படைகளும் ஒட்டுக்குழுக்களும் சேர்ந்து உணர்வாளர் களை வேட்டையாடிக் கொண்டிருந்த காலம். மன்னார் மாவட்டத்தின் பாலக்குழிப் பகுதியில் யூலியனின் தந்தை இந்தியப் படைகளால் கைது செய்யப்பட்டார். பள்ளிக்குள் புகுந்த படையினர் யூலியனைக் காட்டித்தரும் படி துப்பாக்கி முனையில் அச்சுறுத்துகின்றனர். அன்று பள்ளிக்குச் செல்லாத யூலியன் தப்பித்துக்கொள்கிறான். உடனடியாக முஸ்லிம் குடும்ப நண்பர் ஒருவரின் உதவியுடன் மறைமுகமாக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுகிறான்.

அங்கிருக்கும் நகைக் கடையொன்றில் தற்காலிகமாகப் பணிக்கு அமர்த்தப்படுகின்றான். முதல் நாள் கடைக்குச் செல் கிறான். அங்கிருக்கும் நாற்காலி அமர்ந்திருக்கின்றான். அங்கு வந்த முதலாளி “கடைக்கு வேலைக்கு வந்தனி எப்படிக் கதிரை யில் இருக்கலாம்?” என அதட்டுகிறார். “நான் எனது ஆசிரியர் களுக்கு மட்டும்தான் எழுந்து மரியாதை கொடுக்கிறனான்” என கூறியவன் எவருடைய உதவியுமின்றி மீண்டும் தாயிடம் வந்து சேருகின்றான். “அம்மா இப்படி அடிமையாகச் சிறுமைப் படுவதிலும் பார்க்க நான் இயக்கத்திற்குப் போகப்போறன்” என இசைவு கேட்கிறான்.

அன்னை அமைதியாக இருக்கின்றாள். அங்கிருந்த உறவினர் கள் அழுகின்றார்கள். நீங்கள் அழுதுகொண்டு இருக்கையில் நான் இயக்கத்திற்குப் போக மாட்டன். ஆனால் விரைவில் போயிருவன்” என்றவன், ஒருநாள் இயக்கத்தில் இணைந்து விட்டான். உயிரச் சத்தை அசட்டை செய்து, போராளிகளுக்கு அடைக்கலம் கொடுத்த மிகவும் ஆதரவான வீட்டிலிருந்து, இவன் இயக்கத்தில் இணைந்தது, முகாம் பொறுப்பாளரைச் சங்கடத்திற்கு உள்ளாக்கியது. “நீ வீட்ட திரும்பிப் போ” என கூறுகின்றார். “இல்ல நான் அம்மாவிட்ட சொல்லிப் போட்டுத் தான் வந்தனான்”. என பதிலளிக்கின்றான். இதனை உறுதிப் படுத்த பொறுப்பாளர் தாயைச் சந்திக்கின்றார். மகனின் கூற்றை உண்மையாக்க விரும்பியவள் “ஓம் என்னட்ட சொல்லிப்போட் டுத்தான் வெளிக்கிட்டவன்” எனக் கூறுகின்றாள். முழுமையான போரா ளியாக மணலாற்றுக் காட்டினுள் இவனது போராட்ட வாழ்க்கை “பூட்டோ” எனும் பெயருடன் தொடங்கியது.

காட்டு வாழ்க்கை, கடினப் பயிற்சிகள் கடந்து வேவுப்புலியாகப் பரிணமிக்கின்றான். காடுகளையும் எதிரிமுகாம்களையும், காவலரண்களையும் கால்களால் நடந்து அளந்து கணிக்கின் றான். ஒரு நாள் ஏழு பேர் கொண்ட வேவு அணியை வழிநடத் தியவாறு, வனப்பாதுகாப்பு வலயத்தின் சுற்றயல் பகுதியை கண்காணித்துக் கொண்டு வருகின்றான். ஒரு இடத்தில் சூழலுக்குப் பொருத்த மற்ற முறையில் புற்கள் மடிந்திருப்பதை அவதானிக்கின்றான். எதிரி தமது பகுதிக்குள் புகுந்துவிட்டதாக கூறுகின்றான். மற்றவர்கள் அதனை மறுதலிக்கின்றனர். இவ னோ அப்பகுதியில் அண்மையில் தான் புதைத்து வைத்த மிதி வெடியொன்றைத் தோண்டி எடுக்கின்றான். எதிரி மீண்டும் அப்பாதையைக் கடப்பானா யின் எங்கு பாதம் வைப்பான் என பதைக் கணிக் கின்றான். அவ்விடத்தில் மிதிவெடியை வைத்து உருமறைத்து விடுகின்றான். தொடர்ந்து நகர்கின்றார்கள். சிறிது நேரத்தில் வெடிச்சத்தம் ஒன்று கேட்கின்றது. ஏனையவர் கள் காட்டு விலங்கு ஏதும் மிதிவெடியில் சிக்கியிருக்கும் என கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அதனை மறுதலித்தவன் அவர்களையும் அழைத்துக்கொண்டு அவ்விடம் திரும்புகின்றான். அங்கு இரத்தம் சொட்டிய படியே இராணுவப் பாதணியுடன் துண்டிக்கப் பட்ட கால் ஒன்று கிடக் கின்றது. பின்னர் வந்த நம்பகமான தகவல் மூலத்திலிருந்து தெரியவந்தது. இவர்களுடைய காட்டு முகாமைச் சுற்றி வளைத்து தாக்கி யழிப்பதற்காகத் தங்களது வேவு தகவல்களை இறுதியாக உறுதிசெய்ய வந்த இராணுவ அதிகாரி ஒருவர்தான் மிதிவெடியில் சிக்கியது என்பது. இவனது இச் செயற்பாட்டால் பல போராளிகளின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டது. இவ்வாறான பல பதிவிலுள்ள, பதிவில் இல்லாத நிகழ்வுகளின் ஊடாக இவன் ஒரு படைய அறிவியலாளனாக வருவதற்கான அறிகுறிகள் தென் படத்தொடங்கின. மணலாறு மாவட்டத்தில் நடாத்தப்பட்ட பல் வேறு முகாம் தாக்குதல்கள், பதுங்கித் தாக்குதல்கள் என்பன வற்றிற்கு வேவு எடுத்தும், அணிகளை வழி நடத்தியும் போராட்டத்திற்கான தன் பங்களிப்பை மேம்படுத்திக்கொண்டான். இக்கால கட்டத்தில் ஒரு சண்டையில் தனது இடதுகைப் பெருவிரலையும் இழந்திருந்தான். இயல்பாகவே இவனிடம் இருந்த ஓவியம் வரையும் ஆற்றலால் இவன் வரைபடப் பகுதிக்குள் உள்ளீர்க்கப்பட்டான்.

வேவு தகவல்களை வரைபடங்களாக்கி துல்லியமான விபரங் களைக் கொடுத்து முதன்மைத் தளபதிகளின் தாக்குதல் திட்ட மிடல்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தான். இயற்கை யாகவே இவனிடம் இனிமையாகப் பாடும் திறனும், கவிதை யார்க்கும் வல்லமையும் கைகூடியிருந்தது. வனமுகாம்களில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்குகொண்டு கலையாற்றல்களை வெளிப்படுத்தி போராளிகளை மகிழ்விக்கவும் செய்தான். இயக்கத்தில் கலையரசன் எனும் பெயரையும் பெற்றான். சமகாலத்தில் போராயுதத் தளபாடங்களையும், புதிய படைய கருவிகளையும் தன்னுடன் பழக்கப்படுத்தினான். அவற்றின் உச்ச பயன் பாட்டைப் பெறும்வகையில் தன்னை தகவமைத்துக் கொண்டான். தொடர்ந்து பூநகரி - கொக்குத்தொடுவாய் படை முகாம்களின் வேவுகளை எடுத்து அவற்றின் மீதான தாக்குதல்களை உறுதிப்படுத்தினான்.



இப்பொழுது இவன் பல அணிகளை வழிநடத்தும் அணித் தலைமைப் பொறுப்பை வகிக்கத் தொடங்கியிருந்தான்.

சூரியக்கதிர் படை நடவடிக்கை தொடர யாழ்நகரம் கைவிடப்பட, இவன் உள்நின்ற போராளிகளுடன் கலந்திருந்தான். இவனது போராவலைத் தீர்ப்பதற்கு நல்ல வாய்ப்புக்கள் கிடைத்திருந் ததன. ஒருமுறை நடவடிக் கையின் காரணமாக பண்ணைக் கடலினூடு நீந்திக்கொண்டிருந்தான். அப்பொழுது அழற்சியை ஏற்படுத்தக்கூடிய, நச்சுக் கடற் தாவரம் ஒன்றினால் தாக்கப்பட் டிருந்தான். உடல் முழுவதும் தடித்து மூச்சு விடுவதையும் சிரமம் ஆக்கியது. ஒருவாறு சிரமப்பட்டு கரையொதுங்கியவன் ஒரு கிழமைக்கு மேலாக மருத்துவமனையில் மருத்துவ மனையில் பெற்று மீண்டும் களம் சென்றான். முல்லைத்தீவுச் சமர் தொடங்கி விட்டது. “பூட்டோ! பூட்டோ!” என தொலைத் தொடர்பு கருவியில் தளபதி பால்ராஜ் அழைப்பது கேட்கின்றது. ஈழத் தமிழர்களின் தலைவிதியைத் முடிவு செய்யும் திருப்பு முனைத் தாக்குதல் அது. நாங்கள் வென்றே ஆகவேண்டும் உலகிற்கான தமிழீழத்தின் கடற்பாதை திறக்கப்பட்டே ஆக வேண்டும். முகாம் துடைத்தழிப்பை முழுமைப்படுத்தப்பட வேண்டும். அதற்காக வேவில் வரை படத்துறையில், தாக்குதல் பட்டறிவில், நெருக் கடி நேரங்களில் சரியான முடிவெடுக்கும் வல்லமையைப் பலமுறை உறுதிப்படுத் தியிருந்த பூட்டோ கள நிலை கண்காணிப் பாளராகவும், டாங்கிக்கான ஒருங்கிணைப் பாளராகவும் களத்தினுள் இறக்கப்பட் டிருந்தான். இவனது செயற்பாட்டால் பகைமுகாம் வீழ்த்தும் முயற்சி துரிதப்படுத்தப் பட்டது. பெரும்பாலான முகாம் பகுதிகள் வீழ்ந்து விட்டன.

ஒரு கட்டடத்தினுள் பல படையினர் ஒளிந்திருந்து தாக்குதலைத் தொடுத்துக்கொண்டிருந்தனர். அவர்களைச் செயல் முடக்கம் செய்யவேண்டும். பூட்டோ டாங்கியைத் தாக்குதலுக்கு ஆயுத்தம் செய்து அதன் மூலம் சில சூடுகளை வழங்க ஆணையிட்டான். பகைவன் பதுங்கியிருந்த கட்டடம் அப்படியே தகர்ந்து இறங் கியது. பெரும்பாலான படையினர் கொல்லப்பட்டு விட்டனர். தொடர்ந்து தாக்குதலை நடாத்தி வெற்றியை



உறுதிப்படுத்தும்படி களமுனைத் தளபதி கட்டளையிட்டார். அவ்வாறு செய்ய முற் படுகையில் அவனது உள்ளுணர்வு அவனை எச்சரித்தது. மீண்டும் சூழலை அளவெடுக்கின்றான். மின்னல் என பொறி தட்டியது. டாங்கிக்குப் பக்கவாட்டாக இருக்கும் மண்ணரணில் இடைவெளி தென்பட்டது. எக்காரணம் கொண்டும் டாங்கி இழக் கப்பட முடியாத இயக்கத்தின் படையச் சொத்து. டாங்கியை வேகமாகப் பின்னகர்த்தி பாதுகாப்பிடம் செல்ல உத்தரவிட்டான். டாங்கி சடுதியாகப் பின்னகரவும் குறித்த மண்ணரண் இடை வெளியூடு ஆர்பிஜி கணை ஒன்று எகிறி வந்து இலக்குத் தவறித் தாண்டிச் செல்லவும் சரியாக இருந்தது. கணநேர முடிவில் இயக்கத்தின் படையப் பலங்களில் ஒன்றைப் பாதுகாத்து தொடர்ந்த பல வெற்றிகளுக்கு அடிப்படைக் காரணமாகின்றான். ஓயாத அலை 1 வெற்றியில் தமிழீழம் திளைத்திருந்தது. தமிழர்கள் தலைநிமிர்ந்து நடக்கத் தொடங்கினர். சிங்களம் தோல்விக்குச் சப்பைக்கட்டுக் கட்டிக்கொண்டிருந்தது. அவ் வேளை முல்லைத்தீவு முகாமில் எடுக்கப்பட்ட பொருட்களின் தவறான பயன்பாடு தொடர்பாக பூட்டோ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டான். அவனை அறிந்திருந்த அனைவருக்குமே விளங்கியிருந்தது. விசாரணை முடிவு அவனைக் குற்றமற்றவன் என நிரூபிக்கும் என. ஆனால் அதுவல்ல இங்கு முக்கியம், அர்ப்பணிப்பும் செயற்திறனும் உள்ள அப்போராளிக்கு இச்செயல் மனவுடைவை ஏற்படுத்தலாம்.

ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாகவே நிகழ்வுகள் நடந்தேறின. விசாரணை முடிவு அவனைக் குற்றமற்றவன் என்றது. “தொடர்ந்து என்னசெய்யப் போகிறீர்கள்? விரும்பினால் தண்டனை இல்லாமல் வீட்ட போகலாம்” என பொறுப்பாளர் தெரிவித்தார். மெலிதாகச் சிரித்தான். “நான் தொடர்ந்து இயக்கத்தில் இருக்கிறன்” என கூறினான். அப்பொழுது பொறுப்பாளர் அப்பச் சரி வரிப்புலி சீருடையைப் போடுங்கோ அண்ணை உங்களைச் சந்திக்க வரட்டாம்.” “நான் தவறு செய்யமாட்டன் என்பதைத் தலைவர் நம்பினார். இதுபோதும் சாகும்வரை இயக்கத்தில் இருந்து செயற்படுவதற்கு” என தன்னுள் எண்ணியவன் தலைவரைச் சந்தித்தபின் தொடர்ந்து களப்பணியாற்றுகின்றான். பல மாதங்களுக்கு முன்னர் கரும்புலி அணியில் சேர்வதற்கு விருப்பம் தெரிவித்துக் கடிதம் அனுப்பியிருந்தான். அதற்கான அனுமதி கிடைத்திருந்தது. ஆபத்துக்களை கடந்து செய்யப்படும் தனது கடின உழைப்பில் மனநிறைவு கிடைக்காதவன் கரும்புலியாகச் செயற்படுவதில் அதனை அடையலாம் என நம்பினான். தொடர்ந்து கரும்புலிகளுக்கான உடல் உள உறுதிகளை உறுதிப்படுத்தும், தாங்குதிறனைப் பரீட்சிக்கும் பயிற்சிகளைப் பெற்றுத் தன்னைக் கரும்புலி அணித்தலைவர்களுள் ஒருவனாக்கிக்கொள்கிறான்.

இப்பொழுது கரும்புலியாகவும், வேவு வீரனாகவும் தனது பட்டறிவை ஒருங்கிணைத்துச் செயற்படுகின்றான். வரையறைக் குட்பட்ட முறையில் முடிவெடுக்கும் அதிகாரத்துடன் எதிரி முகாம்களினுள் ஊடுருவி இலக்குத்தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். முல்லைத்தீவு வெற்றியைப்போல், முழுமையான வெற்றியைத் தரக்கூடிய புறச்சூழலுடன் அமைந்திருப்பது பூநகரி படைத்தளம். ஏற்கனவே அதனுடன் இவனுக்கிருந்த பரீட்சயம் காரணமாக அதனை வேவு எடுக்கப் புறப்படுகின்றான். பட்டறிவு வாய்ந்த வேவுப்புலிக்கு படைமுகாமொன்றின் காவலரணுக்கு அண்மையாகச் சென்று அதனுள் எட்டிப்பார்ப்பதென்பது திகில் நிறைந்த விருப்பிற்குரிய செயற்பாடு ஆகும். தனது பாதுகாப்பை உறுதிப்படுத்தி ஒரு காவலரணுக்கு உள்ளே எட்டிப் பார்க்கின்றான். இராணுவ நடமாட்டத்தைக் காணவில்லை. அடுத்த காலரணினுள்ளும் சென்று பார்க்கின்றான்.

அதுவும் அவ்வாறே காணப்படுகின்றது. சிறிது நேரத்திற்கு முன்னர்வரை படையினர் இருந்ததற்கான தடயங்கள் காணப்பட்டன. இவனுக்கு ஏதோ ஐயம் ஏற்பட்டு விட்டது. மெல்ல முகாமின் உட்பகுதிக்குள் செல்கின்றான். அம்முகாமின் வெதுப்பகத்தில் நெருப்புத்தணல் காணப்படுகின்றது. ‘வெதுப்பிகளும்’ அவ்வாறே கிடக்கின்றன. ஆள் நடமாட்டம் தான் இல்லை. முழுமையாக விளங்கிவிட்டது. அங்கிருந்தவர்களுக்கான முன்னறிவிப்பு இன்றியே அம் முகாம் பின்வாங்கப்பட்டு விட்டது என்பது. இரவோடு இரவாக பலவாயிரம் படையினர், கடற்படையினர் இருந்த முகாம் வெறுமையாகிவிட்டது. இது எங்களுக்குத் தெரியாமல் இருந்து விட்டது? என தன்னுள் எண்ணியவன் தொடர்பெடுத்து தனது முகாம் பொறுப்பாளருக்கு நிலைமையை அறிவிக்கின்றான். மேலும் உறுதிப்படுத்தும்படி அவர் கேட்க தான் உறுதிப்படுத்தியவற்றைத் தெரிவித்தான். முகாம் பின்வாங்கும் முடிவெடுத்த முலோபாய முடிவுகள் எடுக்கும் எதிரித் தளபதிக்கு பாராட்டுக்களை தெரிவித்தபடி வெளிவருகின்றான். ‘ஜெயசிக்குறு’ படை நட வடிக்கை இறுக்கமாகத் தொடர்கின்றது.

அதனைத் தடம்புரளச் செய்யும் தந்திரோபாய நடவடிக்கையாகவும் போராட்டத்தின் அடுத்த கட்டப் பாய்ச்சலாகவும் கிளிநொச்சி படை முகாம் வீழ்த்தப்பட வேண்டும். இந்நடவடிக்கையின் வெற்றியை உறுதிப்படுத்தவும், வேகப்படுத்தவும் என கரும்புலிகள் போரணியொன்று ஆனையிறவு படைத்தளத்தினுள் ஊடுருவியது. இவர்களின் இலக்காக ஆனையிறவு தளத்தினுள் குழப்பத்தினை ஏற்படுத்துவதன் மூலம் கிளிநொச்சி படையினருக்கான வழங்கலைத் தடுப்பது, கட்டளைகளைக் குழப்புவது என்பன அமைந்திருந்ததன. கொமாண்டோ பாணியிலான உட் தாக்குதல் தொடங்கிவிட்டது. பூட்டோவினால்

> இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு அதிஉயர் பாதுகாப்புடன் பேணப்படும் மாணவளான்பட்டை எனும் இடத்தில் தரையிறங்கும் உலங்குவானூர்தியைத் தாக்கி அழிக்கவேண்டும். பல்வேறு சிரமங்களைத் தாண்டி குறித்த இடம்சென்று பகைவர்களுக்குள் ஓடிச்சென்று அவர்களுக்கு மத்தியில் நின்று அவர்களின் கண் முன்னால் தரையிறங்க முற்பட்ட உலங்கு வானூர்தியை வானில் வைத்தே ‘லோ’ உந்துகணையால் தாக்கியழித்து பயத்திலும் அதிர்ச்சியிலும் உறைந்த நிற்கும் எதிரிகளின் மத்தியில் இவனும் ஏனைய வீரர்களும் தப்பிவந்த செயலானது கரும்புலித் தாக்குதல் வரலாற்றில் புதிய அத்தியாயமாகச் சேர்க்கப்பட்டது.

எதிரி முகாமின் நடுப்பகுதியில் அமைந்திருந்த தொலைத் தொடர்புப் பகுதி செயலிழக்கச் செய்யப்பட்டது. இவனது அணித்தலைவர்கள் வீரச்சாவடைய இவனும் இடது கையில் காயப்பட்டு என்பு முறிவிற்குள்ளாகினான். இதனால் சார்ச்சர் பட்டியை இழுத்துக் கொழுவித் தன்னைத் தானே தகர்த்து அழிக்கும் முயற்சி சாத்திய மற்றுப் போனது. எனவே தப்பிக்கும் முடி வெடுக்கின்றான். உள்ளே காயமடைந்திருந்த ஏனைய வீரர்களையும் வெளிக்கொண்டுவர இவனது தலைமைத்துவம் கை கொடுக்கின்றது. கிளிநொச்சியைக் கைப்பற்றும் அத்தாக்குதல் அப்போது வெற்றியடையாமல் போனது. எனினும் பெரும்பாலான கரும்புலிகள் வெற்றிகரமாக தமது இலக்கை நிறைவுசெய்து தளம் திரும்பியிருந்தனர்.

கை என்பு முறிவுக்காயம் மாறுவதற்காக சில காலம் மருத்துவமனையிலும் முகாமிலும் ஓய்வெடுத்தான். அக்காலப் பகுதியில் தன்னுடன் பணியாற்றி வீரச்சாவடைந்த கரும்புலிகள் பற்றி கவிதைகளையும் இசைப் பாடல்களையும் எழுதி வெளியிட்டிருந்தான். புலிகளின் குரல் வானொலியில் பல கவியரங்குகளில் இவன் குரல் ஒலித்திருந்தது. மீண்டும் பயிற்சிகள் எடுத்து அடுத்த தாக்குதலுக்கு தயாராகினான். மீண்டுமொரு முறை கிளிநொச்சி படைத்தளம் தாக்கியழிக்கப்படும் நடவடிக்கை தொடங்கப்பட்டது. அதற்கு ஆதரவாக இம்முறையும் ஆனையிறவினுள் ஊடுருவியிருந்த கரும்புலிகள் அணியில் பூட்டோ காணப்பட்டான். அப்பொழுது பூட்டோவிற்கு பாம்பு கடித்து விட்டது. நச்சு இரத்தத்தில் கலக்க சாவு இவனை நோக்கி வந்தது. எனினும் பகை முகாமினுள் பற்றையொன்றினுள் வைத்து விசமுறிப்பு மருந்து (ASV) ஏற்றப்பட்டது. மீண்டுமொரு முறை சாவிலிருந்து தப்பித்துக் கொள்ள தமிழீழம் ஒரு பெறுமதியான கரும்புலியை மீளப்பெற்றுக்கொண்டது. அத்திட்டம் வெற்றிபெற கிளிநொச்சி நகரம் விடுவிக் கப்பட, ஓயாத அலைகள் 2 வெற்றி உறுதிப்படுத்தப்படுகின்றது. மீண்டும் கடின தொடர் பயிற்சிகளை மேற்கொள்கின்றான்.

அக்காலத்தில் அவசியம் தேவைப்பட்ட ஒரு வெற்றியைப் பெறுவதற்காக தலைவரின் ஆசிபெற்று நகரும் கரும்புலியணியில், இலக்கின் மீதான தாக்குதல் தொடுக்கும் பொறுப்பை ஏற்று இணைந்துகொள்கின்றான். படையினரால் வல்வளைக்கப்பட்டு அதிஉயர் பாதுகாப்புடன் பேணப்படும் மணவாளன் பட்டை எனும் இடத்தில் தரையிறங்கும் உலங்குவானூர்தியைத் தாக்கி அழிக்க வேண்டும். பல்வேறு சிரமங்களைத் தாண்டி குறித்த இடம்சென்று பகைவர்களுக்குள் ஓடிச்சென்று அவர்களுக்கு மத்தியில் நின்று அவர்களின் கண் முன்னால் தரையிறங்க முற்பட்ட உலங்கு வானூர்தியை வானில் வைத்தே ‘லோ’ உந்துகணையால் தாக்கியழித்து பயத்திலும் அதிர்ச்சியிலும் உறைந்து நிற்கும் எதிரிகளின் மத்தியில் இவனும் ஏனைய வீரர்களும் தப்பிவந்த செயலானது கரும புலித் தாக்குதல் வரலாற்றில் புதிய அத்தியாயமாகச் சேர்க்கப் பட்டது. இடைக்காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் படைய முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை வேவு எடுக்கப் பணிக்கப்பட்டான்.

அங்கு மக்களோடு மக்களாகவும் கரந்துறைந்திருக்கும் ‘கெரில்லா’ வீரனாகவும் செயற்பட்டு பல பெறுமதியான வேவு தகவல்களைச் சேகரித்திருந்தான். களங்களினுள் செல்லும் போது முன்னும் களம் விட்ட கலும்போது இறுதியாகவும் வெளி வருவது இவனது இயல்பான பண்பு. இவன் தலைமையில் சேகரிக்கப்பட்ட தகவல்களுடன் வன்னித் தளம் திரும்புமாறு பணிக்கப்பட்டான். இவர்களுக்கென ஒரு மீன்படி படகு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதில் இவனும் அறிவுக்குமரனும் ஏற முற்படுகையில் சற்று நிதானித்தவன் அத்திட்டத்தைக் கை விடுகின்றான். இவரும் ஒன்றாக போய் ஏதாவது நடந்தால் இவ்வளவு நாளும் கடினப்பட்டு சேகரித்த தகவல்கள் செல்லாக் காசு ஆகிவிடும். ஆதலால் அறிவுக்குமரனை முதலில் போகச் சொல்கின்றான். படகில் ஏறியவனிடம் இரண்டு கைக்குண்டுகளைக் கொடுத்துவிடுகிறான். அந்த துன்பியல் நிகழ்வு நடந்தே விடுகின்றது. எதிரிப் படகுகள் அறிவுக்குரனின் படகை வழிமறித்தன. பகைவன் சோதனையிட முயற்சிக்கையில் அறிவுக்குமரன் குண்டுகளை வெடிக்கவைத்து தன்னையும் படகையும் அழித்துக்கொண்டான்.

பூட்டோ எடுத்த முடிவால் வேவுத்தகவல்கள் பத்திரமாக வன்னித் தளம் வந்து சேர்ந்தது. அவர்களின் கோட்பாட்டின்படி பூட்டோவின் முடிவு முற்றிலும் சரியானது எனினும் உணர்வு ரீதி யாக பூட்டோவை இது பாதிக்கவே செய்தது. அறிவுக்குமரனுக்குப் பதிலாகத்தான் வந்திருக்கலாமோ என அடிக்கடி கூறிக்கொள்வான். ‘கரும்புலிகளின்’ வளர்ச்சிப் போக்கில் இவனது பங்களிப்பின் காரணமாக கரும்புலிகள் தொடர்பான விதிமுறைகளை எழுதுவதிலும் அதனைப் ஆய்வு செய்வதிலும் இயக்கம் இவனை ஈடுபடுத்தலானது. இவன் தனது நடைமுறைச் செயற்பாடுகளினூடாக கோட்பாடுகளை உருவாக்கினான். கரும்புலிகளுக்கான உறுதியுரை, பயிற்சிகள், ஒத்திகைகள், விதிமுறைகள் அடங்கிய மரபு சார் யாப்பை உருவாக்கப் பெரும் பங்களிப்பைச் செய்தான்.

இவனது தொடர் அனுபவமும் செயற்பாடும் காரணமாக கரும்புலிகளுக்கான எண்கள் ஒதுக்கப்படும்போது இவனுக்கு க.1 ஒதுக்கப்பட்டது. அன்று முதல் இவன் ‘நம்பர் வண்’ எனும் குறியீட்டு மொழியில் அழைக்கப்படலானான். பல்வேறு தரத்திலான போராளிகளுடனும் அகவை வேறுபாடுடைய பொதுமக்களுடனும் இவன் பழகும் முறை மாறுபாடுடையது. அந்தந்த அகவைக்காரர்களுடன் அவர்களின் குண இயல்புகளிற்கு ஏற்றவாறு பழகினான். தனது அதிக ஓய்வு நேரங்களை சிறு குழந்தைகளுடனேயே செலவழித்தான். அவர்களுக்குச் ஓவியம் வரையப் பழக்குவதிலிருந்து பரீட்சைகளில் சித்தியடைய என்ன செய்யவேண்டும் என்பது வரை நடைமுறை ஏற்றவகையில் வகையில் சொல்லிக்கொடுப்பான். எந்த நேரமும் இந்த நாட்டிற்காக வெடிக்கக் கூடிய கரும்புலி ஒருவனே தங்களுடன் பழகுகின்றான் என்பது அவர்களுக்குத் தெரிந்தே இருந்தது. எனினும் அதனை இவன் ஒருபோதும் ஒத்துணர்வைப் பெறுவதற்காகப் பயன்படுத்தியதே இல்லை.

ஓயாத அலைகள் 04 வெற்றி பெறுவது அசாத்தியமானது. ஒரு வேவுப்புலி வீரனோ ஒரு கரும்புலி வீரனோ பகை தொடர் காவலரண்களைக் கடந்து உள்நுழைவது முடியாமல் போனது. உள் நிலைமைகளை கண்காணித்து உட்புறமாகத் தாக்குதல் தொடுத்தால் மட்டுமே எதிரி குழப்பமடைவான். பலரால் இயலாமல் போகையில் மீண்டும் பூட்டோ தெரிவானான். கரும்புலிகளால் ஒரு முன்முயற்சி இயலாமல் போனது எனும் சொற்களைக் கேட்கவே அவன் விரும்பவில்லை. பொதி செய்யப்பட்ட சிறு ஆயுதங்களுடனும், உணவுப் பொருட்களுடனும் கடலினுள் இறங்கினான். கரையோரமாக நீண்ட தூரம் நீந்திச் சென்றான். கடற்கரை முழுவதும் படையினரும், கடலில் கடற்படையினரும் அதியுச்ச விழிப்பு நிலையில் நின்றது. கடலினுள் பகைப் படகுகள் சுற்றுக்காவல் செய்த வண்ணம் இருந்தன. கரையேறுவதோ கடலில் ஆழம் செல்வதோ இயலாமல் இருந்தது. மீண்டும் தளம் திரும்புவதை அவன் கற்பனைகூடச் செய்யவில்லை. செய் அல்லது செத்துமடி என்பதுவே இவனது தாரக மந்திரமானது. ஏற்ற சூழலுக்காகக் கடலில் மிதந்த படியே காத்திருக்கலானான்.

பாரங்களைக் குறைப்பதற்காக உணவுப் பொருட்களையும் ஆயுதங்களையும் கழட்டி விடலானான். தொலைத்தொடர்பு

கருவியும் 'GPS'ம் குப்பியும் மட்டுமே அவனிடம் மிஞ்சி யிருந்தது. இரண்டு நாட்களாக கடல் நீரில் மிதக்கலானான். பசியும், தாகமும், கடல் நீரின் உப்புச் செறிவும் அவனைத் துன்புறுத்தின. தண்ணீரில் மிதந்தபடி தண்ணீர் இன்றித் தாகத் தால் தவித்தான். அவனையும் மீறி வெளிவந்த கண்ணீரைத் தண்ணீராகச் சுவைத்தான். தாயையும் தலைவனையும் நினைத்து நினைத்து தாங்குதிறனை வளர்த்து, யுகங்களாகும் கணங்களைக் கழித்தான். பூட்டோ தடயமின்றி வீரச்சா வடைந்து விட்டானோ எனப் பெரும்பாலானோர் கருதத் தொடங் கினர். ஒருவாறு எதிரி முகாமிற்குள் புகுந்துகொண்டான். புற்களில் நனைந்திருந்த பனி நீரை நாக்கால் நக்கி நாக்கிற்கு தண்ணீர் காட்டிக்கொண்டான். உட் சென்றவன் தொடர்பெடுத்து தான் உயிருடன் இருப்பதை உறுதிப்படுத்தினான். அவன் கொடுத்த ஆள்கூற்றுத் தளங்கள் மீது எங்கள் ஆட்லறிகள் வீழ்ந்து வெடிக்கத் தொடங்கின. பத்திற்கு மேற்பட்ட ஆட் லறிகளும் பல பல்குழல் பீரங்கிகளும், ஆயிரம் கோடி ரூபா பெறு மதியான எறிகணைக் களஞ்சியங்களும் அழித்தொழிக் கப்பட்டன.



உணவின்றி, ஆயுதமின்றி, பூஞ்சணம் பிடித்த பூசனிக்காயைத் துண்டுதுண்டாகச் உண்டவாறு, உயிரையும் இயங்கு சக்தி யையும் தக்க வைத்தவாறு பலநாள் பணி தொடர்ந்தான். தனி யான இவன் பகைத் தளத்தினுள் கரும்புயலாகச் சுழன்றான். பெரும் படையணி புகுந்ததாக செயலாற்றி அழிவை ஏற்படுத் தினான். தொலைத் தொடர்பை இடை மறித்ததில் பூட்டோ தனியாகத்தான் செயற்படுகின்றான் என்பதை பகைவன் அறிந் துகொண்டான். இவனைப் பிடிப்பதற்கு பலநூறு இராணுவத் தினரையும் பல உந்துருளி அணிகளையும் களத்தில் இறக்கி களைத்துப் போனான் எதிரி. இறுதியாக இவனை மீட்டுவர இன்னொரு கரும்புலியணி உள்நுழைக்கப்பட்டது. அப் பகுதி முழுவதும் இவனுக்குத் தண் ணிபட்ட பாடாக இருந்ததால் அவர்களையும் அழைத்துக்கொண்டு இருபத்தியாறாம் நாள் இவன் வெளியில் வந்தான். மெலிந்து, நோய்வாய்ப்பட்டு சிறிதளவு நீர் உணவுகளைக்கூட உட்கொள்ள முடியாத அளவிற்கு உதடுகளும் நாக்கும் வெடித்து, எலும்பும் தோலுமாக அவன் வெளி வந்த காட்சி காண்பவர் கண்களைக் கசிய வைத்து. தொடர்ந்து நியூமோனியாக் காய்ச்சலுக்கு உள் ளானான்.

சிலவாரங்களாக மருத்துவமனையில் பண்டுவம் பெற்று மீண்டவன் மீண்டும் பணிக்கு தயாரானான் அக்காலப் பகுதியில் இவன் முள்ளியவளைப் பகுதியில் தங்கியிருப்பதை அறிந்து இவனது தாய் மகனைச் சந்திப்பதற்காக மன்னாரில் இருந்து பேருந்தில் வந்திறங்கினார். அங்கு தென்பட்ட பெண் போராளிகளிடம் "பூட்டோ தங்கியிருக்கும் மருத்துவமுகாம் எது" வென கேட்க "யாரு, "கரும்புலி பூட்டோவா!" என அவர்கள் கேட்டு முகாமிற்கு வழிகாட்டி விட்டனர். தாயும் மகனும் சந்தித்த அந்தவேளை அவர்களுக்கே உரித்தானவை. பல ஆண்டு களாக மகன் கரும்புலி என்பது தாயிற்குத் தெரியும். தாய்க்குத் தெரியும் என்பது மகனிற்கும் தெரியும். ஆயினும் இருவரும் ஒருபோதும் அதுபற்றிக் கதைத்தது இல்லை. மகன் தான்பட்ட கடினங்களைக் கவிதைகளாக எழுதியிருந்தான். அவற்றை வாசித்த அன்னையின் கண்கள் நீர் சொரிந்ததை அருகிருந் தவர்கள் பார்த்தார்கள். அடுத்த பணிக்காக இவன் தயாராகிக் கொண்டிருக்கையில் தலைவரிடம் இருந்து தகவல் வரு கின்றது. உலங்குவானூர்தி தாக்குதல் சம்பவத்தைப் படமாக எடுக்கும்படி பணித்திருப்பதாகவும் அதில் அவன் செய்த பணியை இவனையே நடிக்கும்படியும். விடுதலைப்புலிகள் சொல்லுக்கு முந்திச் செயலை வைத்திருப்பவர்கள். செய்தவற் றையும் சொல்லாமல் விடுபவர்கள். இக் குணவியல் வினால் வரலாறு திரிந்துவிடக்கூடாது என்பதற்காக தாக்குதல் செய் தவனையே நடிக்கச்சொன்னார்கள். வன்னிமண் பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டிருந்த காலம். திரைப்படம் எடுப் பதற்கான போதிய வளங்கள் இல்லை. ஆயுத தளபாடங் களையும், துணைப் நடிகர்களிற்கான தேவையான ஆளணி களையும் இவனே ஒழுங்குபடுத்தி படப்பிடிப்பை விரைவாக் கினான். படப்பிடிப்பின் காரணமாக பல்வேறு தரப்பினர் களுடனும் பழகவேண்டி ஏற்பட்டது. படப்பிடிப்பு நிறைவேறும் நிலையில் மீண்டுமொரு சிறு தவறு ஏற்பட்டது. உள்ளூர் முகவர் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப் படையில் பூட்டோ விளக்கம் கோரலுக்கு உள்ளாக்கப்பட்டான். பலர் எதிர்பார்த்ததற்கு மாறாக தேச நன்மைக்காக உருவாக்கப்பட்ட பொறி முறைக்கு ஒத்து ழைப்பதையும் தனது கடமைகளில் ஒன்றென வெளிப்படுத் தினான். இவன் நடித்த திரைப்படம் "புயல் புகுந்த பூக்கள்" என வரலாற்றுப் பதிவானது. இக்காலப் பகுதியில் வெளிச் சம் பவள இதழில் இவனது உள் நடவடிக்கைகள் பற்றிய ஒரு சம்பவத்தை புயலவன் எனும் பெயரில் எழுதியிருந்தான். தொடர்ந்து தேசத் திற்கான இவன் பணி ஈகத்தின் உச்சம் நோக்கி வேக மெடுத் தது. மறைமுகக் கரும்புலியாகச் செயற்படத் தொடங்கினான். அரசியல் தெளிவும், இலட்சியப் பற்றும், செயல்திறனும், நிதானமும் உள்ள போராளியாக இவன் ஒளிவீசினான். இவனது பன்முகத்திறமை மறை முகக் கரும்புலிகளை பல மடங்காகப் பலம்பெறச் செய்தது. இவனது சில ஆண்டுச் செயற் பாடுகள் வெளித்தெரிய முடியாத வையாகின. ஆனால் தமி ழினம் அதனை உணர்த்து கொண்டிருக்கின்றது. சுதந்திர தமிழீழத்தின் பலமான அடித்தளத்தினுள் இவனது உழைப்பு கலந் திருக்கின்றது. மாவி லாறைச் சாட்டாக வைத்து எதிரி பெரும் போரைத் தொடங் கினான். முகமாலையைத் தாண்டி ஆனையிறவு நோக்கி எதிரி முன்னேறத் திட்டமிட்டிருக்கிறான். சம்பூர் மீது பெரும் படைய அழுத்தத்தைப் பயன்படுத்தினான். படையினரைத் திசைதிருப்பவும் குழப்பவும் வேகமாக நடவடிக் கையில் இறங்கவேண்டிய சூழல் ஏற்பட்டது. பலமுறை தலை வனுக்கு தடைநீக்கியாகச் செயற்பட்ட பூட்டோ இம்முறையும் முதல் தெரிவானன். தலைவருடனும், தளபதிகளுடனும் தொடர் சந்திப்புக்களை மேற்கொண்டான். ஓகஸ்ட் தொடக்க நாட்களில் ஒரு நாள் இரவு இரண்டு மணியளவில் தலைவரிடம் இறுதி விடை பெற்றுக்கொண்டான். மறைமுகக் கரும்புலி மீண்டும் தரைக் கரும்புலியாக யாழ்ப்பாணத்திற்குள் உட்புகுந்தான். பாரிய படையத் திருப்புமுனைச் சாதனைகள் எதிர்பார்க்கப் பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் சில நாட்களில் செய்திவந்தது. "நம்பர் வண்" தொடர்பு இல்லை என. இம்முறையும் தப்பி வருவான் என அவனைத் தெரிந்த



அனைவரும் நம்பி யிருந்தனர்.

ஆனால் பூட்டோ வீரச்சாவு உறுதியான செய்தியுடன் 2006ஆம் ஆண்டு மாவீரர் நாள் கொண்டாடப்பட்டது. ஒரு வேவுப் புலி வீரனை, வரைபடக் கலைஞனை, ஒரு கரும்புலிக் கவிஞனை, பாடலாசிரியனை, எழுத்தாளனை, நடிகனை, உச்சவினைத் திறனுடைய அப்பழுக்கற்ற செயல்வீரனை, போராளிகளுக்கான ஒரு "எடுத்துக்காட்டான வீரனை" பட்டறிவால் உருவான போரியல் ஞானியை, எல்லா வற்றுக்கும் மேலாக தேசத்தையும், தலைவனையும் நேசித்த "நம்பர் வண்" ஐ தமிழீழம் பௌதீக ரீதியாக இழந்துவிட்டது. எனினும் தலைமுறைகள் கடந்து கடத்தப்படும் அவனது செயல் வீச்சுக்களின் விளைவாக சுதந்திர தமிழீழம் விடுதலை பெற்று, வளம்பெற்று தலைநிமிர்ந்து எங் கள் பெயர் சொல்லி வாழும்.

குறிப்பு:- இவனது செயற்பாடுகளில் சிலவற்றை மட்டும் இப்பகுதி கோடிகாட்டுகின்றது. காலம் கைகொடுக்கையில் இவன் வீரகாவியமாக விரிவான்.

நன்றி: விடுதலைப்புலிகள் (தை - மாசி, 2007)
-தூயவன்-

# தமிழீழ செய்திகள்




## கொட்டும் மழையிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆர்ப்பாட்டப்பேரணி

பெப்ரவரி 20, 2022

கிளிநொச்சியில் கொட்டும் மழையிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இன்று ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த பேரணியானது கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு டிப்போ சந்தியில் நிறைவடைந்தது.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 5 ஆண்டு நிறைவடைந்துள்ள நிலையில் குறித்த போராட்டம் ஆர்ப்பாட்ட பேரணியாக இன்று முன்னெடுக்கப்பட்டது.



குறித்த பேரணியில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மக்கள் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

கொட்டும் மழையின் மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மழையில் நனைந்தவாறு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

டிப்போ சந்தியில் கவனயீர்ப்பில் ஈடுபட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் செயலகத்திற்கான மகஜரை வேழன் சுவாமிகளிடம் கையளித்தார்.

போராட்டத்தின்போது ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பகங்களின் சங்க செயலாளர் லீலாதேவி குறிப்பிடுகையில், இன்றைய போராட்டம் நிறைவடைந்தது.

இந்த போராட்டத்திற்காக பல்வேறு தரப்பினருக்கு அழைப்பு விடுத்திருந்தோம். ஆனால் குறித்த அழைப்பினை ஏற்று பலர் இங்கு வருகை தந்திருந்தனர். ஆனால் இன்றைய போராட்டத்தில் பொதுமக்கள் ஆதரவு தந்திருக்கவில்லை.

ஒரு சில அரசியல்வாதிகள் மாத்திரமே வருகை தந்திருந்தனர். இந்த நிலையில் பொதுமக்களிற்கு ஒரு செய்தியை நாங்கள் தருகின்றோம். இந்த போராட்டத்தில் உங்கள் பங்களிப்பு கடந்த காலங்கள் போன்று இல்லை. உங்கள் வீட் டிலும் இதுபோன்று சம்பவங்களும், காணாமல் ஆக்கப் படுதலும் இல்லாதிருக்கவும், பேரப்பிள்ளைகள், அடுத்த சந்ததிக்கு இவ்வாறு நடந்தேறக்கூடாது என்பதற்காகவுமே போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

உங்கள் வீட்டு முற்றத்தில் உள்ள வேப்பம் மரம் அழிக்கப் பட்டு அரச மரம் முளைக்கும்போதுதான் அதனை நீங்கள் உணர்வீர்கள். அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பும் எமக்கு போதாது. உண்மையில் இந்த போராட்டத்தை அவர்கள் முன்னின்று நடாத்தியிருக்க வேண்டும். அவர் கள் தமது ஆதரவாளர்களை அழைத்து வந்து இந்த போராட்டத்தை வலுப்பெற வைத்திருக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டு வவுனியா மாவட்ட சங்க தலைவி குறிப்பிடுகையில்,
எமது உறவுகள் இறந்துவிட்டனர் என்பதாக அரசாங்கம் கூறுகின்றது. யுத்தத்தில் இறந்தவர்களை நாங்கள் கேட்க வில்லை. சரணடைந்த, கையளிக்கப்பட்ட எமது உற வுகளையே நாங்கள் கேட்கின்றோம். அவர்களிற்கு என்ன நடந்தது என்பதை எமக்கு வெளிப்படுத்த வேண்டும். அதற்காகவே நாங்கள் சர்வதேசத்தை நாடி நிக்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

## கையெழுத்து வேட்டை கட்சி சார்பானது இல்லை: மக்கள் சார்பானது?

பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்

பெப்ரவரி 16, 2022



இன்று நாம் முன்னெடுத்துள்ள, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கான கையெழுத்து வேட்டை கட்சி சார்ந்து பார்க்காமல், தமிழ் மக்களின் கோரிக்கையாக பார்க்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ் பேருந்து நிலையத்தில் இன்று ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்து வேட்டையில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று கிளிநொச்சி, அனுராதபுரம், காலி உள்ளிட்ட பல இடங்களில் இந்த கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. எமது தமிழ் மக்களை நசுக்குவதற்காக கொண்டு வரப்பட்ட இந்த சட்டமூலத்தை இல்லாமல் செய்ய வேண்டும். சட்டத்தில் திருத்தம் என்று கூறிக் கொண்டு அவர்கள் சரத்வதேசத்தை திருப்திப்படுத்த பார்க்கின்றனர்.

இந்த சட்டத்தால் பாதிக்கப்படுவது நாமே. நாட்டில் பயங்கரவாதம் இல்லை என்று சொல்லி விட்டு ஆட்சிக்கு வந்தவர்கள். ஆனால் இந்த சட்டத்தை அவர்கள் கைவிடவில்லை. இதை மக்களோடு மக்களாக வெளிப்படுத்துவோம். - என்றார்.

## புதிய அரசியல் அமைப்பு வந்தால் தமிழ் மக்களுக்கு ஒன்றும் இருக்காது - சுரேஸ் ஈ.பி.ஆர்.எல்.எப்.

பெப்ரவரி 16, 2022

அரசு கொண்டு வரும் என சொல்லப்படும் புதிய அரசியல் சாசனத்தில் மாகாண சபைகள் முறைமைகள் இருக்காது என எதிர்பார்ப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் தலைவர் சுரேஸ்பிரேமச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில் இன்று இடம்பெற்ற அனைத்து தமிழ் கட்சிக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எம்மிடம் இருக்கின்ற சிலவற்றை நாம் பாதுகாக்க நினைக்கின்றோம். ஆனால் அரசு தமிழ் மக்களிடம் உள்ள எல்லாவற்றையும் பறிக்க முயற்சி செய்து வருகின்றது.



வடக்கு கிழக்கில் சிங்கள குடியேற்றங்களை நிறுவி, எமது நிலத்தை இல்லாமல் செய்கிறது. இந்த நிலையில் புதிய அரசியல் அமைப்பை கொண்டு வருவதாக சொல்கின்றனர்.

இது வருமா, வராத என்று தெரியாது. ஆனால் அந்த புதிய சட்ட வரைப்பில், இப்போது கொடுத்துள்ள சில அதிகாரம் கூட எமக்கு கிடைக்காது. அதிலும் மாகாண சபை அதிகாரம் முறைமை இல்லாமல் போகலாம்.

இதனால்தான் 13 ஆவது திருத்தம் வேண்டும் என இந்தியாவிடம் கேட்கின்றோம். அவர்கள் தான் ஒப்பந்த பங்குதாரர்கள். ஆகவே தான் அவர்களை கேட்கின்றோம். இன்று வரை எமது தீர்வு தொடர்பில் நாம் இந்தியாவுடன் பேசவில்லை.

ஆகவே, இருப்பை தக்க வைப்பதற்கு நாம் 13வது திருத்தம் வேண்டும் என்கின்றோம். அது தீர்வில்லை. இப்போது மகாவலி மற்றும் தொல்பொருள் திணைக்களம் மூலம் வடக்கு கிழக்கு நிலம் துண்டாடப்படுகிறது.- என்றார்

# கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 05 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் 20.02.2022 இன்று வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் போராட்டம் முன்னெடுப்பு



















# கடந்த வருடம் மே 18ம் திகதி நினைவேந்தல் குறித்த விபரங்களை சமர்ப்பிக்கவேண்டும் – முன்னாள் அரசியல் கைதிக்கு உத்தரவு

பெப்ரவரி 20, 2022

வவுனியாவில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதி ஒருவரிடம் கடந்த மே. 18 இல் அவருடைய வீட்டில் யாரை நினைவேந்தல் செய்தீர்கள் என்பது தொடர்பிலான பெயர் விபரங்களை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் கோரியுள்ளனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் செல்வநாயகம் அரவிந்தன் (ஆனந்தவர்மன்) என்ற முன்னாள் அரசியல் கைதியிடமே பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் விபரம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் அவருக்கு வழங்கப்பட்ட கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை சம்மந்தமாக 2021.05.18 ஆம்




திகதி இனப்படுகொலை தினத்தை நினைவூட்டும் முகமாக அத்தினத்தில் விளக்கு வைத்து இறந்தவர்களுக்கு சமர்பணம் செய்த காரணத்திற்கு பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு வாக்கு மூலம் வழங்கிய போது தனது குடும்ப அங்கத்தவர்களும், நெருங்கிய உறவினர்களும் யுத்தத்தின் மூலம் இறந்து விட்ட காரணத்தினத்திற்காகவே, நான் இந்த தினத்திற்கு விளக்கேற்றி அஞ்சலி அவர்களுக்கு சமர்ப்பணம் செய்தேன் என்று வாக்கு மூலம் கொடுத்து அவ் வாக்கு மூலத்தின் போது யுத்தத்தில் இறந்த குடும்பத்தினரதும், உறவினர்களினதும் விபரங்களை பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு கையளிப்பேன் எனவும் கூறியிருந்தீர்கள்.

ஆகையால் அப்பெயர் பட்டியலை 2022.02.22 ஆம் திகதிக்கு முன்பதாக வவுனியா பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு இறந்து போனவர்களின் முழு விபரங்களையும் கையளிக்குமாறு தகவல் தருகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "தமிழர் உரிமைகள் கண்காணிப்பகத்தின்" (Tamil Rights Watch) மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இரண்டாவது "மக்கள்அமர்வு" மன்னாரில் – 19.02.2022








# தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனிடம் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவில் 5 மணி நேர விசாரணை!

பெப்ரவரி 19, 2022

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனிடம் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவின் கொழும்பில் உள்ள கிருலப்பனை அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (18) சுமார் 5 மணி நேரம் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விசாரணைகளின் போது தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் கடந்த 10 ஆண்டுகளில் நடத்திய போராட்டங்கள், கூட்டங்கள் தொடர்பான பல்வேறு விதமான கேள்விகளை முன் வைத்ததாக அவர் தெரிவித்தார்.

அதில் பல கேள்விகள் வெறும் கற்பனைக் கதையாக



இருந்ததாகவும் வி எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

எனவே இவ்விதமாக மூன்று மாதத்திற்கு ஒரு தடவை விசாரணையை எதிர் கொள்வதாகவும் எமது ஜனநாயக ரீதியான செயற்பாட்டை சவாலுக்குட்படுத்த முனைவது நீதியான ஜனநாயக சட்ட ஆட்சிக்கு உகந்தவையாக தெரியவில்லை என உணர்கிறோம். கவலை அடைகிறோம்.

இவ்விதமாக பல சிவில் சமூக செயற்பாட்டாளர்களை தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்துவது என்பது சமூகத்தின் அடிப்படை நீதி பூர்வமான கருத்துரிமையும் செயல்பாட்டையும் கேள்விக் குட்படுத்தி அடிப்படை வாழ்வுரிமையை வலிந்து நசுக்குவதாகவே எமக்கு புலப்படுகிறது.

அரசு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான அடக்கு முறைச் செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம் என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்

# கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப் பள்ளி ஆகிய பகுதிகளில் பொது மக்கள் பயன்படுத்திய பயிர் செய்கை காணிகள் தனியார் காணிகள் வனவளத் திணைக்களத்தினால் ஆக்கிரமிப்பு

பெப்ரவரி 22, 2022




கரைச்சி பி. செயலாளர் பிரிவில் வனவளத் திணைக்களத்தினால் காணிகள் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்படுவதாக குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வன்னேரிக்குளம், குஞ்சுக் குளம், ஆனை விழுந்தான் மற்றும் பூநகரி முட்கொம்பன் ஆகிய பகுதிகளில் வனவளத் திணைக்களத்தினால் தங்களது காணிகள் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்பட்டு எல்லையிடப்படுவதாக பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப் பள்ளி ஆகிய பகுதிகளில் கடந்த காலங்களில் பொது மக்கள் பயன்படுத்திய பயிர் செய்கை காணிகள் தனியார் காணிகள் வனவளத் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நூற்றாண்டு காலம் பழமை வாய்ந்த மிகப் பழம் பெரும் கிராமங்களான குஞ்சுக்குளம் திக்காய் மண்ணியா குளம் ஆகிய பகுதிகளில் பொதுமக்களுக்கு சொந்தமான 400 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பகுதிகள் வனவளத் திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ளன.

இவ்வாறு எல்லையிடப்பட்ட தமது காணிகளை விடுவித்து தருமாறு பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதே போன்று பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முட்கொம்பன் பகுதியிலும் வனவளத் திணைக்களத்தினால் பொதுமக்கள் பயன்பாட்டில் பயிர்செய்கை மேற்கொள்ளும் காணிகள் எல்லையிடப்பட்டுள்ளன.

இவ்வாறு வனவளத்திணைக்களம் ஆக்கிரமித்துள்ள குறித்த காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிக்கும் கையெழுத்துப் போராட்டத்திற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்

### இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி தலைவர் கி.சேயோன் வேண்டுகோள்

பெப்ரவரி 19, 2022




மக்களின் ஜனநாயத்தினை வலுவாகப் பாதிப்பதும், பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரங்களை அடங்குவதுமான இச்சட்டம் முற்றுமுழுதாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற கையெழுத்துப் போராட்டத்திற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி தலைவர் கி.சேயோன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கெதிரான கையெழுத்து சேகரிக்கும் செயற்பாடு குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கயில் தமிழ் மக்களை மட்டுமல்லாது அனைத்து மக்களையும் அரசாங்கத்தின் கட்டுக்குள் வைத்திருப்பதற்காக பெரும்பான்மை அரசாங்கங்களினால் கையாளப்படுகின்ற சட்டமாக இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் விளங்குகின்றது.

இச்சட்டமானது இந்த நாட்டில் அதிகமாக தமிழர்கள் மீதே கட்டவிழ்த்துவிடப்பட்டது. 1979ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தினால் எத்தனையோ தமிழ் இளைஞர், யுவதிகள் காரணங்கள் எதுவுமின்றி கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அதில் பலர் இன்னும் சிறைகளில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் இளமை, வாழ்க்கை என அனைத்தையும் இழந்து நிற்கின்றார்கள்.

மக்களின் ஜனநாயத்தினை வலுவாகப் பாதிப்பதும், பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரங்களை அடங்குவதுமான இச்சட்டம் முற்றுமுழுதாக இந்த நாட்டில் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் குறியாக இருக்கின்றோம்.

அந்த அடிப்படையிலேயே இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்கக் கோரி கையெழுத்து சேகரிக்கும் செயற்திட்டத்தினை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் ஆரம்பித்துள்ளோம்.

இதன் முதற்கட்ட செயற்பாடாக கடந்த 03.02.2022ம் திகதியன்று முல்லைத்தீவு ஊடக மையத்தில் வைத்து இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாமல் செய்வதற்கான கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அச்செயற்பாடு வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் மிகச்சிறப்பாக நடைபெற்றுவருகின்றது.



தற்போது கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் தற்போது இக்கையெழுத்து சேகரிக்கும் செயற்பாடு இடம்பெறுகின்றது.

எமது எதிர்கால பிள்ளைகளின் எதிர்காலம் கருதியும், அவர்கள் அச்சமில்லா சூழலில் வாழ்வதை உறுதிப்படுத்தவும் அனைத்து மக்களும், பொது அமைப்பினரும், சிவில் செயற்பாட்டாளர்களும், அரசியலாளர்களும் இதில் கலந்துகொண்டு தங்களின் பங்களிப்பினை வழங்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் சார்பில் கேட்டுக் கொள்வதோடு, இந்த செயற்பாடானது உங்கள் பிரதேசங்களில் நடைபெறுகின்ற போது அதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.

# நிரந்தர நியமனம் மற்றும் சம்பள உயர்வினைக்கோரி கரைத்துறைப்பற்று முன்பள்ளி ஆசிரியர்களின் கவனயீர்ப்பு

பெப்ரவரி 21, 2022

முன்பள்ளி ஆசிரியர்களை அரச சேவைக்குள் உள்ளீர்ப்புச்செய்து நிரந்தர நியமனம் வழங்குவதுடன், சம்பள அதிகரிப்பையும் செய்யுமாறு வலியுறுத்தி முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று கோட்டத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் 21.02.2022 இன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவ்வாறு கவனயீர்ப்பில் ஈடுபட்ட முன்பள்ளி ஆசிரியர்கள், 6000ரூபாய் வேதனம் முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் போதுமானதா? எம்மை அங்கீகரித்து நிரந்தர நியமனம் தாருங்கள், போதாது போதாது 6000ரூபாய் போதாது, நியாயமான சம்பளத்தைத் தா. தலை நிமிரவைப்போம் மாணவர்களை, பொருட்களின் விலை அதிகரிப்பு முன்பள்ளி ஆசிரியர் கொடுப்பனவு 6000? வேலைக்கேற்ற ஊதியம் வழங்க வழிசெய்யுங்கள், அடிக்காதே அடிக்காதே முன்பள்ளி ஆசிரியர்களின் வயிற்றில் அடிக்காதே, முன்பள்ளிக் கல்வி முக்கியம் முன்பள்ளி ஆசிரியர்கள் முக்கியமில்லையா? ஆரம்பக்கல்விக்கு அடித்தளமிடும் எமக்கு அரசாங்கம் வழங்கும் ஆதரவு என்ன, உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் தமது கவனயீர்ப்பு நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.

இந் நிலையில் ஆர்ப்பாட்ட இடத்திற்கு வருகைதந்த முல்லைத்தீவு மாவட்ட செயலரிடம், முன்பள்ளி ஆசிரியர்கள் தமது கோரிக்கைகளையும், தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் முன்வைத்ததுடன், தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினையும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் க.விமலநாதனிடம் கையளித்திருந்தனர்.

அதேவேளை ஆசிரியர்களின் கோரிக்கைகளை உரிய தரப்பினருக்கு அனுப்ப தான் நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட செயலாளர் க.விமலநாதன் தெரிவித்தார்.

மேலும் இந்த கவனயீர்ப்பு நடவடிக்கையில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்,









முல்லைத்தீவு பங்குத்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அடிகளார், கரைதுறைப்பற்று பிரதேசசபை உபதவிசாளர் மரியநாயகம் தொம்மைப்பிள்ளை, கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், செல்வபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திலீபன் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.















# பயங்கரவாத தடுப்பு சட்டத்திற்கு எதிராக கல்முனை ,காரைதீவில் கையெழுத்து வேட்டை

பெப்ரவரி 20, 2022








பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்து செய்யக்கோரி நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கையெழுத்து போராட்டத்தின் ஓரங்கமாக ஞாயிற்றுக்கிழமை(20) அன்று அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

காரைதீவு பொதுச்சந்தை மற்றும் கல்முனை பகுதியில் பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்து செய்யக்கோரி குறித்த கையெழுத்து போராட்டமானது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி ஏற்பாட்டில் இடம்பெற்றன.

காரைதீவு பொதுச்சந்தைக்கருகில் இடம்பெற்ற கையெழுத்து போராட்டத்திற்கு இலங்கை தமிழரசு கட்சியின் மாவட்ட அமைப்பாளரும் காரைதீவு தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமைதாங்கியதுடன் கல்முனையில் இடம்பெற்ற கையெழுத்து போராட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணைச் செயலாளர் அ.நிதான்சன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இதன் போது அம்பாறை மாவட்ட த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், மட்டு.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் ,மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன் , தமிழ் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினரும் முன்னாள் மாநகர சபையின் எதிர்கட்சி உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் முன்னாள் செயலாளர் நாயகமும் தற்போதைய உப தலைவருமான ஹென்றி மகேந்திரன், இலங்கைத் தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் தலைவர் எஸ்.சேயோன் , உள்ளிட்ட பிரமுகர்கள் கையெழுத்திட்டனர்.

# சிங்கள நாடாளுமன்றத்துக்குள்ளும் தமிழ் எம்.பிக்கள் போராட்டம்!

பெப்ரவரி 24, 2022

பறிக்காதே பறிக்காதே காணிகளைப் பறிக்காதே" என நாடாளுமன்றத்துக்குள் கோஷம் எழுப்பியும், பதாகைகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் நிலங்கள் பறிக்கப்படுவதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் எம்.பிக்கள் சபைக்குள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெற்ற வன ஜீவராசிகள் சட்ட ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின்போதே தமிழ் எம்.பி.க்கள் சபைக்குள் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன் உரையாற்றிய பின்னரே பதாகைகளுடன் எழுந்த தமிழ் எம்.பி.க்கள், ""பறிக்காதே பறிக்காதே காணிகளைப் பறிக்காதே", "தமிழர் நிலங்களைப் பறிக்காதே"" என கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாடாளுமன்ற உறுப்பினர்களன சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், த.கலையரசன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இதனால் விசனமடைந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரான சி.பி. ரத்நாயக்கவும், இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவும் இந்த ஆர்ப்பாட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு சபைக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்த நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரான அங்கஜன் இராமநாதனிடம் வலியுறுத்தினர்.

அவரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எம்.பி.க்களைக் கட்டுப்படுத்த முயன்றபோதும் அவர்கள் உரத்த குரலில் கோஷங்களை எழுப்பிக்கொண்டிருந்தனர்.

ஜெனிவா அமர்வுக்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னெடுக்கின்றனர் எனவும், தமிழ் மக்கள் மீதி இவர்களுக்கு எந்த அக்கறையும் கிடையாது எனவும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்ற சம்பிரதாயம் தெரியாதுவிட்டால் சுமந்திரன் எம்.பியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுமாறும் அவர் கூறினார்.

இதன்பின்னர் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சி.பி. ரத்நாயக்க மக்களுக்குச் சொந்தமான காணிகள் சுவீகரிக்கப்படாது என வழங்கிய உறுதிமொழியையடுத்து தமிழ்த் தேசியக்

# காணி அபகரிப்பு தொடர்பில் ஜனாதிபதி கவனத்தில் எடுக்கவில்லை!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்



பெப்ரவரி 24, 2022

காணி அபகரிப்பு குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷக்கு பல தடவைகள் அறிவித்த போதிலும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் இன்று போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணி அபகரிப்பு குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஒரு வருடத்திற்கு முன்பாகவே இரண்டு கடிதங்களை அனுப்பியிருந்தார். எனினும் இதுவரையில் இந்த விடயம் குறித்து ஜனாதிபதியிடமிருந்து எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை.

தொடர்ச்சியாக இந்த விடயம் குறித்து எழுத்து மூலமாக அறிவித்தும் சமல் ராஜபக்ஷவுடன் சந்திப்புக்களை மேற்கொண்டும் தொடர்ச்சியாக காணி அபகரிப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.




இதன் காரணமாகவே, இவ்வாறு இன்று போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்ததாக அவர் தெரிவித்தார்.

# மன்னார் மனிதப் புதைகுழி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேரடியாக பார்வையிட அனுமதிக்க வேண்டும்!

பெப்ரவரி 24, 2022



மன்னார் மனிதப் புதைகுழி மீண்டும் அகழ்வு செய்யும் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அதனை நேரடியாக பார்வையிட்டு உண்மைகளை கண்டறிய அனுமதிக்க வேண்டும் என மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க செயலாளர் பி.ஷர்மிளா கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் இன்று (24) வியாழக்கிழமை காலை 11 மணியளவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
-அவர் மேலும் தெரிவிக்கையில்,,,,
மன்னார் மாவட்டத்தில் கடந்த சில வருடங்களுக்கு முன் மன்னார் நுழைவாயிலில் சதொச கட்டிடம் இருந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதற்காக தோண்டப்பட்ட இடத்தில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன.

மன்னார் தீவு பகுதியில் 1990ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் வீடுகளுக்கு வந்து ராணுவம் எமது உறவுகளை பிடித்துச் சென்றுள்ளனர்.

இதனால் குறித்த பகுதியில் மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் எமது உறவுகள் உடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இருந்தோம்.

ஆனால் எமக்காக வாதாட வந்த சட்டத்தரணிகளை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் எமக்காக ஆஜராக கூடாது என்று தடுத்து நிறுத்தினார்கள்.
இதனால் மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆகிய நாங்கள் இவ்வழக்கினை வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தோம்.
அதனடிப்படையில் நேற்று முந்தினம் (22) வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் அவர்களால் எமக்கு நல்லதொரு தீர்ப்பு வழங்கப்பட்டது. இது எமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விடயமாக உள்ளது.

எனினும் நாங்கள் கேட்டுக் கொள்வது எமக்கான உண்மை தன்மை மற்றும் நீதி என்பன எங்களுக்கு கிடைக்க வேண்டும்.

இந்த மனித எச்சங்கள் யாருடையது? என்பதை தெரியப்படுத்த வேண்டும். அத்தோடு அகழ்வு பணியின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய



நாங்கள் அங்கு சென்று அதனை நேரடியாக பார்வையிட்டு கண்டறிவதற்கான சுதந்திரத்தை எங்களுக்குத் தர வேண்டும்.

அத்துடன் எதிர் வரும் மாதத்தில் நடைபெற இருக்கின்ற



ஜெனிவா கூட்டத்தொடரில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக உண்மை மற்றும் நம்பிக்கை தன்மையுடன் கூடிய சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏனெனில் இங்கே நீதிக்காகவும்,காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காகவும் போராடும் தாய் தந்தையர்



100க்கும் மேற்பட்டவர்கள் இறந்து விட்டார்கள்.
நாங்கள் 13 வருடங்களுக்கு மேலாக வீதியிலும் கொட்டில்களிலும் எமது ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறோம். ஆனால் எம்மைக் கண்டு கொள்வார் யாருமில்லை.
ஓ. எம்.பி அலுவலகம் திறக்கப்பட்டது. அவர்கள் எம்மிடம்

# தமிழர் நிலம் அபகரிக்கப்படுவதை கண்டித்து ஜனாதிபதி செயலக/அமைச்சரவை மாநாட்டு மண்டப முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம்

பெப்ரவரி 24, 2022

வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் நில அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் நில அபகரிப்பை தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தியும், மகாவலி எல் வலயம் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பை தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

நில அபகரிப்பை தடுத்து நிறுத்த வலியுறுத்தும் பதாகைகளை ஏந்தியவாறு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய தினம் (பெப்-24) போராட்டத்தை முன்னெடுத்த சமயம் ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவர் ஜனாதிபதியின் செய்தியை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தியதாக அறிய முடிகிறது.

இதன்போது குறித்த அதிகாரி, நில விவகாரம் குறித்து பிரதமரிடம் பேசுமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டதாகவும், அடுத்த வாரத்தில் ஜனாதிபதி, ஜனாதிபதி செயலாளர், அமைச்சர் சமல் ராஜபக்ச ஆகியோருடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பிற்கு அழைப்பதாகவும் தெரிவித்ததாகவும் இதனையடுத்து தமிழ் நாடாளுமன்ற உறுஞப்பினர்களின் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

இப் போராட்டத்தில், தமிழ் மக்கள் கூட்டணியின் க.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம்,

வினோநோகராதலிங்கம், சிவஞானம் சிறிதரன், எம்.ஏ. சுமந்திரன், த.கலையரசன்சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா. சாணக்கியன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.











# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி கையெழுத்துப் போராட்டம் – 26.02.2022






# பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரை போராட்டம் தொடரும்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்

பெப்ரவரி 26, 2022

**"நாட்டில் இன, மத பேதமின்றி சகல மக்களுக்கும் எதிராகவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தப்படும் நிலைமையே உருவாகியுள்ளது. ஆகவே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி நாம் முன்னெடுத்துள்ள போராட்டமும் இறுதி வரையில் கொண்டுசெல்லப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரையில் எமது போராட்டத்தைக் கொண்டு செல்வோம்."** - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எ. சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித ததாவது:-

”பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ச்சியாக முன்வைத்து நாடு பூராகவும் அதற்கான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

ஆரம்பத்தில் இருந்தே தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட இந்தச் சட்டமானது இன்று நாட்டில் சகல மக்களுக்கும் எதிராகப் பயன்படுத்தப்படும் நிலைமையே உருவாகியுள்ளது. ஆகவே, இன, மத, பேதம் இன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையைச் சகலரும் முன்வைத்து வருகின்றனர்.

ஏற்கனவே முன்னைய ஆட்சியில் இந்தச் சட்டத்தை நீக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு அதற்குப் பொது இணக்கம் காணப்பட்ட போதலும் 2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற அரசியல் குழப்பங்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்களுக்குப் பின்னர் நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

எனினும், இன்று நிலைமைகள் சுமுகமாக உள்ள காரணத்தால் இதனை நாம் வலியுறுத்த வேண்டியுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சர்வதேச நாடுகளும், அமைப்புகளும்




தொடர்ச்சியாக வலியுறுத்திக்கொண்டுள்ளன.

இம்முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலும் இந்த விடயங்கள் வலியுறுத்தப்படும். இப்போது நாம் முன்னெடுத்துள்ள போராட்டமும் இறுதி வரையில் கொண்டு செல்லப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரையில் எமது போராட்டத்தைக் கொண்டு செல்வோம்" - என்றார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்ககோரி மன்னார் மாவட்டத்தில் கையெழுத்து போராட்டம் 26.02.2022






# தமிழ் மக்களைச் சாகடிக்கும் பயங்கரவாதச் சட்டம் எதற்கு?

சிறிதரன் எம்.பி.

பெப்ரவரி 27, 2022

தமிழ் மக்களைச் சாகடிக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இன்னும் நீக்கப்படாமல் இருப்பது நாட்டுக்கு மிகப்பெரிய அவமானமாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிடிக்குள் அகப்பட்டு பல்லாயிரக்கணக்கான தமிழ் உறவுகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி கையெழுத்துப் போராட்டம் இன்று கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் சந்தையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துக் செய்யக் கோரி கையெழுத்துப் போராட்டம் பல பகுதிகளிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் நிலையில் இன்று காலை 9.30 மணியளவில் ஸ்கந்தபுரம் பொதுச் சந்தையில் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் பொதுச் செயலாளருமான சுப்பிரமணியம் சுரேன், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் பிரதேச அமைப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பில் தாக்கப்பட்ட ஊடகவியலாளரை வைத்தியசாலையில் சென்று பார்வையிட்டார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

பெப்ரவரி 27, 2022



மட்டக்களப்பில் தாக்கப்பட்ட ஊடகவியலாளரை வைத்தியாசாலையில் சென்று பார்வையிட்டுள்ள தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தாக்குதல் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
தாக்குதலுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளரினை நானும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் உட்பட சந்தித்திருந்தோம்.

மட்டக்களப்பு வந்தாறுமூலை பகுதியில் ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்ட நிலையில் செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பினை சேர்ந்த லட்சுமனன் தேவ பிரதீபன் என்ற ஊடகவியலாளரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கான நிலையில் செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பேருந்து நிலையம் அகற்றுவது தொடர்பாக வந்தாறுமூலை பகுதியில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் மீது கிழக்கு பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பொதுஜன பெரமுன கட்சியை சேர்ந்த ஒருவரே இவ்வாறு தாக்குதல் நடாத்தியுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு வந்தாறுமூலை பகுதியில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்று அகற்றப்பட்டது தொடர்பில் அந்த பஸ்தரப்பு நிலையத்தினை அமைத்தவர்களின் உறவினர்கள் குறித்த பகுதியில் போராட்டம் நடாத்தியுள்ளனர். இந்த நிலையில் அப்பகுதிக்கு வந்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் ஆதரவாளர்கள் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

இதன்போது அப்பகுதியில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளரான லட்சுமனன் தேவ பிரதீபன் மீது அங்கிருந்த பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர் தாக்குதல் நடாத்தியுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் ஆதரவாளர்களின் ஆதரவுடனேயே தன்மீது தாக்குதல் நடாத்தப்பட்டதாக ஊடகவியலாளர் லட்சுமனன் தேவ பிரதீபன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக சுயாதீனமான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் ஊடக

# ரவிராஜ் கிருசாந்தி படுகொலைகளிற்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை

## தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன்

பெப்ரவரி 28, 2022




இலங்கையில் ரவிராஜ் கொலை வழக்கை இந்த அரசாங்கம் கையாளவில்லை. நீதியை வழங்கவில்லை. கிருசாந்தியினுடைய கொலை வழக்கு நீதி என்னும் சரியாக கிடைக்கவில்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தை பழிவாங்குவதற்கான சட்டமாக அரசாங்கம் பயன்படுத்துகிறது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இன்று (28) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்களை ஒழிப்பதற்காக அவர்கள் மீது ஏவப்பட்ட மிகக் கொடூரமான ஒரு சட்டமாகவே அமைந்திருக்கிறது. அதனால் தான் நாங்கள் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை இந்த மண்ணிலே இழந்திருக்கின்றோம்.

பல ஆயிரக்கணக்கான மக்களை இழந்திருக்கின்றோம். பல்லாயிரக்கணக்கான மக்களின் சொத்துக்களை இழந்துள்ளோம். எமது மண்ணில் மாவீரர்களை நினைவு கூர முடியாதவர்களாக, எமது உறவுகளை நினைக்க முடியாதவர்களாக, எங்களுக்காக போராடிய சங்கிலிய மன்னன், பண்டாரவன்னியன், அக்கராயன் மன்னன் ஆகியோரை நினைக்க முடியாதவர்தவர்களாக பயங்கரவாத தடைச் சட்டம் எங்கள் மீது பாய்கிறது.

எதற்கெடுத்தாலும் பயங்கரவாத தடைச்சட்டம் என்ற பெயரில் அப்பாவி இளைஞர்கள் இன்றும் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

யுத்தத்திற்கு பிற்பாடும் பல நூற்றுக்கணக்கனக்கான இளைஞர்கள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் கைது செய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

என்னுடைய காரியாலத்தில் கூட 2013 ஆம் ஆண்டு இலங்கைப் படைகளால் கைக்குண்டுகள், குண்டு செய்கின்ற பொருட்கள் கொண்டு வந்து வைக்கப்பட்டு எமது காரியாலயத்தில் இருந்தவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 13 மாதங்கள் கேட்பார் இல்லாமல் விசாரணையின்றி இருந்தார்கள்.

ஆகவே இந்த கொடூரமான பயங்கரவாத தடைச்சட்டம் இலங்கையில் நீக்கப்பட வேண்டும் என்பதே எங்களது ஏகோபித்த குரல்.

ஒரு உலகம் ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும், மனித சாசனங்களையும் மதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்ற இந்த காலக கட்டத்தில் அந்த உரிமை களையும், சாசனங்களை யும் மீறி இலங்கையி னுடைய இந்த கொடூரமான சட்டம் எங்கள் மீதுது தொடர்ந்து பாய்ந்து கொண்டிருக்கின்றது.

இந்த சட்டத்தை நீக்குமாறு மேற்கொள்ளப்படும் போராட்டம் தொடர்ச்சியாக இன்னும் பல வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டு இந்த சட்டம் நீக்கப்படும் வரை எங்களது நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

அண்மையில் கூட இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி பல கொலைகள், கொள்ளைகளில் ஈடுபட்ட ஈபிடிபியினுடைய நெப்போலியன், மதன்ராஜன் போன்றவர்கள் கூட தப்பி ஒரு நாட்டிற்கு சென்று அங்கு ஒழித்திருக்கின்ற காலத்தில் 20 ஆண்டுகளுக்கு பிறகு இன்ரபோல் பொலிசாரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அரசன் அன்று அறுப்பான் இறைவன் நின்றறுப்பான் என்பதற்கு ஏற்ப ஒரு நியாயம் அந்த நாட்டிலே கிடைத்திருக்கிறது. அந்த நாடு அதனை சிந்திக்கிறது.

அதேபோல் இலங்கையில் ரவிராஜ் கொலை வழக்கை இந்த அரசாங்கம் கையாளவில்லை. நீதியை வழங்கவில்லை. கிருசாந்தியினுடைய கொலை வழக்கு நீதி என்னும் சரியாக கிடைக்கவில்லை.

திருகோணமலையில் விரு லக்சன் என்ற மாணவன் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு தற்போது தான் விடு விக்கப்பட்டான். இவையெலலாம் எமது கண்முன்னே நடைபெறுகின்ற சம்பவங்கள்.

அரசாங்கத்திற்கு வேண்டியவர்கள், அரசாங்கத்தில் இருப்பவர்கள் ஆகியோர் யாரையும் பழிவாங்க வேண்டும் என்றால் அதற்காக அவர்கள் பயன்படுத்துகின்ற சட்டமாக, அரசாங்கம் பழிவாங்குவதற்கான ஒரு சட்டமாக இதனை வைத்திருகிறது. எனவே இதனை நீக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.



# “செய் அல்லது செத்துமடி”

## அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்க போராட்டம்

### தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா

பெப்ரவரி 28, 2022

அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்க நாட்டிலும், புலம் பெயர் தேசங்களிலும் போராட்டத்தை முன்னெடுக் கவுள்ளோம் என முன்னாள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப் பினரும், தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் மாவட்ட அலுவலகத்தை வவுனியா வில் இன்று (28) திறந்து வைத்ததன் பின்னர் உரையாற்றும் போதே அவர் ,வ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,
பயங்கரவாத தடை சட்டத்தை எதிர்த்து நாங்கள் ஏற் கனவே குரல் எழுப்பியிருக்கின்றோம். அதற்கு எதிராக வாக்களித்து இருக்கின்றோம். அவ்வாறான சூழ்நிலை கள் இருந்தாலும் இப்பொழுது இயக்க ரீதியாக எதிர்ப்பை முன்னெடுத்திருக்கின்றோம்.

நாங்கள் இப்போது தீர்மானம் எடுத்திருப்பது எங்க ளுடைய நிலத்தை நாங்கள் ஆழ வேண்டுமாக இருந்தால் எங்கள் மண்ணிலே நில உரிமை அடிப் படையாக இருக்க வேண்டும்.

அது இருக்கிறதா? ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக பல முனைகளில் மகாவலி, தொல்பொருளியல் அடிப் படையில் பௌத்த மயமாக்குவது, சிங்கள மயமாக்குவது, சிங் களவர்களை குடியேற்றுவது , அபிவிருத்தி என்ற போர் வையில் தமிழர்களுடைய நிலங்கள் பறிக்கப்படுவதற்கு சமமாகவும், அதற்கு அப்பாலும் இராணு வங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல ஆயிரக்கணக்கான லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களை கைவசம் வைத்துள்ளது .



இவற்றையெல்லாம் நாங்கள் மதிப்பீடு செய்யப்போகின் றோம்.

நிலத்தினுடைய விடுதலைக்காக விடிவிற்காக அதனை நாங்கள் உறுதிப்படுத்துவதற்காக எங்களுடைய சுதந் திரத்தை நிலை நாட்டுவதற்கு எங்கள் மண்ணை நாங் கள் ஆளுவதற்கு நிலம் எங்களுக்கு இருக்க வேண்டும்.

மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும். இன்று அரசி னாலும், இராணுவத்தினாலும் தொடர்ந்தும் பல காரணங் களை கூறி கைப்பற்றப்படுகின்ற நிலங்களில் சிங்களவர் களை குடியேற்றி எங்களை சிறுபான்மை யானவர்களாக , சுயநல உரிமைக்கு தகுதியற்றவர் களாக நாங்கள் அரசி யல் உரித்தை கோருவதற்கு எங்களை தகுதியற்றவர் களாக ஆக்குகின்ற மிக கொடிய போராட்டத்திலே மிக பெரிய திட்டத்தோடு இன்றைய அரசாங்கம் ஒவ்வொரு ஈடுபட்டு வரு வதுகின்றது அதற்கு நாங்கள் முகம்கொடுத்து பலவித மான நெருக்கடிகளை சந்திப்பதோடு. ஜனநாயக ரீதியில் நிலத்தை பாதுகாக்க போராட வேண்டி இருக் கின்றோம்.

எமது மக்களை பாதுகாக்கலாம் என்பதற்காக சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கின்ற இலங்கை, சர்வதேச சூழ் நிலையில் நிலம் ரீதியாக முழுமையான விபரங் களையும், வரைபடங்களையும் மக்கள் இழந்திருக் கிறார்கள், மக்கள் தங்களுடைய நிலத்தை எவ்வளவு இழந்திருக்கிறார்கள் அந்த நிலங்களை பாதுகாக்கவும், பறிக்கப்பட்ட, அபகரிக்கப்பட்ட, இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மீட்டெடுப்பதற் காகவும் விரைவில் தமிழரசுக்கட்சியின் மாநாடு நடத்தப்பட இருக்கின்றது.

அடுத்த வாரத்தில் இருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் கூகுள் மெப் அடிப்படையில் எவ்வளவு நில வரைபடங் களை கொண்டுள்ளது.

அதற்கு பின்னர் எவ்வளவு நிலங்களை நாங்கள் இழந் திருக்கின்றோம். இராணுவம் எவ்வளவு நிலங்களை கைப்பற்றியிருக்கின்றது, அவ் நிலங்களில் தாங்கள் குடி யுரிமை கொண்டுள்ளவர்களாக, உரித்துடையவர் களாக, அங்கே பண்ணைகளை வைத்திருப்பதும், விவசாயத்தை செய்வதும், தொழில்பேட்டைகளை அமைப்பதும் இவ்வாறு வடக்கு கிழக்கு முழுவதும் சிங் களவர்களை குடியேற்றுவது மட்டுமல்ல இராணுவமே குடியேற்றப்பட்டவர்களாக எங்களுடைய நிலங்களை கைப்பற்றி பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை தங்களுடைய கையிலே வைத்திருக்கிறார்கள்.

## ஈழத்தமிழ் அகதிகளை நாடு கடத்தும் திட்டத்தை கைவிடக் கோரி ஜேர்மனியில் போராட்டம்




பெப்ரவரி 28, 2022

ஜேர்மனியில் தஞ்சம் கோரியுள்ள தமிழர்களை நாடு கடத்தும் திட்டத்தைக் கைவிட கோரியும், தமிழ் இனப் படுகொலைக்கு நீதி கோரியும் ஜேர்மனியில் புலம்பெயர் தமிழர்கள் நாடு தழுவிய அளவில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

50 க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகளை கடந்த ஆண்டு ஜேர்மனி இலங்கைக்கு நாடு கடத்தியது. இந்நிலையில் மற்றொரு தொகுதி தமிழர்களை நாடுகடத்த ஜேர்மன் குடிவரவு துறை தயாராகி வருவதாக கூறப்படுகிறது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஜேர்மன் அதிகாரிகள் நாடு முழுவதும் பாரிய சோதனைகளை நடத்தி 100 தமிழ் அகதிகளை தடுத்து வைத்தனர். வீடுகளை சோதனை யிட்டதுடன், புகலிடக்கோரிக்கையாளர்களை தங்க ளுடைய அனுமதியைப் புதுப்பிக்குமாறு அதிகாரிகள் அழைத்ததாகக் கூறப்படுகிறது.

ஆனால் கட்டடத்திற்கு வந்தவுடன் அவர்கள் பொலிஸ் அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களின் தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்களது உறவினர்கள் மற்றும் அன்புக்குரியவர்களுடன் தொடர் புகொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டது. பின்னர் அவர் கள் பலர் நாடு கடத்தப்பட்டனர். கடந்த ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர் பான பிரேரணையை உருவாக்குவதிலும் இணை அனுசரணை வழங்குவதிலும் ஜேர்மனி முக்கிய பங்கு வகித்தது எனினும் அகதிகளை அந்நாடு இலங்கைக்கு நாடு கடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.









# ஒன்ராறியோவில் மார்ச் 13 முதல் பயணிகள் வாகன உரிமத் தகடு புதுப்பித்தல் கட்டணத்தை முற்றாக நீக்குகின்றது ஒன்ராறியோ அரசு

பெப்ரவரி 22, 2022

ஒன்ராறியோ அரசாங்கம் மார்ச்13 முதல் பயணிகள் வாகனங்கள், இலகுரக பாரவூர்திகள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மொபெட்களுக்கான உரிமத்தகடு புதுப்பித்தல் கட்டணத்தை முற்றாக நீக்குகின்றது.

ஒவ்வொருவாகன ஓட்டுனரும் ஆண்டு தோறும் இந்த உரிமத்தகட்டைப் புதுப்பிப்பதற்காக 120 டொலர்களைச் செலவு செய்ய வேண்டும். இதைப்புதுப்பிப்பதற்காக அரை நாள் வரை நேரத்தைச் செலவுசெய்ய வேண்டியிருக்கும். ஒன்ராறியோ அரசின் இந்த அறிவிப்பு பணத்தையும் நேரத்தையும் சேமிக்க உதவுகின்றது.

போக்குவரத்து அமைச்சர்கரோலின் முல்ரோனி, நுகர்வோர் சேவைகள் அமைச்சர் ரோஸ்ரோமானோ, சிறுவணிகத்துறை இணை அமைச்சர் நினாடாங்ரி ஆகியோர் இணைந்து இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

கடந்த செவ்வாய் கிழமை காலை செய்தியாளர் கூட்டத்தில் பேசிய ஒன்டாரியோ முதல்வர் மார்ச் 2020 முதல் செலுத்தப்பட்ட உரிமத்தகடுபுதுப்பித்தல் கட்டணங்கள் அனைத்தையும் ஒன்டாரியோ மக்களுக்கு அரசாங்கம் திரும்ப வழங்கும் என்றார். இதன் வழியே 7.5 மில்லியனுக்கும் அதிகமான குடியிருப்பாளர்கள் பணத்தைத்திருமபப் பெறுவார்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு, ஓட்டு நர்கள் மாகாணத்துக்குரிய இணையத்தளத்தில், தங்கள் முகவரிசரியாக இருக்கின்றதா என்பதையும் போக்குவரத்துத் தண்டச் சீட்டுகள் அனைத்தும் செலுத்தப் பட்டிருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

வாகனஉரிமையாளர்கள்மார்ச்மாதஇறுதியில்தொடங்கி ஏப்ரல் மாதம் முழுவதும் காசோலையை அஞ்சல் வழியே பெறுவர் என அரசு தெரிவித்துள்ளது.

'அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு செலவீனங்களை அதிகரித்துள்ளது என்பதை நாம் அறிவோம் முதல்வர் கூறியிருக்கின்றார்.

இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய




ஒருபில்லியன் டொலர் இழப்பீடு எனத்தெரிவிக் கப்பட்டுள்ளது. எனினும் முதல்வர் டக் போர்ட் இது மக்களின் பணம், அது அவர்களுக்கே திருப்பிச் செல்கின்றது எனக் குறிப்பிட்டார்.

# பாரவூர்தி ஆர்ப்பாட்டக்காரர் போராட்டத்திற்கு எதிராக கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்தை மீளப் பெற்ரது மத்திய அரசு

பெப்ரவரி 23, 2022

பாரவூர்தி ஆர்ப்பாட்டக்காரர் முன்னெடுத்த போராட்டத்தை முடிவுக்குக்கொண்டு வரும்நோக்கோடு கடந்த 14ம் திகதி கொண்டுவரப்பட்ட அவசரகாலச்சட்டத்தை நீக்குவதாகப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வியாழக்கிழமை அறிவித்தார்.

நிலைமையைக் கவனமாகப் பரிசீலித்தபிறகே, அவசர காலச்சட்டத்தை நீக்கும் முடிவுக்கு வந்ததாகப் பிரதமர் தெரிவித்தார். போராட்டச்சூழல் முற்றாக நீங்க வில்லை எனினும்,

கனேடியர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கதற்போதுள்ள சட்டங்களும் சட்டங்களும் போதுமானவை என்று அரசாங்கம் நம்புவதாகவும் மாகாணமற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்கு ஆதரவாக நாங்கள் தொடர்ந்து இருப் போம் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் வியாழக்கிழமை தொடங்கி ஞாயிறு வரை மேற்கொள்ளப்பட்ட அதிரடி நடவடிக்கைகளில் ஏறக்குறைய 200 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் கிட்டத்தட்ட 400 குற்றச்சாட்டுகளை எதிர்



கொள்கின்றனர்.

கனேடிய பிரதம மந்திரி ஜஸ்ரின்ட் ரூடோ, அவரது அரசு கடந்த வாரம் நடை முறைப்படுத்திய நெருக்கடி நிலைச் சட்டத்தை நீக்குவதாக அறிவித்துள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு வழக்கமான சட்டங்களும், உபவிதிகளும் போதுமானவையெனவும், சட்டவிரோதமான அல்லது ஆபத்தான செயற்பாடுகளை மேற்கொள் வோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குச் சட்ட ஒழுங்குப் பிரிவினர் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

சமஷ்டி அரசு நெருக்கடி நிலையின் கீழ் அறிவித்த ஏற்பாடுகளுக்கு அமைவாக முடக்கப்பட்ட வங்கிக்கணக்குகள் மீதான முடக்கமும் நீக்கப்படுகிறது. ஆனால், நீதிமன்றங்கள், நெறிப்படுத்தும் அமைப்புகள் மற்றும் வங்கிகளின் அதிகாரங்களுக்கு அமைவாகச் சில கணக்குகள் தொடர்ந்து முடக்கப்படக் கூடுமெனத்துணைப் பிரதம மந்திரி கிறிஸ்ரியா பிறீலண்ட் கூறியுள்ளார்.

இதேவேளை, ஒன்றாரியோ மாகாண அரசும், சமஷ்டி அரசுடன் இணைந்து மாகாண நெருக்கடி நிலையை நீக்குவதாக அறிவித்துள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்ட பல முன்னணி அமைப்பாளர்கள் பிரமுகர்கள் இப்போது கம்பிகளுக்குப் பின்னால் உள்ளனர் அவர்களில் ஒருவரான தமராலிச்சிற்கு செவ்வாய்க் கிழமை பிணைமறுக்கப்பட்டது, இதுவரைபிணை பெற்ற கிறிஸ்பார்பர் மட்டுமே பிணை பெற்றுள்ளார்

# கனேடிய அரசு கோவிட் தொடர்பான பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது

பெப்ரவரி 15, 2022

கோவிட் கட்டுப்பாடுகள் எங்கும் தளர்த்தப்படுவதைத் தொடர்ந்து கனடா அரசு கோவிட் தொடர்பான பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ளது.

பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி முதல், கனடாவுக்கு வரும் பயணிகள் ஆண்டிஜன் பரிசோதனை செய்துகொண்டால் போதும், கொரோனா தடுப்பூசி பெறாத சிறு பிள்ளைகள் தங்களைத் தனிமைப்படுததிக்கொள்ளத் தேவையில்லை என அரசு தெரிவித்துள்ளது.

முழுமையாக தடுப்பூசி பெற்ற பயணிகள், கனடா வழியாகப் பயணம் புறபடுவதற்கு முன் ஆன்டிஜன் பரிசோதனை செய்துகொண்டால் போதும் என்றும் கொரோனா தடுப்பூசி பெறாத சிறு பிள்ளைகள் தங்களை 14 நாட்களுக்கு தனிமைப்படுத்திக் கொள்ளத் தேவையில்லை என்றும், கனடாவில் அனைத்து விமான நிலையங்களுக்கும் பெப்ரவரி 28 முதல் மீண்டும் சர்வதேச விமானப் போக்குவரத்து துவங்கும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கனடாவுக்கு வரும் முழுமையாக தடுப்பூரி பெற்ற பயணிகள், தற்போதைய நடைமுறைமையின் படி கொரோனா பரிசோதனைக்காக தேர்வு செய்யப்படும் நிலையில், அவர்கள் பரிசோதனை முடிவு வரும்வரை தங்களை தனிமைப்படுத்திக கொள்ளத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணம் புறப்படுதவற்கு முன் செய்துகொண்ட ஆன்டிஜன் பரிசோதனை, அவர்கள் எந்த நாட்டிலிருந்து வருகிறார்களோ, அந்த நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும் என்பதுடன், அது அவர்கள் கனடா எல்லையை அடைவதற்கு 24 மணி நேரம் முன்பு அல்லது பயணம் புறப்படுவதற்கு 24 மணி நேரம் முன்பு அது செய்யப்பட்டிருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டள்ளது.

இப்போதும் பயணிகள் பயணம் புறப்படுவதற்கு 72 மணி நேரம் முன்பு செய்யப்பட்ட PCR பரிசொதனையையும் பயன்படுத்தவும் அனுமதி உண்டு. என்றாலும், பயணிகள் தங்கள் அவணங்களை எல்லையைக் கடப்பதற்கு முன்பு ArriveCan ஆப்பில் பதிவேற்றம் செய்துதான் ஆகவேண்டும் என்ற விதியில் மாற்றம் இல்லை.

போக்குவரத்துத்துறை அமைச்சரான PCR இம்மாத இறுதியில் பெரும் பாலான சர்வதேச விமான சேவைகள் முழுமையாக ஆரம்பித்துவிடும் என்றும், இனி கனேடியர்கள் அத்தியாவசியமற்ற பயணங்கள் மேற்கொள்வதை தவிர்க்குமாறு அரசு பரிந்துரைக்கப் பொவதில்லை என்றும் கூறியுள்ளார்.

# தமிழக செய்திகள்



## உக்ரேனில் சிக்கி தவிக்கும் தமிழக மாணவ, மாணவிகளை மீட்க பெற்றோர்கள் கோரிக்கை

ஜனவரி19. 2021

உக்ரேன் நாட்டின் மீது ரஷியா நேற்று போர் தொடுத்தது. அந்த நாட்டின் மீது சரமாரியாக குண்டுகள் மற்றும் ஏவு கணை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றது. இந்ததாக் குதல் இன்று 2-வது நாளாகவும் நீடித்து வருகிறது. இதனால் உக்ரைனில் உள்ள மக்கள் அச்சத்தில் உள் ளனர்.

இது போன்று தமிழகத்தை சேர்ந்த ஏராளமான மாணவ-மாணவிகள் அங்கு சிக்கி உள்ளனர். அவர்களை மீட்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நிலையில் பொன்னேரியை சேர்ந்த 2 மாணவிகள் உக்ரைனில் சிக்கி இருப்பது தெரிய வந்துள்ளது.

பொன்னேரியை அடுத்த காட்டாவூர் கிராமத்தை சேர்ந்த ஜெகன் என்பவரது மகள் ரித்திகா மேற்கு உக்ரைனில் மருத்துவம் 3-ம் ஆண்டு படித்து வருகிறார்.

அவர் அங்கு நடந்து வரும் போர் காரணமாக வெளியேற முடியாமல் சிக்கி உள்ளார். இதேபோல் மீஞ்சூரை அடுத்த நெய்தவாயல் பகுதியை சேர்ந்த மோகன பிரியா என்ப வரும் சிக்கி உள்ளார். அவர் கீவ் நகரில் ஏரோனாட்டிக்கல் என்ஜினீயரிங் படித்து வருகிறார்.

தற்போது கீவ் நகரை கைப்பற்ற ரஷிய படைகள் உள்ளே புகுந்துள்ளன. இதனால் அங்கு கடுமையான போர் நடந்து வருகிறது. இதன் காரணமாக மோகன பிரியா வெளியேற முடியாமல் அங்கேயே சிக்கி தவித்து வருகிறார்.

இது போன்று மதுரை மாவட்டம் உசிலம்பட்டி சேர்ந்த ஆதிசிவன் மகன் கபில்நத் மற்றும் போக்குவரத்து சார்பு ஆய்வாளர் பாண்டியன் மகன் தீபன் சக்ரவர்த்தி ஆகிய இருவரும் உக்ரேன் நாட்டிலுள்ள கியூ மற்றும் புஷ்கு ரோத் பகுதியில் கல்லூரி இறுதி ஆண்டு படித்து வருகின் றனர்.



இந்த மாணவர்களும் தாயகம் திரும்ப முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மத்திய மாநில அரசுகள் விரைந்து செயல்பட்டு எங்கள் பிள்ளைகளை பாதுகாப்பாக ஊர் திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## உக்ரேனில் தவிக்கும் தமிழக மாணவர்களை மீட்க இந்திய வெளியுறவுத்துறைக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம்

பெப்ரவரி 24, 2022



யுக்ரேனில் தவித்து வரும் தமிழர்களை அங்கிருந்து உடன டியாக மீட்க வேண்டும் என வலியுறுத்தி இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

அந்த கடிதத்தில், "தமிழகத்தைச் சேர்ந்த சுமார் 5,000 மாணவர்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் யுக்ரேனில் தவித்து வருகின்றனர். அவர்களை அங்கிருந்து உடனடியாக வெளி யேற்றுமாறு உதவி கோரி அவர்களின் குடும்பத்தினரிடமிருந்து நூற்றுக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் எங்களுக்கு வருகின்றன. எனினும், யுக்ரேனில் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக, எங்களுக்கு தகவல்கள் வந்துள்ளன. இந்தியாவுக்கு பாதுகாப்பாக திரும்ப அவர்களுக்கு நம் ஆதரவு தேவை.

இதுதொடர்பாக, 24 மணிநேரமும் இயங்கும் உதவி முகாம் களை தமிழக அரசு அமைத்துள்ளது. மேலும், இதுதொடர்பாக இந்திய அரசு, மாவட்ட நிர்வாகம், குடும்பங்களுடன் ஒன் றிணைந்து செயல்பட அதிகாரியும் நியமிக்கப்பட்டுள்ளார்.

எனவே, யுக்ரேனில் வாழும் தமிழர்களை வெளியேற்ற இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். யுக்ரேனின் பல்வேறு பகுதிகளிலிருந்து அவர்களை வெளியேற்ற 'வந்தே பாரத்' போன்ற சிறப்பு விமானங்களை இயக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்" என ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

## உக்ரேன் – ரஷ்யா நெருக்கடி தமிழ்நாடு இல்லத்தில் உதவி முகாம் திறப்பு

பெப்ரவரி 24, 2022

உக்ரேன் மீது ரஷ்யா இராணுவ நடவடிக் கையை தொடங்கியுள்ளது. இந்நிலையில், உக்ரேன் தொடர்பான தகவல்களை பெற டெல்லி யில் உள்ள தமிழ்நாடு இல்லத்தின் (பொதிகை இல்லம்) வரவேற்பறையில் உதவி முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்பு எண்: 011 21610286

வாட்ஸ்அப் உடன் கூடிய செல்பேசி எண்: 9289516716

**மின்னஞ்சல்:**

ukrainetamils@gmail.com




## உக்ரேனில் வாழும் தமிழர்கள் உதவிக்கு தொடர்பு கொள்ள...

**பெப்ரவரி 24, 2022**

**உக்ரேனில் முழு வீச்சிலான போரை ரஷ்யா தொடங்கியுள்ளது. இந்நிலை யில், யுக்ரேனில் வாழும் தமிழர்கள் உதவிக்கு தொடர்பு கொள்ள தொடர்பு எண், மின்னஞ்சல் உள்ளிட்டவற்றை அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் வெளியிட்டுள்ளது. அந்த விவரங்கள்:**

Tamilians living in Ukraine to Contact
உக்ரைனில் வாழும் தமிழர்கள் உதவிக்கு தொடர்பு கொள்ள

தொலைபேசி / Mobile No : 044-2851 5288
நிகரி / Fax : 044-2859 1135
மின்னஞ்சல் / Email Id : nrtchennai@tn.gov.in / nrtchennai@gmail.com
வலைதளம் / Website : https://nrtamils.tn.gov.in

Facebook : https://www.facebook.com/nrtchennai1038
Twitter : @tamiliansNRT
You Tube : Non Resident Tamils Channel

# தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுத்திடுக: பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்

பெப்ரவரி 23, 2022



செஸ் போட்டியில் உலக சாதனை படைத்த சென்னையை சேர்ந்த 16 வயது சிறுவன் பிரக்ஞானந்தாவை பிரதமர் நரேந்திர மோதி பாராட்டியுள்ளார்.

ஆன்லைனில் நடந்துவரும் ஏர்திங்ஸ் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் எட்டாவது சுற்றில் உலக சாம்பியனான மேக்னஸ் கார்ல்சனைசென்னையை சேர்ந்த 16 வயதான பிரக்ஞானந்தா தோற்கடித்திருக்கிறார்.

தொடர்ந்து மூன்று வெற்றிகளைப் பெற்றிருந்த கார்ல்சன், கறுப்புக் காய்களுடன் ஆடிய பிரக்ஞானந்தாவின் 39 நகர்வுகளில் வீழ்ந்தார்.

அனைத்து வகையான செஸ் வடிவங்களிலும் கார்ல்சனை பிரக்ஞானந்தா வீழ்த்துவது இதுவே முதல் முறையாகும்.

பிரக்ஞானந்தாவைதன் ட்விட்டர் பக்கத்தில் பாராட்டியுள்ள பிரதமர் நரேந்திர மோதி, “பிரக்ஞானந்தா வெற்றி அடைந்ததில் நாம் அனைவரும் மகிழ்ச்சியில் உள்ளோம். முக்கிய மான உலக சாம்பியனான மேக்னஸ் கார்ல்சனை தோற் கடித்து வெற்றியடைந்ததில் பெருமை அடைகிறேன். திறமை வாய்ந்த பிரக்ஞானந்தா வின் எதிர்கால முயற்சிகள் சிறப்பாக அமைய என் வாழ்த்துக்கள்” என பதிவிட்டுள்ளார்.

# நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலின் தற்போதைய நிலமை குறித்து தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ள விபரம்

பெப்ரவரி 22, 2022




தமிழ்நாடு தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ள 1,247 மாநகராட்சி வார்டுகளில் 964 வார்டுகளை திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளும், அதிமுக 156 வார்டுகளிலும், பாஜக 21 வார்டுகளிலும் மற்றவை 110 வார்டுகளிலும் வெற்றி பெற்றிருக்கின்றன

இதே போல் நகராட்சி வார்டுகளில் அறிவிக்கப்பட்ட 3,814 வார்டுகளில், திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் 2,563 வார்டுகளிலும், அதிமுக 636 வார்டுகளிலும் வென்றிருக்கிறது. தேமுதிக 12 வார்டுகளையும், பாஜக 56 வார்டுகளையும், பிஎஸ்பி 3 வார்டுகளையும், மற்றவை 562 வார்டுகளையும் பெற்றிருக்கின்றன.

முடிவுகள் அறிவிக்கப்பட்ட 7,407 பேரூராட்சி வார்டுகளில் திமுக 4388 வார்டுகளையும் அதன் கூட்டணி கட்சிகள் 495 இடங்களையும் கைப்பற்றியிருக்கின்றன. அதிமுக 1,206 வார்டுகளிலும் பாஜக 230 இடங்களையும், பிஎஸ்பி 1 வார்டிலும், தேமுதிக 23 இடங்களையும் மற்றவை 1,259 இடங்களையும் கைப்பற்றியிருக்கின்றன.

# ஈழத்தமிழர்களுக்கு அதிகாரத்தை வழங்க, இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்

## பாமக நிறுவனர் ராமதாஸ்

பெப்ரவரி 28, 2022

ஈழத்தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்குமாறு இலங்கையிடம் இந்தியா கண்டிப்புடன் கூற வேண் டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியிருக்கிறார். மேலும், ஈழத்தமிழர்களின் நலன்களைக் காக்கும் கடமை இந்தியாவுக்கு உண்டு எனவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

ஈழத்தமிழர்கள்!
ஈழத்தமிழர் இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டி வரும் ஐ.நா. மனித உரிமை ஆணையம், இது தொடர்பாக ஐநா மனித உரிமைகள் பேரவையில் கடந்த ஆண்டு மார்ச் 23-ம் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குப் பிறகு ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து புதிய அறிக்கை ஒன்றை நேற்று முன் நாள் வெளியிட்டிருக்கிறது.

இலங்கைப் போரின் போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் எதற்கும் தீர்வு கிடைக்காத நிலையில், இலங்கையில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் நிலைமை மோசமடைந்து இருப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

போர்க்குற்றங்கள்!
போர்க்குற்றங்களை இழைத்தவர்களுக்கு முக்கியப் பதவிகள் வழங்கப்பட்டிருப்பதன் மூலம் அவர்கள் தமிழர்களுக்கு எதிரான குற்றங்களை மேலும், மேலும் செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர்.

குடிமைப் பணிகள் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் 31 அமைப்புகளை இலங்கை இராணுவம் தான் நிர்வகிக்கிறது. காவல் துறையின் பணிகளையும் இராணுவமே மேற்கொள்வதால் வடக்கு மாநிலத்தில் வாழும் தமிழ்ப் பெண்கள் கொடுமையான துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களில் புத்தமத பாரம்பரிய சின்னங்களைக் காப்பது, காடுகளை காப்பது என்ற பெயரில் தமிழர்களுக்கு சொந்தமான ஆயிரத்திற்கும் அதிக ஏக்கர் நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டு நவம்பர் வரை நிலம் சார்ந்து 45 மோதல்கள் நடைபெற்றுள்ளன. இந்து ஆலயங்களில் புத்தர் சிலை சட்டவிரோதமாக நிறுவப்படுகிறது.

அனைத்தும் அதிர்ச்சி!
தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன. தமிழர்கள், இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாக்கப்படுகின்றனர். மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர்கள் தீவிரவாதிகளாக சித்தரிக்கப்படுகின்றனர் என்பன உள்ளிட்ட ஏராளமான குற்றச்சாட்டுகள் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் அதிர்ச்சி அளிப்பவையாகும்.

ஐயமில்லை!
போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது தாங்களாகவே நடவடிக்கை எடுக்கப் போவதாக 2 ஆண்டுகளுக்கு முன் மனித உரிமைப் பேரவையில் வாக்குறுதி அளித்த இலங்கை, அதை நிறைவேற்றவில்லை. மாறாக, தமிழர்களை அச்சுறுத்தி அடிமைப்படுத்தும் பணிகளைத் தான் செய்து வருகிறது. தமிழர்களின் நிலங்களை பறித்து அவர்களின் வாழ்வாதாரத்தை அழிப்பது, அவர்களை அவர்களின் சொந்த பூமியிலிருந்து வெளியேற மறைமுகமாக அழுத்தமும், மிரட்டலும் விடுப்பது போன்ற செயல்களில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறது. பன்னாட்டு விதிகளின்படி இவையும் இனப்படுகொலைக்கு ஒப்பான செயல்கள் தான் என்பதில் ஐயமில்லை.

மன்னிக்க முடியாத குற்றங்கள்!
மன்னிக்க முடியாத அளவுக்கு போர்க்குற்றங்களை இழைத்த ஒரு நாடு, அது குறித்த குற்ற உணர்வே இல்லாமல் தொடர்ந்து இனவெறித் தாக்குதல்களை நடத்துவதை அனுமதிக்க முடியாது. அதிலும் குறிப்பாக உணவுக்கும், எரிபொருளுக்கும் வழி இல்லாமல் தவிக்கும் இலங்கைக்கு உதவிகளை வாரி வாரி வழங்கும் இந்திய அரசு, இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் குற்றச்சாட்டை வேடிக்கை பார்க்கக் கூடாது. இலங்கைக்கு எந்த எச்சரிக்கையும் விடுக்காமல், அதன் இனவெறித் தாக் குதல்களைத் தடுக்காமல் உதவிகளை மட்டும் வழங் குவது இலங்கையின் செயல்களுக்கு இந்தியா துணை போவதாகவே பார்க்கப்படும்.



தந்தை நாடு!
பொதுவான கடமைகளைக் கடந்து ஈழத்தமிழர்களின் தந்தை நாடு என்ற வகையில், ஈழத்தமிழர்களின் நலன்களைக் காக்கும் சிறப்புக் கடமையும் இந்தியாவுக்கு உண்டு. அதனால், ஈழத்தமிழர்களுக்கு எதிரான செயல்களில் ஈடுபடக்கூடாது ஈழத்தமிழர்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று இலங்கையிடம் இந்தியா கண்டிப்புடன் கூற வேண்டும். அதைத் தான் உலகத் தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஐ.நா.மனித உரிமை!
இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையரின் அறிக்கை வரும் மார்ச் 3ஆம் தேதி ஐ.நா. மனித உரிமை பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீது விவாதம் நடத்தப்படவுள்ளது.

இந்த விவாதத்தில் இந்திய அரசின் பிரதிநிதி கலந்து கொண்டு ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை வலி யுறுத்த வேண்டும். ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவதையும், இலங்கை இனச் சிக்கலுக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணவும் தெற்காசிய சக்தி என்ற முறையில் இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# உலக செய்திகள்

# ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் சிறீலங்கா மீது மேலும் குற்றச்சாட்டுக்கள்

பெப்ரவரி 19, 2022

**பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து ஐநா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் கடும் விமர்சனம் – நிலைமாற்றுக்கால நீதி மற்றும் பொறுப்புக்கூறலிற்கான உரிய திட்டங்கள் இல்லை என தெரிவிப்பு.**








உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை என தெரிவிப்பு, ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து கடும் விமர்சனம் காணப்படுவதாகவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளில் முன்னேற்றம் காணப்படாதமை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொலிஸாரினால் தடுத்துவைக்கப்படுபவர்கள் உயிரிழப்பதும் சட்டவிரோத படுகொலைகள் அதிகரித்துள்ளதும் குறித்தும் தெரிவித்துள்ள மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் சுயாதீனமாக இல்லை எனவும் தெரிவித்துள்ளது.

மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை குறித்து மேலும் தெரியவருவதாவது:
ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் 17 பக்க அறிக்கை பயங்கரவாத தடைச்சட்டத்தில் அவசர சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான அவசியம் குறித்து அதிகளவு வலியுறுத்தியுள்ளது.

பொலிஸாரினால் தடுத்துவைக்கப்படுபவர்கள் கொல்லப்படுவதும் சட்டவிரோத படுகொலைகளும் அதிகரித்துள்ளதாக மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசாங்கம் நிலைமாற்றுக்கால நீதி மற்றும் பொறுப்புக்கூறலிற்கான முறையான நம்பகரமான புதிய திட்டமொன்றை உருவாக்கவில்லை என மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்கள் குறித்த விசாரணையில் போதியளவு முன்னேற்றம் ஏற்படவில்லை எனவும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடனான கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் தனிப்பட்ட தலையீடு காரணமாக பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் கடுமையானவையாக மாற்றப்பட்டுள்ளன என ஜெனீவா இராஜதந்திரியொருவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த சர்வதேச விசாரணைக்கான அனுமதியை பரிசுத்த பாப்பரசரிடமிருந்து கோருவதற்காக கர்தினால் மல்கம் ரஞ்சித் வத்திக்கானிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அவர் ஜெனீவாவிற்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.
சிவில் நிர்வாகத்தை இயக்குவதற்காக இராணுவ அதிகாரிகளை நம்பியிருப்பது,குறித்தும் ஐநா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, கடந்த வருட அறிக்கையில் இராணுவ அதிகாரிகளை சிவில் நிர்வாக பணிகளில் இணைப்பதை முடிவிற்கு கொண்டுவரவேண்டும் என்ற வேண்டுகோள் இடம்பெற்றிருந்தது.

கடந்த வருடம் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை இராணுவமயப்படுத்தும் செயற்பாடுகள் தீவிரமாகியுள்ளன என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஊடகவியலாளர் சமுடித்த சமரவிக்கிரமவின் வீட்டின் மீதான தாக்குதல் சிவில் சமூக செயற்பாட்டாளர்செகான் மாலக கமகே கைதுசெய்யப்பட்டமை ஆகிய விடயங்களும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் இடம்பெறலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

சுயாதீன ஊடகங்கள் உட்பட சிவில் சமூகத்தினர் செயற்படுவதற்கான தளத்தை மேலும் அதிகரிக்கவேண்டும் எனவும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது.

இனமத பதட்டங்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஐக்கியநாடுகளிடம் ஏற்கனவே காணப்பட்ட பல தனிப்பட்ட தகவல்களை ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணைக்குழு அடையாளம் கண்டுள்ளது,மேலதிக தகவல் சேகரிப்பு நடவடிக்கைகளிற்கான குழுக்கள் மற்றும் மற்றும் முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்காக அந்த தகவல்களை குற்றவியல் நீதி அடிப்படையிலிருந்து மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் ஆராயவுள்ளது.

தனிநபர்களிற்கு எதிரான தடைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது – அமெரிக்காவின் இராஜாங்க திணைக்களத்தின் தடைகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்த விபரங்கள் செப்டம்பர் அறிக்கையில் இடம்பெறும்.

# உக்ரேன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிரான ஐ.நா. தீர்மானத்தில் வாக்களிக்காத இந்தியா

பெப்ரவரி 26, 2022

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிராக ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோல்வி அடைந்தது. இந்த தீர்மானத்தின் மீது இந்தியா வாக்களிக்கவில்லை. இதற்கான காரணங்கள் இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ரஷ்ய படைகள் உக்ரைன் மீது 3ஆவது நாளாக தாக் குதல் நடத்தி வருகின்றன. உக்ரைன் நாட்டின் ஏராள மான இராணுவ இலக்குகளை ரஷ்ய படைகள் தாக்கி அழித்துள்ளன. உக்ரைனும் பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவிவருகிறது. உக்ரைன் தலைநகரான கீவ்-வை நெருங்கியுள்ள ரஷ்ய படைகள் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

ரஷ்யா உக்ரைன் மீது நடத்தி வரும் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்க ஐ.நா. சபையில் அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்தது. மொத்தமுள்ள 15 நாடுகளில் 11 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்தன. இந்தியா, சீனா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் தீர்மானத்தை புறக்கணித்தன. 11 நாடுகள் ஆதரவு தெரிவித்தபோதிலும் நிரந்தர உறுப்பினருக்கு உள்ள வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை ரஷ்யா தோல்வியுறச் செய்தது.

வாக்கெடுப்பில் பங்கேற்காதது தொடர்பாக ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி டி.எஸ். திருமூர்த்தி அளித்துள்ள விளக்கத்தில், உக்ரைனில் ஏற்பட்டுள்ள சமீபத்திய மாற்றங்களால் இந்தியா மிகவும் கவலையடைந்துள்ளது. வன்முறை மற்றும் விரோதப் போக்கை




உடனடியாக நிறுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

மனித உயிர்களை விலையாக வைத்து எந்த தீர்வையும் எட்ட முடியாது. பேச்சுவார்த்தை பாதையை கைவிட்டது வருத்தம்கொள்ள செய்கிறது. நாம் அந்த பாதைக்கு மீண்டும் திரும்ப வேண்டும். இந்த அனைத்து காரணங்களுக்காகவே தீர்மானத்தை இந்திய புறக்கணித்ததாக கூறியுள்ளார்.

# “நீர்கொழும்பில் சிங்கள மக்களும் அதிகளவில் ஒன்று கூடி பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி கையொப்பமிட்டுள்ளனர்”

## தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

பெப்ரவரி 25, 2022



நீர்கொழும்பில் இடம்பெற்ற பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கையின் போது சிங்கள மக்களும் கலந்துகொண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குவதற்கு தங்கள் ஆதரவை வெளியிட்டனர் என தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.
பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இன்றைய தினம் நீர்கொழும்பு நகர பேருந்து நிலையத்துக்கு முன்பாக அனைத்து மக்களின் பலத்த ஆதரவுக்கு மத்தியில் நடைபெற்றது.

பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் பகுதிகளில் இதற்கு மிகப்பாரியளவில் இதற்கு ஆதரவு கிடைத்திருந்தது. இந்தநிலையிலேயே பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தும் மற்றுமொறு கையெழுத்து பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை நீர்கொழும்பு பேருந்து நிலையத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் மற்றும் எனது தலைமையில் இடம்பெற்றிருந்த குறித்த நிகழ்வில் சிவில் சமூக பிரதிநிதிகள் என பலரும் கொண்டிருந்தனர். குறிப்பாக சிங்கள மக்கள் மற்றும் முஸ்லீம் மக்கள் அதிகளவில் ஒன்றுகூடி பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தும் ஆவணத்தில் கையொப்பமிட்டிருந்தனர்.

“இன்றைய நாள் எமக்கு மிகுந்த மகிழ்ச்சியான நாள். காரணம் சிங்கள மக்களும் அதிகளவில் ஒன்று கூடி பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி கையொப்பமிட்டுள்ளனர்.” – சாணக்கியன்







# ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை சம்பந்தமாக செபஸ்டியன் ரமேஷ் என்ற 48 வயது தமிழர் லண்டன் பகுதியில் கைது

பெப்ரவரி 24, 2022



இவர் ஈபிடிபி அமைப்பின் முன்னாள் உறுப்பினர் என்றும் நெப்போலியன் என்ற இயக்கப் பெயரைக் கொண்டவர் என்றும் லண்டன் போலீசார் தெரிவிக் கிறார்கள். இந்தக் கொலை தொடர்பில் பயனுள்ள தகவல்கள் தெரிந்தவர்கள் யாராவது இருந் தால் அவற்றைத் தந்து உதவ வேண்டுமென்றும் லண்டன் Metropolitan யுத்தக் குற்ற விசாரணை பிரிவு பொதுமக்களை கேட்டிருக்கிறது.

2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி இரவு 8 மணியளவில் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் அவரது இல்லத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டிருந்தார். நிமலராஜன் துப்பாக்கியால் ஐந்து தடவைகள் தலையிலும் நெஞ்சிலும் சுடப்பட்ட நிலையில், நிமலராஜனின் தந்தையார் கத்தியால் குத்தப்பட்டிருந்தார். கொலையாளிகள் வீசிய கைக்குண்டு வெடித்ததில் தாயா ரும் மருமகனும் படுகாயம் அடைந்திருந்தார்கள்.

தமது மகனின் கொலையைத் தொடர்ந்து, தமது உயிருக் கும் ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தில், நிமலராஜனின் பெற்றோர் இலங்கையை விட்டு வெளியேறியிருந்தார்கள். கனடா அவர்களை அரவணைத்துக் கொண்டது. தமது மகனின் படுகொலைக்கு நீதி கேட்டு, அன்னையார் லில்லி தெரேஸ் மயில்வாகனம் தொடர்ச்சியாக இருபது வருடங்களாக போராடி வந்த நிலையில், கடந்த வருடம் கனடாவில் மரணத்தை தழுவியிருந்தார்.

இந்த படுகொலையின் பிரதான சந்தேக நபராக நெப்போலியன் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்காது தலைமறைவாகி இலங்கையை விட்டு தப்பியோடி லண்டனில் வாழ்ந்து வந்தார்.

நெப்போலியன் கைது செய்யப் பட்டிருப்பது பிரிட்டிஷ் நாட்டின் குற்றவியல் சட்டங்களின் கீழல்ல என்பது இங்கே முக்கியமாகக் கவனிக்கப் பட வேண்டும். சர்வதேச குற்ற வியல் நீதிமன்ற 2001ம் ஆண்டு குற்றவியல் 51ம் பிரிவு சட்ட விதிகளின்(Section 51 of the International Criminal Court Act 2001) கீழ் தான் நெப்போலியனைத் தாம் கைது செய்திருப்பதாக லண்டன் போலீசார் தெரிவித்திருக்கிறார் கள். சர்வதேச குற்றவியல் நீதிமன்ற யுத்தக் குற்றவியல் சட்ட விதிகளின் கீழ் பிரிட்டிஷ் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட முதலாவது இலங்கையர் இவராவார்.

ரமேஷ் (நெப்போலியன்) ஏற்கனவே இரட்டை கொலை வழக்கொன்றில் இலங்கை நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட கொலை குற்றவாளியாவார்.

கடந்த 2007ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ந் தேதி நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக்காக சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், ஊர்காவற்துறையிலுள்ள நாரந்தனை என்னும் இடத்தில் வழிமறிக்கப் பட்டு துப்பாக்கியால் சுடப்பட்டும் வாளால் வெட்டப் பட்டும் இரும்புக்கம்பியால் தாக்கப்பட்டுமிருந்தார்கள்.

அந்த தாக்குதலில் யாழ் பல்கலைக்கழக ஊழியர் ஏரம்பு பேரம்பலம் மற்றும் TELO அமைப்பைச் சேர்ந்த யோகசிங்கம் கமல்ஸ்ரோன் ஆகிய இருவரும் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள். அத்துடன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களான மாவை சேனாதிராஜா, சிவாஜிலிங்கம் மற்றும் நடராஜா ரவிராஜ் உட்பட 18 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகி இருந்தார்கள்.



அந்த வழக்கில் நெப்போலியனும் மதன் என்று அழைக்கப்படும் நடராஜா மதனராஜா ஆகியோர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தார்கள்.

அதன் பின்னர் அவர்கள் தலைமறைவாகி இருந்த போதிலும், யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின் முடிவில் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ந் திகதி நெப்போலியன், மதன் உட்பட மூவர் குற்றவாளிகளாகக் காணப்பட்டு இரட்டை மரண தண்டனை தீர்ப்பளிக்கப் பட்டிருந்தது.

நெப்போலியனைப் பிணையில் விடுவித்துள்ள லண்டன் போலீசார், தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். நிமலராஜன் கொலை தொடர்பில் பயனுள்ள தகவல்கள் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் அவற்றைத் தந்து உதவ வேண்டுமென்றும் லண்டன் Metropolitan யுத்தக் குற்ற விசாரணை பிரிவு பொது மக்களை கேட்டிருக்கிறது.

# இந்தியாவின் பதில் என்ன?

நிலாந்தன்

பெப்ரவரி 22, 2022



இந்தியப் பிரதமர் மோடி கொழும்பில் அடுத்த மாதம் நடக்கவிருக்கும் பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு வர இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கட்டுரை எழுதப்படும் இந்நாள் வரையிலும் இந்திய அரசாங்கம் அதனை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை.

அவ்வாறு நரேந்திர மோடி இலங்கைக்கு வருவாராக இருந்தால் இங்கே, அவர் தனக்கு ஒரு கூட்டுக்கோரிக்கையை முன்வைத்த ஆறு கட்சிகளையும் சந்திப்பாரா?

அவர் சந்தித்தால்தான் அந்த ஆறு கட்சிகளும் இந்தியாவை நோக்கி முன்வைத்த கோரிக்கைக்கு ஒரு பொருள் இருக்கும். இல்லையென்றால் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கூறுவதுபோல அந்த ஆறு கட்சிகளும் தன்மானத்தை இழந்து இந்தியாவை சரணடைந்து விட்டன என்ற குற்றச்சாட்டு சரியாகிவிடும். அந்த ஆறு கட்சிகளும் இந்தியாவுக்கு அனுப்பிய கூட்டுக் கோரிக்கை தொடர்பில் எனக்கு கேள்விகள் உண்டு. அந்த ஆவணம் வேறுவிதமாக வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே என்னுடைய நோக்கு நிலையாகும். ஆனால் தமிழ்த் தரப்பில் உள்ள ஒப்பீட்டளவில் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட ஆறு கட்சிகள் இணைந்து அவ்வாறு ஒரு கோரிக்கையை முன்வைத்திருப்பது என்பது ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளை பொறுத்தவரையிலும் மூலோபாய முக்கியத்துவம் மிக்கது. ஏன் அவ்வாறு மூலோபாய முக்கியத்துவம் என்று கூற வேண்டியுள்ளது?

ஏனெனில் ஈழப்போரின் முதலாவது கட்டத்தில் இந்தியா ஈழத் தமிழர்களுக்கு பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கியது. பின்தள வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. சிறிய கெரில்லாப் போராட்டமாக இருந்த ஈழப்போர் முழு அளவிலான ஒரு போராக வளர்ச்சி அடைவதற்கு இந்தியாவின் உதவியே பிரதான காரணமாகும். ஆனால் இந்திய இலங்கை உடன்படிக்கையானது இந்தியாவுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான உறவில் கசப்பான இரத்தம் சிந்தும் இடைவெளிகளை ஏற்படுத்தியது. இந்திய அமைதி காக்கும் படையை நாட்டைவிட்டு அகற்றும் நோக்கத்தோடு புலிகள் இயக்கத்துக்கும் அப்போதிருந்த ஜனாதிபதி பிரேமதாசவுக்கும் இடையில் ஒரு தந்திரோபாய கூட்டு உருவாகியது. அதன் விளைவாக இரண்டு தரப்பும் இணைந்து இந்திய அமைதிகாக்கும் படையை நாட்டை விட்டு வெளியேறுமாறு கேட்டன. எந்த இரண்டு தரப்புக்கும் இடையிலான மோதல்களை சமாதானம் செய்வதற்காக இந்திய அமைதி காக்கும் படை இலங்கைகுள் இறங்கியதோ அந்த இரண்டு தரப்புக்களும் ஒற்றுமைப்பட்டு அமைதிகாக்கும் படையை வெளியே போ என்று கேட்ட பொழுது இந்திய அமைதி காக்கும் படை பின்வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது இந்தியாவை பொறுத்த வரையிலும் அவமானகரமான ஒரு வெளியேற்றம்.

இது நடந்தது 1989 ஆம் ஆண்டு. இது நடந்து கிட்டத்தட்ட முப்பத்தி மூன்று ஆண்டுகளின் பின் எந்த ஒரு தமிழ்த் தரப்பு இந்திய அமைதிகாக்கும் படையை வெளியேறுமாறு கேட்டதோ, அதே தமிழ்த் தரப்பிலிருந்து மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மொத்தம் 11 பிரதிநிதிகள் அடங்கிய மொத்தம் 6 கட்சிகளின் கூட்டு இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக் கோரிக்கையை முன் வைத்திருக்கிறது. அக்கோரிக்கையானது இந்தியாவை மறுபடியும் ஈழத் தமிழர்களுக்கு சார்பாக தலையிடுமாறு அழைக்கும் நோக்கிலானது என்று அக்கட்சிகள் தெரிவிக்கின்றன.

முதலாம் கட்ட ஈழப்போரில் தமிழ் மக்கள் தமது நம்பிக்கைகளை இந்தியாவின் மீது முதலீடு செய்தார்கள். எனது கடந்த வாரக் கட்டுரையில் கூறியதுபோல ஈழத்தமிழர்கள் தமிழகத்துக்கும் தமக்கும் இடையிலான இன, மொழி, பண்பாட்டுப் பிணைப்புக்கூடாகவே இந்திய நடுவண் அரசை நோக்கினார்கள். ஆனால் இந்தியா ஈழத்தமிழர்களை அவ்வாறு அணுகவில்லை. மாறாக தனது பேரரசு நலன்களின் அடிப்படையில்தான் அணுகியது. அதிலிருந்து ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் விரிசல்கள் ஏற்பட்டன. இப்பொழுது கிட்டத்தட்ட முப்பத்தி நான்கு ஆண்டுகளின் பின் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பதினொருவர் இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக்கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள்.

அக்கோரிக்கையின் பெயரால் இந்தியா இலங்கைத் தீவின் அரசியலில் தமிழ் மக்களுக்குச் சார்பாக தலையிடுவதற்கு ஒரு புதிய வாய்ப்பு திறக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகளில் அதிகமானவர்கள் கூட்டாக இந்தியாவை அழைத்திருக்கிறார்கள். அவ்வாறு தமிழ் மக்களின் பெயரால் தலையிடு வதன் மூலம் இந்தியா தனது தெற்கு மூலையில் சீனாவின் பிரசன்னம் அதிகரிப்பதற்கு எதிராக தமிழ் மக்களோடு இணைந்து ஒரு புதிய வியூகத்தை வகுப்பதற்கான வாய்ப்புகளும் திறக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில் சிந்தித்தால், ஆறு கட்சிகளின் கோரிக்கைக்கு இந்தியா காட்டப் போகும் பதில் வினையானது அந்த ஆறு கட்சிகளின் எதிர்கால அரசியலைத் தீர்மானிக்கப் போகிறது. அதோடு இந்தியாவின் தெற்கு மூலையில் சீனாவுக்கு எதிரான புதிய வியூகங்களுக்கான புதிய வாய்ப்புகளையும் அது தீர்மானிக்கும். இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் பலவீனப்பட்டால் அது இந்தியாவின் தெற்கு மூலையைப் பலவீனப்படுத்தும் என்பதே கடந்த பன்னிரண்டு ஆண்டுகால அனுபவம் ஆகும்.

எனவே இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருவாராக இருந்தால் மேற்படி ஆறு கட்சிகளையும் சந்திப்பாரா என்பது முக்கியத்துவம் உடையது. இந்தியா தனது பிராந்தியப் நலன்களை முன்னிறுத்தித்தான் ஈழத் தமிழர்களின் விவகாரத்தை கையாண்டு வருகிறது என்று பெரும்பாலான படித்த ஈழத்தமிழர்கள் நம்புகிறார்கள். இதுவிடயத்தில் ஈழத்தமிழர்களின் நம்பிக்கைகளை வென்றெடுக்கும் விதத்தில் புதிய பிரகாசமான சமிக்கைகளை காட்ட வேண்டிய ஒரு பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்தியா கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தைத்தான் கையாண்டு வருகிறது. அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவின் அடிப்படையிலான உலகப் பொதுவான ஒரு ராஜிய வழமை அது. ஆனால் இவ்வாறு கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தை கையாள முடியாது போகும் பொழுது ஈழத்தமிழர்களை ஒரு கருவியாகக் கையாண்டு இந்தியா கொழும்பை பணிய வைக்கிறது என்பதும் கடந்த நான்கு தசாப்தங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

எனவே இந்தியா தங்களை ஒரு கறிவேப்பிலையாக அல்லது பலியாடாக பயன்படுத்துகிறது என்ற ஈழத் தமிழர்களின் சந்தேகத்தையும் குற்றச்சாட்டுகளையும் கவனத் தில் எடுத்து ஈழத் தமிழர்களுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு. இது தொடர்பில் இந்தியா ஒரு சிறப்புத் தூதுவரை நியமிக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டா? அல்லது திரும்பத் திரும்ப ஒற்றையாட் சிக்குட்பட்ட அரைகுறைத்தீர்வைத்தான் வலியுறுத் துமா? மேலும், யாழ்ப்பாணத்தில் இந்தியாவால் கட்டப்பட்டிருக்கும் கலாச்சார மையம், பலாலி விமான நிலையத் தின் அடுத்தகட்ட அபிவிருத்தி, காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கும் இடையிலான படகுப் போக்குவரத்து போன்ற விடயங்களிலும் நிச்சயமற்ற நிலைமைகள் காணப்படுகினறன. மோடி வருவாராக இருந்தால் இத்திட்டங்கள் அவற்றின் அடுத்த கட்டத்துக்கு விரிவுபடுத் தப்படுமா?

தமிழ்ப்பகுதிகளில் உள்ள மிக உயரமான பொதுக் கட்டிடமாகவும், கட்டி முடிக்கப்பட்ட பின்னரும் நீண்ட நாட்களுக்கு திறக்கப்படாத ஒரு கட்டிடமாகவும் காணப்படும் மேற்படி கலாச்சார மையத்தை திறப்பதில் உள்ள தடைகள் யாவும் கொழும்புக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் உள்ள நெருக்கமின்மையைத்தான் வெளிப்படுத்துகின்றன. அதுபோலவே பலாலி விமான நிலையத்தின் அடுத்தகட்ட அபிவிருத்தியும் இதோ தொடங்குகிறது என்று பலதடவைகள் திகதி அறிவிக்கப்பட்ட போதிலும் எதுவும் நடக்கவில்லை. கடந்த ஆண்டு மார்ச் முதலாம் திகதி தமிழக சட்டமன்ற உறுப்பினரும் பாரதிய ஜனதாவின் தமிழ்ப் பிரமுகருமான வானதி சீனிவாசன் ஒரு ட்விட்டர் செய்தியை வெளியிட்டிருந்தார். அதிலவர் காங்கேசன் துறைக்கும் காரைக்காலுக்கு இடையிலான படகுப் போக்குவரத்துக்கான வர்த்தக உடன்படிக்கை வெற்றிகரமாக எழுதப்பட்டுவிட்டது என்று குறிப்பிட்டிருந்தார். இப்பொழுது கிட்டத்தட்ட ஓராண்டு ஆகிவிட்டது. ஆனால் அந்தப் படகுப் பயணம் மறவன்புலவு சச்சிதானந்தம் மற்றும் வானதி சீனிவாசன் ஆகியோரின் கனவுகளாகவே தொடர்ந்தும் காணப்படுகிறது.

மேற்கண்ட திட்டங்கள் யாவும் ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கனெக்றிவிற்றியைப் பலப்படுத்தும் நோக்கிலானவை. ஆனால் இத்திட்டங்கள் அவற்றின் தொடக்க நிலையிலேயே உள்ளன. அவை அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளுக்கு போகமுடியவில்லை. இது தமிழ் மக்கள் சார்பாக இந்தியா கொழும்பின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாமல் இருப்பதை காட்டுகிறது. மேற்படி திட்டங்களை வெற்றிகரமாக அடுத்தடுத்த கட்டங்களுக்கு விரிவுபடுத்துவதன்மூலம் இந்தியா தனது பலத்தை நிரூபிக்குமா?

எனவே தொகுத்துகூறின் தமிழ்த் தரப்பிலிருந்து இப்பொழுது ஒரு கூட்டு கோரிக்கை - அக்கோரிக்கை தொடர்பாக விமர்சனங்கள் உண்டென்ற போதிலும்- இந்தியாவை நோக்கி முன் வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த் தரப்பு அவ்வாறு கூட்டாகக் கேட்டிருக்கும் ஒரு பின்னணியில், இந்தியா தமிழ்த் தரப்பை நோக்கி எப்படிப்பட்ட சமிக்கைகளை காட்டப்போகிறது என்பது முக்கியத்துவமுடையது. அதாவது இப்பொழுது பந்து இந்தியாவின் கைகளில்தான் உள்ளது .

நன்றி: நிலந்தன்



# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



Allstate. You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



**Raji Linghan**
Ajax Agency
15 Westney Road, N
(416) 817 5060
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316









**Alan Maniam**
Director
**647 299 2450**
235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3
boroscanadianpaper@gmail.com

# "இன்று இரத்தம் வழிந்தோடும் எமது மண் நாளை ஒரு சுதந்திர பூமியாக மாறும்"

**-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் -**



வரலாற்று ரீதியாக ஈழத்தமிழினம் ஒரு அப்பட்டமான இன அழிப்பை எதிர்நோக்கி நிற்கின்றது. தமிழரின் தேசிய அடை யாளத்தைச் சிதைத்துவிடும் நோக்கில் மிகவும் நுட்பமாகத் திட்ட மிடப்பட்டு இந்த இன அழிப்பு நிகழ்கின்றது. இதன் உண்மை யான முகம் பிரச்சாரப் பொய்களால் மூடிமறைக்கப்பட்டிருக் கின்றது. இதனை சர்வதேச சமூகம் இன்னும் புரிந்து கொள்ளாதது எமக்கு வேதனையையும், கவலையையும் தருகின்றது.

தமிழின அழிப்பை அடிப்படையாகக் கொண்ட சிங்கள இன வாதத்தின் அடக்குமுறைக்கு எதிராகவே தமிழீழ மக்கள் அன்று தொட்டு இன்று வரை போராட்டங்கள் நடத்தி வருகின்றார்கள். எமக்கு முந்திய பரம்பரையினர் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக காந்தியடிகளின் அகிம்சைத் தத்துவத்தின் அடிப் படையில் அறவழிப் போராட்டங்கள் நிகழ்த்தினர். அறவழிப் போரின் ஆன்மீகப் பண்பியல்பை சிங்கள அரசு உணர்ந்து கொள்ளவில்லை.

அதற்கு மதிப்பும் அளிக்கவில்லை அகிம்சைப் போராட்டங்களை ஆயுத வன்முறையால் மிருகத்தனமாக நசுக்கியது. அறவழியில், சனநாயக வழியில் தொடங்கப்பட்ட போராட்டங்கள் ஆயுத வன்முறையால் நசுக்கப்பட்ட நிலையில், இனவழிப்பு மேலும் தீவிரமடைந்து தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள் வதற்கு ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை என்ற இக்கட்டான வரலாற்றுக் காலகட்டத்தில்தான் விடுதலைப் புலிகள் இயக்கமும் தமிழிரின் ஆயுதப் போராட்டமும் தோற்றம் கொண்டது.

தன்னாட்சி உரிமைகோரி தமிழீழத்தில் தோற்றம் கொண்ட ஆயுதப் போராட்ட வடிவத்தைப் பயங்கரவாதம் என்றும் பரி வினைவாதம் என்றும் சித்தரித்துவிட சிங்கள அரசு பகீரத முயற்சி செய்கிறது. இத்தகைய தவறான கருத்து இந்திய மக்கள் மத்தியிலும் உலக அரசங்கிலும் பரப்பப்பட்டு வருகிறது. இந்தச் சித்தரிப்பில் எவ்வித உண்மையும் இல்லை. ஈழத்தமிழரின் போராட்ட வடிவத்தை திரிபுபடுத்தி கொச்சைப்படுத்தும் நோக்கில்




இவ்விதம் பொய்ப்பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

நாம் பயங்கரவாதிகளும் அல்லர், பிரிவினைவாதிகளும் அல்லர், ஆயுதக் கலாச்சாரத்தை வழிப்படுத்தும் வன்முறையாளரும் அல்லர். நாம் ஒரு இலட்சியத்திற்காக ஒரு உயரிய குறிக் கோளுக்காகப் போராடுகின்றோம். இன அழிவிலிருந்து எமது இனத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே நாம் போராடுகின் றோம்.

இனக்கொலை வடிவம் எடுத்துள்ள ஆயுத வன்முறைக் கெதிராகவே நாம் ஆயுதமேந்திப் போராட்ட நிர்ப்பந்திக் கப்பட்டுள்ளோம். உயிர் வாழும் உரிமைக்காக உயிரைக் கொடுத்துப் போராட வேண்டிய ஒரு சிக்கலான, நெருக்கடியான ஒரு வரலாற்றுச் சூழலை நாம் எதிர்கொண்டு நிற்கின்றோம்.

இலங்கைத்தீவில் சுதந்திரம் பெற்றதிலிருந்து மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களப் பௌத்த பேரினவாத அரசுகள் தமிழரை அரவணைத்து வாழ விரும்பாது. அடிமைகொண்டு ஆளவிரும்பியதால் தமிழ் மக்கள தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ள விரும்பினர். ஒரு தேசியக் கட்டமைப்பைக் கொண்ட இனம் என்ற ரீதியில் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். அதுவும் அரச ஒடுக்குமுறையானது இன அழிப்பு வடிவமெடுத்த சூழ்நிலையில் தான் எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்காகப் போராடத் துணிந்தார்கள்.

நாம் விடுதலையில் பற்றுக்கொண்டு ஒன்றுபட்டு உறுதிகொண்டு நிற்கின்றோம். இன்றைய பின்னடைவுகளை நாளைய வெற்றிகளாக மாற்றிவிடத் திடசங்கற்பம் பூண்டு நிற்கின்றோம். இன்று இரத்தம் வழிந்தோடும் எமது மண் நாளை ஒரு சுதந்திர பூமியாக மாறும் நம்பிக்கை எமக்கு உண்டு.

(28.12.1995 அன்று வெளியிட்ட அறிக்கையில் இருந்து)


TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE
Affordable and Reliable Services
Experienced Accountants
Presonal & Corporate Tax
Tax Planning / Audit Appeal
HST/GST/WSIB
Bookkeeping & Payroll
UBER/LYFT Tax Filling
CRB/CERB HELP
OFFICE
416-898-8879
CALL FOR APPOINTMENT
416-838-2826
105Consumers Drive.
Whitby ON L1N 1C4
115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6
www.taxanalyst.ca
taxmatters@kannantax.com


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
Furnance, Air Conditioner, Hot Water Tank
Tankless Water Heater, HRV, Fireplace, Attic Insulation,
Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer
up to
$5000
REBATE
0 Down, Rental
Rent - to - Own
10 Years Warranty
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE
ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
geansam@yahoo.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268




# கிளிநொச்சி தாக்குதல்: வெட்டியெடுக்கப்பட்ட "அனிச்சதல்" அல்லது "குதப்பி" [கேக்] துண்டு



ஆனையிறவு — பரந்தன் - கிளிநொச்சி இராணுவ கூட்டுத் தளம் மீண்டுமொருமுறை புலிகளின் பெருந்தாக்குதலுக்கு உட்பட்டுள்ளது. 01.02.1998 அன்றைய தாக்குதலின்போது கிளிநொச்சி படையினரின் முன்னரங்களப் பகுதிகளை உடைத்தெறிந்து புகுந்த புலிகள், நகரின் மையப்பகுதிவரை முன்னேறி - குறித்தளவு நிலத்தையும் மீட்டெடுத்துள்ளனர்.

இந்த நில மீட்பு விடயத்தை இன்றுவரை படைத்தலைமை ஏற்க மறுக்கின்றது. ஆனால் இந்த உண்மைக்கும் அப்பால் கிளிநொச்சி பகுதியும் - பரந்தன் புகுதியும் புலிகளிடம் வீழ்ந்துவிட்டது என்ற வதந்தி தென்னிலங்கையில் பரவியது. இந்தவதந்தியை மறுப்பதற்காக தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களை களமுனைக்கு அழைத்து வரவேண்டிய நிர்ப்பந்தம் படைத் தலைமைக்கு எழுந்தது. பரந்தனும் - கரடிப்போக்கும் படையினரின் பிடியிலேயே தொடர்ந்து உள்ளது ஆனால், கிளிநொச்சி நகரின் மையம் புலிகளின் கையிகளிலேயே உள்ளது என்ற உண்மையை பத்திரிகையாளர்கள் அம்பலப் படுத்தினர்.

தாக்குதலுக்கு முன்னர் படையினர் நிலை கொண்டிருந்த டிப்போ சந்திப்பகுதியில் இருந்து சுமார் 2 கி.மீ. தூரம் பின்வாங்கி, இப்போது கிளிநொச்சி வைத்தியசாலைப் பகுதியை முன்னரங்காக்கி படையினர் அரணமைத்து நிலைகொண்டள்ளனர்.

டிப்போ சந்தியில் இராணுவம் குடிகொண்டிருந்த காலத்தில் அங்கிருந்து சுமார் 3 கி.மீ. முன்னாலிருந்த தொலைத் தொடர்புக்கோபுரம் பகுதிவரை இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியாகவே இருந்தது.

இந்தவகையில், இராணுவம் நிலைகொண்டிருந்த கிளிநொச்சி பகுதியில் 2 கி.மீ. நீள நிலப்பகுதி அன்றைய பெருந்தாக்குதலில் மீட்கப்பட்டுள்ளது என்றாலும், எண்மையில், மொத்தம் 5 கி.மீ. நீள நிலப்பகுதி அத்தாக்குதலின் பின் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது. இதனால் ஜயசிக்குறுப்படையினர் நகரவேண்டிய தூரம் மேலும் 5 கி.மீற்றர்களினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்றைய களநிலவரத்தைப் பொறுத்தவகையில் 5 கி.மீ. தூரத்தைக் கைப்பற்றி — நிலை கொள்வதென்பது ஒரு பற்றாலியனை இழந்தாவது சாதிக்கக் கூடியதென்றா! என்ற கேள்ளி எழுவது இயல்பானதே.

01.02.1998 அனறைய பெருந்தாக்குதலையும் - அடுத்து சில நாட்கள் தொடர்ந்த நேரடிச் சண்டைகளுக்கும் பின்னர், புலிகள் தங்களது மன்னரங்கப் பாதுகாப்பு அரண்களை படையினரின் தற்போதைய முன்னரைங்க நிலைகளுக்கு (வைத்திய சாலைப்பகுதி) மிக அருகில் அமைத்துள்ளனர்.

புலிகள் கைப்பற்றிய கிளிநொச்சி பகுதியை மீண்டும் கைப்பற்றிவிட பத்துத் தடைவகளுக்கும் மேல் படையினர் முயற்சி எடுத்திருந்தனர். ஒர நாளில் மட்டும் ஐந்து தடவைகள் முயன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும். அவர்களது அனைத்து முயற்சிகளும் புலிகளின் தீவிரமான எதிர்த் தாக்குதல்களினால் முறியடிக்கப்பட்டன.




பின்புலமாக ஒரு பாரிய இராணுவதளத்தைக் கொண்டிருந்த போதும், இழந்த 2 கி.மீ. நீள நிலப்பகுதியை மீண்டும் கைப்பற்றமுடியாது போனது, ஒரு புதிய இராணுவயதார்த்தத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அதாவது, இனிமேல், புலிகளின் எதிர்ப்புகளை முறியடித்துக்கொண்டு - முன்னேறி ஒவ்வொரு அங்குல நிலத்தையும் ஆக்கிரமிப்பது என்பது காதாரணவிடயமல்ல என்பதையும் - அதற்காக பலியிடப்போகும் படையினரின் எண்ணிக்கையும் - காதாரணமாக இருக்கமாட்டாது என்பதையும் இந்தப்புதிய இராணுவயதார்த்தம் படைத்தலைமைக்கு உணர்த்தியிருக்கும்.

இந்தப் புதிய இராணுவ பரிமாணத்தைத்தான் மாங்குளம் சண்டைமுனையிலும் படையினர் எதிர்கொள்கின்றனர்.

> 'மெதுவான நகர்வு முறை' என்றும் 'ஊர்ந்து நகர்ந்து கைப்பற்றுதல்' என்றும் 'தகுந்த நேரத்திற்காகக் காத்திருக்கிறோம்' என்றும் சிங்களப் படையின் இயலாமைக்கு இராணுவ விளக்கம் அளிக்கப்படுகின்றது.

புலிகள் பயன்படுத்தும் பெருந்தொகையான எறிகணைகளும் - அவை வெகுதுல்லியமாக எதிரி இலக்குகளை தாக்குவதும் - மற்றும் மரபுப்போர்முறையில் புலிவீரர்கள் பெற்றுள்ள சண்டைத்திறனின் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும் மேற்குறித்த புதிய இராணுவ பரிமாணத்திற்கு அடிப்படைக் காரணிகளாக உள்ளன. இந்த இராணுவ அம்சங்கள் காரணமாக முன்னெப்போதும் இல்லாதவகையில், இப்போது படையினர் - நேரடிச்சண்டைகளில் பெரியளவில் உயிரிழப்புக்களைச் சந்திக்கின்றனர்.

சிங்களத்துப்படைகளுக்கு எதிராக தமிழர் சேனை பெற்றுள்ள இந்த மகிழ்ச்சி தரக்கூடிய மரபுப்போர்ப்பலம் தலைவர் பிரபாகரனின் அயராத முயற்சியாலும் - அவரது இராணுவ நிபுணத்தவத்தினாலும் - அவர் வரைந்து நடைமுறப்படுத்தும் புதிய, புதிய தாக்குதல் தந்திரோபாயங்களினாலும் பெறப்பட்டுள்ளன.

மாங்குளம் முனையிலும் சரி — கிளிநொச்சி முனையிலும் சரி ஜயசிக்குறுய் படையினரின் நகர்வு நடவடிக்கைகள் ஒருவித ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன. ஆயினும், இந்த



**கைப்பற்றப்பட்ட முன்னரங்கப் பகுதி:**
**முற்றத்தில் வந்து மண்வேலியிட்ட சிங்களத்தின் மண்டைக்கனமிறங்க உச்சி பிடித்துலுகக்கியது தமிழர்சேனை.**



LTTE IN KILLINOCHCHI IN 1998

"தெுவான நகர்வுமுறை" என்றும் - "ஊர்ந்து நகர்ந்து கைப்பற்றல்" என்றும் - "தகுந்த நேரத்திற்காகக் காத்திருக்கின்றோம்" என்றும் சிங்களப்படையின் இயலாமைக்கு, இரா ணுவவிளக்கம் அளிக்கப்படுகின்றது.

ஆனால், உண்மையில், ஜயசிக்குறுயின் சமர்த்தந்திரமாக வேகமான நகர்வும் - விரைவான படைநகர்த்தலுமே இருந்தன. ரத்வத்தவின் புகழ்வாய்ந்த காலக்கெடுக்கள் இந்த உண்மையை நிரூபிக்கப்போது மானவை. ரத்வத்த - தளுவத்த குழுவினரின் இயலாமை நிலையை மறைந்து — அதை நியாயப் படுத்துவதற்காக புதிய, புதிய - இராணுவ தந்திரோபாயச் சொற்களை சிங்கள இராணுவவாதிகள் பயன்படுத்துகின்றனர்.

> **கிளிநொச்சிப் பகுதியை மீண்டும் கைப்பற்றிவிட பத்துத் தடவைகளுக்கு மேல் படையினர் முயற்சி எடுத்திருந்தனர். ஒரு நாளில் மட்டும் 5 தடவைகள் முயன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் அவர்களது அனைத்து முயற்சிகளும் புலிகளின் தீவிரமான எதிர்த்தாக்குதல்களினால் முறியடிக்கப்பட்டன.**

இராணுவ ஆசை ஈடேறவில்லை என்பதை களநிலவரம் நிரூபித்துவிட்டது. இராணவத் தின் திட்டப்படி, இப்போது ஜயசிக்குறுய் நகர வில்லை. இதனாலேயே நகர்வுத்தந் திரோ பாயச் சொற்பதங்களை துணைக்கிழுத்து சிங்களத்தின் இராணுவ இயலாமையை மூடிமறைக்க முயல்வதுடன் தனது திட்டப் படியே படைநகர்வு நடைபெறுவதாக படைத் தலைமை பாவனை செய்ய விரும்புகின்றது.

தனது இரஉணுவத்தளங்களின் எல்லைகள் படிப்படியாக விரிவாக்கிக கொண்டு செல்வது தான் சிங்களத்தின் இராணுவ இயல்பு.

இதேவேளை, பாரிய இராணுவத்தளங் களின் ஒரு பகுதி மீது - புலிகள் தாக்குதலை நடாத் தினால் படையாட்களைக் கொன்று -ஆயுதங் களைக் கைப்பற்றுவது அல்லது அழிப்பதுடன் தாக்குதல் நடாத்திய பகுதியை விட்டு பின் வாங்கி விடுவது புலி களின் பொதுவான வழ மையாக இருந்தது.

ஆனால், ஆனையிறவு - பரந்தன் - கிளி நொச்சி இராணுவக் கூட்டுத்தளம் மீதான இத்தாக்குதலின் போது புலிகள் தங்களது வழமையை மாற்றி - கைப்பற்றிய பகுதியிலும் நிரந்தரமாக நிலை கொள்ள மயன்றனர்.

தனது தளங்களின் எல்லைகளை விஸ்தரிப் பதையே இலட்சியமாகக் கொண்ட படைத்தலை மைக்கு தனது தளமொன் றின் ஒரு பகுதியை கைப் பற்றிய புலிகள், அங்கே தொடர்ந்தும் நிலை கொண்டதை ஜீரணிக் முடியவில்லை. இதை ஒரு இராணுவச் சவா லாக சிங்களம் எடுத்தது. இராணுவத்தின் கௌரவப் பிரச்சனை யாகவும் அது மாறியது. புலிகள் விடுத்த இரா ணுவச்சவாலை வெற்றி கொள்ள குடாநாட்டு இராணுவத்தலைமையும் - ஆனையிறவு கூட்டுத்தள படையினரும் கூட்டாக முயன் றனர். ஆனால் அனைத்து முயற்சிகளிலும் படையினர் தோற்றனர். இறுதியில், கைப் பற்றிய பகுதியில் நிலை கொள்வது என்று புலிகள் எடுத்த முடிவை வெற்றிகரமாக நடை முறைப்படுத்தி, ஒரு புதிய இராணுவ சாத னையை புலிகள் நிலை நாட்டியுள்ளனர்.

நன்றி: விடுதலைப்புலிகள் (மாசி — பங்குனி, 1998)

**☆ புலிகளின் தோள் மணை ☆**

| தரம் | தாரகை | புலிச்சின்னம் |
|---|---|---|
| பிரிகேடியர் (அதியரையன்) | அறியில்லை | அறியில்லை |
| கேணல் (பேரரையன்) | 2 | 1 |
| லெப்.கேணல் (இள பேரரையன்) | 1 | 1 |
| மேஜர் (சிற்றரையன்) | - | 1 |
| கப்டன் (கொச்சரையன்) | 3 | - |
| லெப்டினன்ட் (இளயரையன்) | 2 | - |
| 2ம் லெப் (அரையன்) | 1 | - |
| வீரவேங்கை | அறியில்லை | அறியில்லை |

# இல்மனைட்டுக்காக அபகரிக்கப்படும் தமிழர் நிலங்கள்!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

பெப்ரவரி 28, 2022




முல்லைத்தீவு - கொக்கிளாயில், கம்பித்தறை மற்றும் வில்லுவெளி ஆகிய தமிழர்களின் பூர்வீக வயல்நிலங்களை இல்மனைட் அகழ்விற்காக கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தினர் அபகரித்துள்ளனர்.

இவ்வாறு அபகரிக்கப்பட்ட காணிகறை பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரனின் ஆலோசனைப்படி சட்டரீதியாக மீட்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

அதேவேளை தமிழர் தாயகப்பரப்பில் தற்போது அபகரிப்புச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளது எனச் சுட்டிக்காட்டிய ரவிகரன், அந்த அபகரிப்புச் செயற்பாடுகளைத் தடுக்க பன்னாடுகள் தலையீடுசெய்யவேண்டும் எனவும் கோரிகை விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட கொக்கிளாய் தமிழ் மக்களிடம் வழக்குத் தொடர்வதற்கான ஆவணங்களை சேகரிக்கும் செயற்பாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கொக்கிளாய் பகுதியில் எவ்வித அறிவிப்புக்களுமின்றி தங்களுடைய காணிகளை அளவீடு செய்து, அபகரிக்கப் படுவதாக மக்கள் எம்மிடம் செய்த முறைப்பாட்டிற்கு அமைவாக நாம் இங்கு வருகைதந்துள்ளோம்.

ஏற்கனவே இல்மனைட் அகழ்விற்காக கொக்கிளாய் - கம்பித்தறை என்ற பகுதியில் 44 ஏக்கருக்கும் மேற்பட்ட தமிழர்களின் பூர்வீக வயல் காணிகள் அபகரிகப் பட்டுள்ளன.

இந் நிலையில் தற்போது அதற்கு அருகிலுள்ள வில்லுவெளி என்னும் இடத்திலும், 60ஏக்கருக்கும் மேற்பட்ட தமிழர்களின் பூர்வீக வயல் காணிகள் அளவீடுசெய்யப்பட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன.

அந்தவகையிலே கடந்த 09.02.2022 அன்று இவ்வாறு அபகரிக்கப்படுகின்ற பகுதிகளைப் பார்வையிட்டோம். இறுதியாக இம்முறை எமது தமிழ் மக்களால் பெரும்போக நெற்பயிற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைசெய்யப்பட்ட காணிகள், எமது தமிழ் மக்களின் நிலக்கடலை பயிர்ச்செய்கை காணிகள், தென்னங்காணிகள், வில்லுக்குளம் என்று சொல்லப்படக்கூடிய குளம் என, இப்படியாக பரியளவு நிலப்பரப்பு அளவீடுசெய்யப்பட்டு அடையாளப் படுத்தப்பட்டு, அபகரிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டிருந்தன.

இந் நிலையிலே இந்த விடயத்தை சட்டரீயாக அணுகி, எமது தமிழ் மக்களின் இந்த பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற நோக்கில், பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனிடம் ஆலோசனைகளைப்பெற்று, முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தயணியான தனஞ்சயனை அழைத்துவந்து அபகரிப்பு நிலைமைகளை நேரடியாகக் காண்பித்துமிருந்தோம்.

குறிப்பாக கொக்கிளாய் பகுதியில் தமக்குச்சொந்தமான கூடுதல் காணிகள் அபகரிக்கப்படுவதாக மக்கள் தெரிவிகின்றனர்.

கொக்கிளாய் மாத்திரமின்றி கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு, செம்மலைவரையில் கனிய மணல் அகழ்விற்காக காணிகள் அபகரிக்கப்படப் போவதான தகவல்களும் வெளிவருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தவகையில் கொக்கிளாயிலிருந்து செம்மலை வரையிலே கடற்கரையாக 12கிலோமீற்றர் நீளமாகவும், கடற்கரையிலிருந்து உயரமாக 650மீற்றர் அகலமாகவும் காணிகள் அபகரிக்கப்படப்போவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாகாணசபை ஆட்சிக்காலம் இருந்த காலத்திலே, கம்பித்தறைப் பகுதியில் இப்படியான காணிகள் அபகரிக்கவோ, வேலிகள் அமைப்பதற்கோ, கனியமணல் அகழ்விற்கான வேறு எந்த நடவடிக்கைகளையும் அங்கு செய்வதற்கு நாங்கள் இடமளித்திருக்கவில்லை.

வடமாகாணசபை ஆட்சி இருந்தகாலத்தில்கூட இல்மனைட் அகழ்வு செய்வது தொடர்பிலே பேசப்பட்டது.

இந் நிலையில் இந்த இல்மனைட் அகழ்வு செய்வது தொடர்பிலே ஓர் குழு அமைக்கப்பட்டது. அந்த குழுவிலே நானும் இருந்தேன். அப்போது நாங்கள் கடுமையாக வாதாடி எமது தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதற்கு இடமளிக்கவில்லை.

ஆனால் மகாணசபை ஆட்சிக்காலம் முடிவுற்ற சூழலில், 2020ஆம் ஆண்டின் முற்பகுதியில் கம்பித்தறைப் பகுதியில் 44ஏக்கருக்கும் மேற்பட்ட எமது தமிழ் மக்களின் வயல் காணிகளை அபகரித்து வேலிகள் அமைத்ததுடன், அங்கு மணல் அகழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் ஒருபுறம் இடம் பெற்றுக் கொண்டிருக்க, மறுபுறம் மேலதிக காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றது.

இந்த அபகரிப்பு நிலைமைகளைக் கருத்தில்கொண்டு, இந்த தகவலை பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரனிடமும், சட்டத்தரணி தனஞ்சயனிடமும் தெரிவித்து, இவர்களது ஏற்பாட்டில் வழக்கு தொடர்வதற்காக, உரிய ஆவணங்களை மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டோம். அதற்கமைய நாம் விரைவில், அபகரிக்கப்பட்ட எமது மக்களின் காணிகளை விடுவித்துத்தருமாறு நீதிமன்றினை நாடுவதற்கு இருக்கின்றோம்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்திலே கரைதுறைப்பற்று பிரதேசத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி போன்ற இந்தப் பகுதிகளிலும், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்குள்ளும் பல அரச திணைக்களங்களும், அரசோடு தொடர்புடையதுமான பிரிவினரும் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்தவகையில் வன இலாகா, வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, முப்படையினரும் எமது காணிகளை அபகரித்துள்ளனர், கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய சிங்களக்குடியேற்றம், தமிழர்களின் பூர்வீக மணலாற்றினை வெலிஓயாவாக மாற்றி அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சிங்களக்குடியேற்றங்கள், இந் தவரிசையில் தற்போது கனியமணல் கூட்டுத்தாபனமும் இணைந்துகொண்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளை எமது தமிழ் மக்கள் முற்று முழுதாக எதிர்க்கின்றனர். தமக்குத் தமது நிலம்தான் வேண்டும், எமது நிலம்தான் எமது பூர்வீக சொத்து எனக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இந் நிலையில் எமது மக்களிடம் எவ்வித அனுமதிகளையும் பெறாமல், எமது மக்களின் விருப்புக்குமாறாக அவர்களின் பூர்வீக காணிகளை பறித்தெடுக்கும் நடவடிக்கைகள்தான் இங்கு இடம்பெற்றுவருகின்றன.

எனவேதான் நாங்கள் சட்டரிதீயாக இந்தவிடயத்தினைக் கையாண்டு, எமதுமக்களின் காணிகளை மீட்டுக்கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் நீதிமன்றத்தை நாடவுள்ளோம்.

மேலும் எமது பகுதிகளில் வயல்நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன, குளங்கள் அழிக்கப்பட்டு இராணுவக் கட்டமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன, ஆறுகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன, தென்னிலங்கை மற்றும் இந்திய மீனவர்கள் சட்டவிரோத தடைசெய்யப்பட்ட தொழில்களால் எமது கடற்பரப்பினை ஆக்கிரமிக்கின்றனர், எமது தமிழ் மக்களின் உப உணவுப் பயிர்ச்செய்கைக் காணிகளும் அபகரிக்கப்படுகின்றன, இதுதவிர பௌத்த மதம் எமது பகுதிகளில் திணிக்கப்படுகின்றது, பௌத்தமத ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு இடம் பெறும் இந்த கொடுமைஒளை நாம் யாரிடம் தெரிவிப்பது?

இங்கு இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவது பன்னாடுகளுக்குத் தெரியாதா?

இதுவரையில் எம்மோடு கலந்துரையாடிய பன்னாட்டு குழுக்களிடமும், இங்கு இடம்பெறும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறியவந்த அனைத்து பன்னாடுகளைச் சேர்ந்த தரப்புக்களிடமும் நாம் இந்த தகவல்களைத் தெரிவித்திருக்கின்றோம்.

ஆனாலும் சிங்களத்தினுடைய ஆதிக்கமும், ஆக்கிரமிப்புச் செயற்பாடும் தொடர்கின்றது. இவற்றைத் தடுத்துநிறுத்த வேண்டும்.

எமது மக்களுக்குரிய காணிகள் எமதுமக்களுக்கே வழங்கப்படவேண்டும். இவ்வாறான ஆக்கிரமிப்புக்கள் வேண்டாம். எமது மக்களை வாழவிடுங்கள் என்றுதான் நாம் கேட்கின்றோம்.

எமது நிலங்கள் எமக்குவேண்டும், எமது கலாச்சாரங்கள் எமக்குவேண்டும், எமது மதங்கள் இங்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதைத்தான் நாம் கேட்கின்றோம்.

நாம் ஓர் பூர்வீகக் குடிமக்கள் என்றவகையில் எமக்கு நியாயமான தீர்வுகிடைக்க, இந்தவிடயத்தில் பன்னாடுகள் தலையீடுசெய்வேண்டும்- என்றார்.

# அனைத்துலக மகளிர் நாளையொட்டி தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் விடுத்த அறிக்கையிலிருந்து



பங்குனி, 1993 - எரிமலை

ஒரு விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து கொள்வதன் மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பாதையில் வெற்றிபெற முடியும். பெண் விடுதலைக்கு களம் அமைத்துக்கொடுத்திருக்கும் எமது புரட்சி இயக்கத்துடன் பெண்ணினம் அணிசேரும் பொழுது தான் எமது போராட்டமும் முழுமை பெறும்.

எமது சமுதாய அமைப்பில் நிலவிவரும் ஒடுக்குமுறை அழுத்தங்களிலிருந்து பெண்ணினம் விடடுதலைவேண்டி நிற்கின்றது. நீண்ட நெடுங்காலமாக எமது சமூகத்தில் வேரூன்றி வளர்ந்த மூடநம்பிக்கைகளும், இந்த மூடநம்பிக்கைகளிலிருந்து தோற்றம் கொண்ட சமூக வழக்குகளும், சம்பிரதாயங்களும் வன்முறையாலும் சாதீயம், சீதனம் என்ற கொடுமைகளாலும் தமிழீழப் பெண்ணினம் விபரிக்கமுடியாத துன்பங்களை அனுபவித்து வருகின்றது.

இந்த ஒடுக்குமறைச் சிறையிலிருந்து விடுதலை பெறுவதானால் பெண்ணினம் முதலில் தனக்கு எதிராக ஏவப்பட்டுவரும் ஓடுக்குமுறையின் தன்மைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். தனது சீரழிந்த வாழ்க்கை நிலையைச் சீரதைத்துக் கொள்வதாயின், பெண்ணினம் தனது இழிநிலை பற்றி வழிப்புக்கொள்ள வேண்டும். தலைவிதி என்றும், கா்ம வினையென்றும், தனக்காக விதிக்கப்பட்ட மனுநீதியென்றும், பழைமையென்றும், பண்பாட்டுக் கோலமென்றும்காலம் காலமாக மனவுலக இருளுக்குள் முடங்கிக் கிடந்த பெண்ணினம் வழித்தொழ வேண்டும்.

# பெண் விடுதலை

## - கேணல் கிட்டு -

பங்குனி, 1993 - எரிமலை

தென் கிழக்கு ஆசியாவிலேயே பெண்விடுதலைப் போராட்டத்துக்கு உதாரணம் வகிக்கக்கூடிய வகையில் எமது போராட்டம் விளங்குகின்றது.

மகளிர் அமைப்பு, மகளிர் படைப்பிரிவு என்று இரு பிரிவுகளாக இயங்குகின்றது.

பெண்கள் போராட்டத்தில் பங்குபற்றுவதானது சமுதாயத்திலே விழிப்புணர்ச்சியையும், சமூக மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

காலங்காலமாக வரலாற்றுரீதியாக பெண் அடிடைத்தனத்தில் ஊளிப்போயிருந்த எமது இனத்தில் இன்று பரவலான வழிப்புணா்வு ஏற்பட்டள்ளது.

எமது போராட்டம் கண்மூடித்தனமான முறையில் கட்டியெழுப்பப்படவில்லை.

பிற்போக்குத்தனங்களை இல்லாதொழித்து, அறிவு வளர்ச்சியையும், கல்வியறிவையும், மனித வளங்களையும் கூட்டுவதாகவே எமது போராட்டம் நடந்து வருகின்றது.










# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# I.P.K.Fஇன் தமிழின அழிப்பு: இந்தியப் படைகளின் பாலியல் வல்லுறவுகள்

இந்திய அமைதிப்படைகளின் காலத்தில் அவர்கள் தமிழ் பெண்கள் மீது பரவலான பாலியல் வல்லுறவுகளையும் மேற்கொண்டார்கள். இதுபற்றிய முறைப்பாடுகளுடன் மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்த இந்திய இராணுவத் தளபதியிடம் சென்றபோது, இப்படியான முறைப்பாடுகளுடன் தன்னிடம் வரவேண்டாம் என்றும், யாரையாவது அவரது படைகள் சுட்டால் மட்டுமே முறைப்பாடுகளுடன் வரவேண்டும் என்று சொல்லியிருக்கின்றார். இந்திய இராணுவத்தால் பாலியல் வன்முறைகளை மிகப் பரவலாக இடம்பெற்று வந்ததால் இதை ஒரு குற்றச்செயலாக கருதவேண்டாம் என்று இராணுவத் தளபதிகள் மக்களை நிர்ப்பந்தித்துள்ளார்கள்.

இக்காலப்பகுதியில் தமிழர் தாயகத்தில் பணியாற்றிய பல தமிழ் வைத்தியர்கள் இந்தியப் படைகளால் பாலியல் வல்லுறவுக்குள்ளாகிய நூற்றுக்கணக்கான இளம் பெண்களுக்கு சிகிச்சையளித்திருக்கின்றார்கள். பல்கலைக்கழக ஆசிரியரும் சமூகப்பணி ஆர்வலருமாக இருந்து பின்னர் படுகொலை செய்யப்பட்ட ரஜினி தினகரகம இந்தியப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவுகள் பற்றி விரிவாக எழுதியிருக்கின்றார். இந்தியப் படைகள் புரிந்த பாலியல் கொடுமைகள் சர்வதேச மன்னிப்புக் சபையின் அறிக்கைகளிலும் ஒரு தலைப்பாக இடம்பெற்றுள்ளன. இக்காலப்பகுதியில் வெளிவந்த உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களிலும் இந்தியப் படைகள் புரிந்த பாலியல் குற்றஞ்செயல்கள் பற்றிய செய்திகள் அதிகமாக வெளிவந்திருக்கின்றன.

இக்காலப்பகுதியில் நிலவிய பாலியல் வல்லுறவுக்குட்படும் பயம் காரணமாக இளம் பெண்கள் அதிக அளவில் தமிழ் ஆயுதக் குழுக்களில் இணைந்து கொண்டார்கள். தங்களது நண்பர்களும் அயலவர்களும் இந்தியப் படைகளால் பாலியல் வல்லுறவுக்குடபடுத்தப்பட்டதே தாங்கள் இவ்வாறு இணைவதற்கு உந்து சக்தியென்று பலர் கூறியுள்ளார்கள். மானுடவியலாளர்கள் கூற்றில் கூறுவதானால், ஒரு இளம் பெண்ணின் இம்முடிவானது, அவரை பாதிக்கப்படக்கூடியவர் என்ற நிலையை களைந்து சமூகத்தில் சக்தியுள்ள ஒருவராக மாற்றுகிறது எனலாம்.

**புள்ளிவிபரங்கள்**

இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவுகள் தொடர்பான ஆவணங்கள் தமிழ்ச் செயற்பாட்டாளர்களால் பரந்தளவில் சேர்க்கப்பட்டுள்ளன. 1987 ஒக்ரோபருக்கும் 1988 யூனிற்கும் இடையில் தனித்தனியாக 60 இற்கும் மேற்பட்ட பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதற்கான ஆவணங்கள் உள்ளன. இவ்வாறன சில ஆவணங்களில் மருத்துவ அறிக்கையும் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட சம்பவங்களில் 350 வரையான பெண்களும் யுவதிகளும் இவ்வாறாகப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இவ்வாறு பாதிக்கப்படடவர்களில் 14 வயது இளம் பெண்கள் தொடக்கம் 45 வயதான பெண்கள் வரைக்கும், கர்ப்பிணிகள்கூட உள்ளடங்குகின்றனர். ஏறத்தாழ அரைவாசிக்கும் மேல் 18 வயதுக்குட்பட்டவர்களேயாவர்.

பெரும்பான்மையான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே இடம்பெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்திலும் குறிப்பிட்ட எண்ணிக்கையான நிகழ்வுகள் இடம்பெற்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மக்களும் இந்திய இராணுவத்தின் கைகளில் அகப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு ஆளாகினர்.

தமிழர் கலாச்சாரத்தில் இக்குற்றச்செயல் மிகவும் பாரதூரமான தன்மையில் பார்க்கப்படுவதால், பெருந்தொகையான சம்பவங்கள் ஆவணப்படுத்தப்படவில்லை. எனினும் இந்தியப் படைகளின் பாலியல் வல்லுறவானது ஒரு திட்டமிட்ட வன்முறை வடிவமாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை இச்சம்பவங்களின் சாட்சிகளிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்களும் ஏனைய விபரங்களும் காட்டுகின்றன.

**இந்தியப் படைகளின் பாலியல் வல்லுறவுகளின் பொதுவான அம்சங்கள்**

பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் காட்டுவது போன்று, அவை ஒரு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியப் படைகள் மத்தியில் இது ஒரு பரவலான ஒரு செயற்பாடாகவும் இருந்துள்ளது. பல சம்பவங்களில் இந்தியப் படையினர் பெண்களை அவர்களது வீடுகளில் வைத்தே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர். மற்றைய சம்பவங்களில் பெண்களைக் கடத்தி தமது முகாம்களுக்கோ அல்லது கைவிடப்பட்ட இடங்களுக்கோ கொண்டுசென்று வல்லுறவுக்குட்படுத்தியுள் ளார்கள். முகாம்களிலும் காவலரண்களிலும் நிலைகொண்டிருந்த படைவீரர்கள்? மக்களுடைய குடியிருப்புக்களுக்குச் சென்று, வ ீ டு க ளு க்கு ள் நு ழை வ ார்கள் . இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட படைவீரர்கள்? குடும்ப அங்கத்தவர்களைத் தாக்கிவிட்டுப ் பின்னர் பெண் களையும் யுவதிகளையும் பாலியல் வல்லு றவுக்குட்படுத்துவார்கள் அல்லது பாலியல் துஸ் பிரயோகம் செய்வார்கள். அதன்பின்னர், அவர்கள் வீட்டைச் சூறையாடி, குடும்பத்தின் தனிப்பட்ட உடைமைகளை அல்லது பெறுமதியான பொருட்களை தம்முடன் எடுத்துக் கொண்டு சென்றுவிடுவார்கள். சில சம்பவங்களில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பின்னர் பெண்கள் கொலைசெய்யப்பட்டும் உள்ளார்கள்.

1988 ஜனவரி 2 ஆம் திகதி, யாழ்மாவட்டத்திலுள்ள புன்னாலைக்கட்டுவன் என்னும் இடத்தில் மூத்ததம்பி கனகேஸ்வரி என்பவரின் வீட்டிற்குள் மூன்று இந்திப்படையினர் நுழைந்தார்கள். அவர்கள் அவரை தொல்லைப்படுத்தி, பாலியல் ரீதியாகத் துஸ்பிரயோகம் செய்துவிட்டு அவரது வீட்டையும் சூறையாடினர். அதே இடத்தில், நாகமுத்து சரவணை என்பவருடைய வீட்டிற்குள் நுழைந்த வேறு மூன்று இந்தியப் படையினர் அவருடைய மகள்மாரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்திருக்கின்றார்கள்.

1987 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தின் கோண்டாவில் கிழக்கில் இரண்டு இந்தியப் படையினர் காங்கேசன் துறை வீதி மற்றும் முதட்டு மடம் வீதிச் சந்தியிலிருந்த எஸ். சற்குணதேவியின் வீட்டுக்குள் நுழைந்து அவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார். அவர்கள் அவரது க ண வரைக் கட்டி அவரைத் தாக்கியும் இருந்தனர்.

1987 நவம்பர் 26 ஆம் திகதி. ஜி.செல்வநாயகத்தின் வீட்டுக்குள் நுழைந்த சில படையினர் அவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினர். இவ்விரு சம்பவங்களும் எவ்வாறு இந்தியப் படையினர் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து பெண்களை பாலியல் வல்லுறவுக் குட்படுததினார்கள் என்பதை காட்டுகின்றன.

1987 நவம்பர் 21 ஆம் திகதி. யாழ்மாவட்டத்திலுள்ள உடுவிலைச் சேர்ந்த பல பெண்கள் உடுவில் இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்த படையினரால் பாலியல்வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள்.

1987 ஒக்ரோபர் 17 அம் திகதி. யாழ்ப்பாண மாவட்டத்தின் உரும்பிராய் என்னும் இடத்தில் 30 பெண்கள் இந்தியப் படைவீரர்களால் கடத்தப்பட்டார்கள். அவர்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத் தப்பட்டதாக நம்பப்படுகின்றது.

1987 ஒக்ரோபர் 20 ஆம் திகதி, யாழ்ப்பாண மானிப்பாயில் ஒரு தாயும் அவருடைய மகளும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

1989 வரை வடமராட்சியில் பணியாற்றிய தமிழ் வைத்தியர் ஒருவர் இந்தியப் படைவீரர்களால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக் கப்பட்ட பலருக்குச்சிகிச்சையளித்தார். அவர் கேட்ட தகவல்களின் படி, அதிகமான பாலியல் வல்லுறவுகள், இந்திய இராணுவத்தினர் வீடு களைச் சுற்றிவளைத்து ஆண்களை பிடித்து ச ெ ச ல் லு ம் ந ட வடிக்கை களின் போதே இடம் பெற்றிருக்கின்றது. இந் நேரத்தில் இந்தியப் படையினரின் ஏனைய வீரர்கள் வீடுகளுக்குள் நுழைந்து பெண்களையும் யுவதிகளையும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்துவார்கள். இவ்வாறான ஒரு சம்பவத்தில் 8. 10, 12 வய துடைய மூன்று சகோதரிகள் படைவீரர்களால் பாலியல் துன்புறுத்தலுக்காளாக்கப்பட்டார்கள். சிகிச்சையின்போது அவர்களது மார்பகங்களைச் சுற்றி கடித்த அடையாளங்கள் இருந்ததை அவ் வைத்தியர் கண்டார்.

இவ்வாறு பாலியல் வல்லுறவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவளத்துணைச் சிகிச்



சை, உடற்காயங்கள் மற்றும் பாலியல் ரீதியாகக்கடத்தப்படும் தொற்றுநோய்களுக்கும் அவர் சிகிச்சையளித்துள்ளார். பாலியல் வல்லுறவு காரணமாக பெண்கள் கர்ப்பமடைந்த நிலையையும் எதிர்கொண்டிருந் தனர். உடற்காயங்கள் சிகிச்சையளிப்பதற்கு இலகுவானவையாக இருந்தன என்றும், ஆனால் உளவியல் தாக்கங்களுக்குச் சிகிச்சை வழங்குவது மிகவும் கடினமாது என்றும் கூறினார். பெரும்பாலான பெண்கள் அது தங்களுடைய தவறே என்று நம்புவதாகக் கூறி ஒரு குற்ற உணர்வினாலேயே மிகவும் பாதிக்கப்பட்டிருந்ததை அவ்வைத்தியர் அவ தானித்தார். இம் மனநிலையிலிருந்த தனது நோயாளர்களை வெளியில் கொண்டு வருவது அவ்வைத்தியருக்குப் பெரும்பாடாக இருந்தது.




**பாதிக்கப்பட்டவர்களது பதில் நடவடிக்கைகள்**

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சமூகத்தால் கறை பூசப்படும் என்ற பயம் காரணமாக பாலியல் வன்முறைச் சம்பவங்களைப் பற்றி முறை யிடுவது தமிழ் சமூகத்தில் மிகவும் அரிதான செயல். இருந்தும் கூட, சில பாலியல் வன் முறைச்சம்பவங்கள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களால் வெளிகொண்டுவரப்பட்டன. இப்பாதிப்புகளை எதிர்கொள்ளும் வேறு சில வழிகளையும் இவர்கள் செயற்படுத்தியள் ளார்கள்.

1988 ஏப்ரலில், கிளிநொச்சி இரணைமடு மற்றும் முல்லைத்தீவின் விசுவமடு ஆகிய இடங்களில் ஆறு பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள். இச்சம்பவத்தைக் கேள்விப்பட்ட அயலவர்களும் அவ்விடங்களில் வாழ்ந்த மக்களும் தங்களது வீடுகளுக்குள்ளேயே இருந்ததுடன் ஏப்ரல் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் தங்களது கடைகளைப் பூட்டி, வியாபாரங்களையும் நிறுத்தி வைத்திருந்தார்கள். இச்சம்பவமானது எதிர்ப் பை வெளிப்படுத்தும் ஒரு அடையாளமாக மட்டுமன்றி, கொடூரமாக தாக்கப்பட்ட பெண் களின் குடும்பத்தவர் சோகம் ஆறும் நேர மாகவும் அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக் கும் செயலாகவும் இருந்தது.

1987 நவம்பர் 30 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த 47 குடிமக்களால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று, பின்வருமாறு சொல்கின்றது:

“இச்சம்பவங்களானது இப்பகுதி மக்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் அவர்களில் சிலர் இவ்விடத்தைவிட்டு வெளியேறிக் கொண்டும் இருக்கின்றார்கள். பாதுகாப்பாக வாழமுடியும் என்ற நம்பிக்கையில் நாம் எமது வீடுகளுக்குத் திரும்பும்போது, அமைதி காக்கும் படையினரால் நாம் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகின்றோம்.”

**அதிகாரிகள் பதில் நடவடிக்கைகள்**

பாலியல் வல்லுறவுக்குச் சம்பவங்களுக்கு இந்தியப் படையினரும் இலங்கை அரசாங் அதிகாரிகளும் வழங்கிய பதில்கள் ஒன்றில் அச்சம்பவங்கள் நடக்கவில்லை என்று மறுப்பதாக அல்லது அவற்றை குறைத்துக்காட்டுவதாகவே இருந்தன. இந்தத் தந்திரமானது பொறுப்பிலிருந்தும் நீதியிலிருந்தும் தப்பித்துக்கொள்வதற்கு மட்டுமன்றி, தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையையும் கௌரவத்தையும் இழந்த நிலையினைப் பதியச் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டது. பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவதானது பெண்களையும் அவர்கள் சமூகத்தையும் பாரியளவில் பாதிப்புறச் செய்ததுடன், இவ்வாறு அதனை மறுப்பதானது தமிழ் மக்களின் ஒட்டுமொத்த மன அழுத்தத்தையும் அதிகரிக்கச் செய்தது.

1987 நவம்பர் 21 ஆம் திகதி, உடுவில் இராணுவ முகாமில் வைத்து பல பெண்கள் இந்தியப் படைகளால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள். பின்னர் இச்சம்பவம் பற்றி முறையிடுவதற்காகப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண்களும் அவர்களது பெற்றோரும் அதிகாரிகளிடம் சென்றார்கள். அதற்கு அதிகாரிகள்,

“பாலியல் வல்லுறவு என்பது பொதுவாக நடக்கும் ஒன்றே. இச்சம்பவம் பற்றி முறைப்பாடு செய்வதற்கு இங்கே வரவேண்டாம். யாராவது சுட்டுக்கொல்லப்பட்டால் நாங்கள் அதைப் பதிவதற்குத் தயாராக இருக்கின்றோம்” என்று சொன்னார்கள்.

பாலியல் வல்லுறவு என்பது “பொதுவாக நடக்கும் ஒன்று” என்று வகைப்படுத்துவதன் ஊடாக, அக்குற்றச்செயலதும் மனித உரிமை மீறலதும் தீவிரத்தன்மையினை குறைத்துக் காட்டும் ஒரு செயற்பாடாகவே இவர்களது பதில் அமைந்திருந்தது.

1988 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி புன்னாலைக் கட்டுவன் வடக்கு, சிறீ துர்க்கா சனசமூக நிலையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் ஒன்றில் அக்கிராமத்தின் 60 குடியிருப்பாளர்கள் கையொப்பமிட்டிருந் தார்கள். பாலியல் வல்லுறவுக்கு அல்லது துஸ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்ட அக்கிராமத்தைச் சேர்ந்த பல பெண்கள் பற்றிய ஒரு அறிக்கை உட்பட இந்தியப்படைகளால் இழைக்கப்பட்ட அநீதிகளை அவ் ஆவணம் கோடிட்டுக் காட்டியது.

படையினர் தமிழ்ப் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்துகின்றார்கள் என்ற ஊடகச் செய்திகளை யாழ்ப்பாண இந்திய இராணுவத் தலைமையகம் மறுத்தது. இவ்வறிக்கைகள் விஷத்தன்மையானதும் படையினரை கேவலப்படுத்துவதுமாக உள்ளது என அவர்கள் இதற்கு பதிலளித்தனர். மேலும்,

“பெண்களை போற்றுவது இந்திய கலாசாரத்தின் ஒரு உன்னதமான அம்சம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எல்லா இலங்கை தமிழருக்கும் மதிப்பளித்து வரும் இந்திய படை வீரர்கள் இப்படி மோசமான குற்றச்செயல்களை புரிவார்கள் என்பது ஏற்க முடியாதது”, என்றும் கூறினார்கள். பெண்களுக்கு மதிப்பளிக்கும் இந்திய கலாசாரத்தை காட்டி இந்திய இராணுவம் பாலியல் வல்லுவுறவுக் குற்றச்சாட்டுகளை மறுக்க முயற்சிப்பதையே இது காட்டுகிறது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)






தமிழீழம்

1987...1990





# சர்வதேச பெண்கள் நாள் – மார்ச் 08

## தமிழீழத் தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் வாழ்த்திலிருந்து




எமது பெண் போராளிகளின் அபாரமான போராற்றலையும் அவர்களின் வீரத்தையும் எதிரியே நன்கறிவான். அவர்கள் அறிந்ததை உலகமும் எமது மக்களும் அறியுமுகமாக வரலாற்றுப்பதிவாக ஒரு நூல் எழுதப்பட வேண்டும். இதற்கு எமது போராட்டம் பற்றிய தெளிவான பார்வையும் போருக்குள் நின்ற வாழ்வனுபவமும் போர்க்கலை பற்றிய அறிவும் எமது போராளிகளது நுண்மையான மன உணர்வுகளை புரிந்துகொள்கின்ற தன்மையும் அவசியம். இல்லாது போனால் எமது போராட்டத்தின் வரலாற்றை அதன் ஆழத்திலும் அகலத்திலும் அதன் யதார்த்தக் கோலத்திலும் தரிசித்துக்கொள்வது கடினம். போர் பற்றிய அறிவு ஞானம் இல்லாத பழமையில் புதைந்து போன வரலாற்றாசிரியர்களால் எமது பெண் போராளிகளது வரலாற்றை துல்லியமாகக் கிரகித்தறிவது சிரமம். எனவே போர்க்களத்தில் அளப் பெரும் தியாகங்களையும். சாதனைகளையும் படைத்த பெண்போராளிகளே இப்பணியையும் மேற்கொள்ள வேண்டும் என்பது நீண்டநாளாக என்னிடம் இருந்த பேரவா. எனது பேரவாவுக்கு விருந்தளிக்கும் மாலதி படையணியின் வெளியீடாக நெஞ்சையுறைய வைக்கும் பல்வேறு சமர்களின் தொகுப்பாக பெண் போராளிகளது வீரத்தையும் விவேகத்தையும் பறைசாற்றும் வரலாற்றுப் பதிவேடாக இந்நூல் வெளிவருவது பெரும் மகிழ்வைத்தருகிறது.

எனவே எமது விடுதலைப் போராட்டத்திற் பெண்களையும் அணி சேர்ப்பதனூடாக படிப்படியாக சமூக மாற்றத்தை ஏற்படுத்தி பெண் விடுதலையையும் தேசவிடுதலையையும் சாத்தியமாக்கலாம் என நான் உறுதியாக நம்பினேன். இவ்வாறு தான் எமது போராட்டத்திற் பெண்புலிகள் தோற்றம் பெற்று இன்று எதிரியின் படைபலத்தைச் சிதைத்து யுத்தத்தின் போக்கையே நிர்ணயிக்கின்ற பெரும் படையணிகளாக எழுந்து நிற்கின்றார்கள். ஒருநூற்றாண்டுக்கு மேலாக மேற்குலகப் பெண்கள் பெரும் போராட்டங்களை நிகழ்த்தி புரட்சிகளை நடத்தி விவாதங்கள் புரிந்து கருத்தமர்வுகளை மேற்கொண்டு பெற்றெடுத்தவற்றையும் விட எமது பெண்புலிகள் மிகவும் குறுகிய காலத்துக்குள் எமது பெண்களுக்கு பெற்றுக் கொடுத்த உரிமைகளும் சுதந்திரங்களும் அளப்பரியவை. அத்தோடு சமூகத்திலே பெரும் புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றார்கள். சமூக கருத்துலகின் புதிய பார்வையை வளர்த்து வருகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக ஆணும் பெண்ணும் சமமான ஆற்றலுடனேயே படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உடற்கூற்றியல் நிபுணர்களின் கூற்றுக்கு பெண்புலிகளே உலகுக்கு உதாரணமாக வாழ்கின்றார்கள்.

புரட்சிப் புலிகளாகக் களமிறங்கியுள்ள எமது பெண்புலிகள் எத்தகைய துன்பங்களையும் சுமந்து எத்தகைய நெருக்கடிகளைம் சமாளித்து எத்தகைய ஆபத்துக்களையும் எதிர்கொண்டு போராடுகிறார்கள். அசைக்கமுடியாத மனவுறுதியும் அதனால் பிறக்கும் துணிவும் அவர்களிடம் உள்ளன. அபாரமான சகிப்புத்தன்மையும் தளராத உறுதியும் கடும் உழைப்பும் கொண்டவர்கள் அவர்கள். அவர்கள் தரையில் மட்டுமல்லாது கடலிலும் சண்டை செய்கிறார்கள். கடற்போர்க்கலை மிகவும் நுட்பமானது. அதற்கு நிறையப்பயிற்சியும் அனுபவமும் தேவை. கடல் சதா அசைந்து கொண்டிருக்கும். அதன் முதுகில் சவாரி செய்து கொண்டு சண்டையிடுவது மிகவும் கடினமானது. எமது பெண்புலிகள் மீன்குஞ்சுகள் போலக் கடலோடு வாழப் பழகிவிட்டார்கள். இந்தப் பெண் போராளிகளை அவர்களது போராட்ட வாழ்க்கையை அவர்களிடையே நிலவும் ஆழமான புரிந்துணர்வை அளவிட முடியாத அன்புறவை இந்நூல் அழகு தமிழில் எளிய நடையில் மிக நுட்பமாக வெளிப்படுத்தப்படுகிறது. பல்வேறு இடங்களில் நடந்த பல்வேறு சம்பவங்களுக்கூடாக மாலதி படையணியின் வரலாறு சொல்லப்படும் பாங்கு சிறப்பாக அமைகிறது. மேலும் பெண்புலிகளது போரனுபவத்தை மாலதி படையணியின் சண்டையனுபவத்துடன் பின்னிப் பிணைத்து பெண்புலிகளது வரலாறு இந்நூலில் அழகாகப்படைக்கப்பட்டிருக்கிது. இந்நூலின் ஆக்கத்துக்கு அயராது உழைத்த மாலதிபடையணிப் போராளிகளுக்கும் தளபதிகளுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு இந்நூல் சிறப்புடன் வெளிவர எனது நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விழுதுமாகி வேருமாகி " நூலில் தேசியத் தலைவரின் வாழ்த்திலிருந்து...!






JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


ARASAN RAJADURAI
REAL ESTATE & DEVELOPMENTS
SALES REPRESENTATIVE
C 416.500.9550
B 416.298.8383
F 416.298.8303
realtorarasan@gmail.com
www.century21.ca/arasan.rajadurai
Century 21 INNOVATIVE REALTY
CENTURY 21
Innovative Realty Inc. Brokerage
2855 Markham Rd
Toronto ON M1X 1C4


WEXFORD
WELLNESS CARE INC.
We treat all car accident injuries!
* Massage Therapy
* Physiotherapy
* Orthopaedic
* Acupuncture
* Chiropractic
* Orthotic
We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)
Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location
Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)


NAM THAYAKAM நம் தாயகம்
"உணவினில் தாய்மண்வாசமும் உணர்வோடு தாய்மண் நேசமுமாய்"
நம் தாயகம் பிராண்ட் தயாரிப்புக்கள் 416-558-2111
நம் தாயகம்
வாங்குவீர்... வாழ்வு தருவீர்!
பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும்
போரில் அவயங்களை இழந்தோருக்கான
தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்
முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும்
தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள்,
உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைப் கொள்வனவு செய்து தாயக மக்களின்
பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி
முள்ளிவாய்க்காலில் இருந்து...
"உணர்வினில் தாய் மண் வாசமும் உணர்வோடு தாய் மண் நேசமுமாய்"
Tel: 416-558-2111
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)

# சிலோனுக்கான சமஷ்டி முறை

## 1926ம் ஆண்டு ஜுலை மாதம் யாழ்ப்பாணத்தில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆற்றிய உரை

மாணவர் காங்கிரஸ் ஆதரவிலான கூட்டமொன்றில் சட்டத் தரணி (Barrister- at-law) எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கா பி.ஏ. (oxon) “எமது அரசியல் பிரச்சினைகளுக்கான ஒரே தீர்வாக சமஷ்டி முறை“ என்ற தலைப்பில் சுவாரஷ்யமாக உரையாற்றினார். டாக்டர் ஐசக் தம்பையா தலைமையில் அந்தக் கூட்டம் நடந்தது.

**பண்டாரநாயக்காவின் முழுமையான உரை வருமாறு:**

தற்போதைய காலகட்டத்தின் முக்கியத்துவத்தை முதலில் நாம் புரிந்து கொள்வது அவசியம். 1928ம் ஆண்டு அரசியலமைப்பு மீளாய்வு செய்யப்பட உள்ளது. திருப்தியான அளவு கொண்ட சுயாட்சி எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, இதை உள்வாங்கி அரசியல் பிரச்சினையைக் குறித்து மிகத் தெளிவாக சிந்தித்து கிரகித்துக் கொள்வது அவசியமாகிறது. தற்போது நாம் எடுத்து வைக்கும் பிழையான அடியையோ முன்வைக்கும் தவறான பிரேரணையையோ பின்னர் சரிப்படுத்துவது கடினமாக இருக்கும். அவர்கள் சுயாட்சியை விரும்புகிறார்கள். எந்தளவு சுயாட்சி என்பது தான் இப்போதுள்ள கேள்வி.

கடந்த கால அரசாங்க மாதிரிகள் சுருக்கமாக கூறுவதென்றால் இரண்டு விதமான அரசாங்கங்கள் அப்போது இருந்தன. ஒன்று “நிந்தகம்” என்ற பிரபுத்துவ அரசாங்கம். மற்றது கிராமத்து தலைவர் என்ற அமைப்பிலானது. பிரபுத்துவ அரசாங்கத்தில் கடன் தொகைகள் செலுத்தப்பட்டது வரையில் வேறொன்றைக் குறித்தும் அக்கறை இருக்கவில்லை. கிராமத்து தலைவர் என்ற அரசமைப்பில் கிராமமே தனிப்பிரிவாக கருதப்பட்டது. மன்னருக்கு நிலப்பரப்பு இருந்தது. அதற்குப் பொறுப்பான ஆட்கள் இருந்தனர். பல்வேறு மாகாணங்கள் பிரிக்கப்பட்டு “கங்சபாவ” என்ற மக்கள் சபையாக உருவாக்கப்பட்டன. அந்த கங்சபாக்கள் கிராமத்திலிருந்த ஒவ்வொரு குடும்பத் தலைவரையும் கொண்டிருந்தன. வழக்கு தொடுப்பவர்களுக்கு மன்னருக்கே மேன் முறையீடு செய்யும் உரிமை இருந்தது. பிரித்தானியர் சிலோனுக்கு வந்தபோது அவர்கள் அதிகாரம் முழுவதும் மத்தியில் குவிந்ததான அரசமைப்பு ஒன்றை அறிமுகப் படுத்தினர். அது சுதந்திரமான நிறுவனம் ஒன்றைப் போலிருந்தது. இப்போதும் கூட அது அதிகார தோரணையுள்ள அரசமைப்பாகவே இருக்கிறது.

சீர்திருத்தத்துக்கான கிளர்ச்சி 1915ம் ஆண்டு வன்முறை இடம் பெற்றது வரையில் சீர்திருத்தத்துக்கான அரசியல் கிளர்ச்சி ஆரம்பமாகவில்லை. அதில் சேர். பி. இராமநாதன் ஆற்றிய பெரும் பங்குபற்றி பண்டாரநாயக்கா குறிப்பிட்டார். சேர்.பி. அருணாசலம் தேசிய காங்கிரசை உருவாக்கினார். சீர்திருத்தத்துக்கான கிளர்ச்சி இயக்கத்தின் தந்தையும் அவர் தான். தேசிய காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டதும் சாம்ராஜ்யத்தினுள் சுயாட்சி என்ற நோக்கத்தையும் இலக்கையும் கொண்டதான உறுப்பையே அங்கத்தவர்கள் அனைவரும் ஆதரித்தனர். மேல் சபையில் ஒரு சில ஆசனங்கள் கிடைத்ததைத் தவிர வேறெதுவும் நடக்கவில்லை. அந்த கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் தவறான அடிப்படைகளில் நின்று கொண்டு இரண்டு திசைகளில் வாதிடுவதிலேயே தமது சக்தியை மையப்படுத்தினர். அந்த அரசமைப்பு பொருத்தமானது தானா என கேள்வி எழுப்பவில்லை. அடுத்ததாக, இங்கிலாந்தில் செயற்படும் மாதிரியான அரசமைப்பையே அவர்கள் இலக்காகக் கொண்டிருந்தனர். விளைவு தற்போதைய மேல் சபை. அப்போது மிகவும் சாதாரணமான ஒரு சபையாகவே இருந்தது. கோட்பாட்டு அளவில் அது மக்கள் சபையாக இருந்தாலும் உண்மையில் அதற்கு அதிகாரம் இருக்கவில்லை. பல விடயங்கள் விட்டுக் கொடுக்கப் பட்டன. வாக்காளர்களுக்கு பொறுப்பற்ற வெறும் அரசாங்க உறுப்பினர்களாகவே அவர்கள் இருந்தனர். நாட்டின் நிலப்பரப்பு தொடர்பான கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டது. இனங்கள் தொடர்பான கோட்பாடு எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது. நிதி விடயத்தில் மேல் சபைக்கு ஓரளவு கட்டுப் படுத்தும் அதிகாரம் இருந்தது. நிறைவேற்று அதிகார பேரவை மேல் சபையிலிருந்து பிரிந்து பாடசாலை மாணவர்களின் விவாத அரங்கு போலக் காட்சியளித்தது. கடந்த சில வருடங்களாக நடந்த கிளர்ச்சிக்கு கிடைத்த பலன் இது தான். அதற்கு செலுத்தப்பட்ட விலை சிங்களவர் - தமிழர் என்ற பிரிவினை. தாழ்நிலப்பகுதி சிங்களவர் - கண்டிய சிங்களவர் என்ற பேதம். சிறுபான்மையினர் ஒருவரை ஒருவர் அவநம்பிக்கையுடன் நோக்கத் தொடங்கினர். அடிப்படையிலிருந்து அந்த வேற்றுமைகள் உருவாகவில்லை என நினைப்பது தவறு. ஒரு சிலர் மனதில் ஒரு நோக்கத்துடனேயே அந்தப் பிரிவினைகளை ஏற்படுத்தினர். அவர்கள் இறந்த பின் அந்தப் பிரிவினைகள் மறைந்துவிடும் என நினைத்தவர்களும் இருந்தனர். நூறு வருடங்களுக்கு முன்பு அவ்வாறான பிரிவினைகள் இருக்கவில்லை. காரணம் அப்போது இந்த நாட்டிலிருந்த சிங்களவர், தமிழர் தலைகளில் ஆங்கிலேயர் ஏறி அமர்ந்திருந்தனர். அரசாங்கத்தை தமது கரங்களில் எடுக்கப் போவதாக அவர்கள் கூறி வந்த கணப்பொழுதில் தான் உள்ளுக்குள் எரிந்து கொண்டிருந்த கனல் வெளிவந்தது. சரித்திரத்தை படித்துப் பார்த்தால் இந்த நாட்டில் மூவின மக்களும் ஆயிரம் வருடங்களுக்கு மேல் வாழ்ந்திருந்தாலும் ஒன்று சேர வேண்டும் என்ற மனப்போக்கு அவர்களிடம் காணப்படவில்லை என்பதை அறிந்து கொள்ளலாம். அவர்கள் தமது மொழியை, சடங்குகளை, மதத்தைப் பாதுகாத்தனர். அந்த வேற்றுமைகள் படிப்படியாக மறையும் என நம்பும் எவரும் அவசரத்தில் காரியம் செய்பவனாகவே இருப்பான்.

மத்திய அரசாங்கத்தின் தவறுகள் இதனை அடுத்து, உருவாகக் கூடிய சிக்கல்களைப் பற்றி பண்டாரநாயக்கா கோடிட்டுக் காட்டினார். எதிர்பார்க்கப்படும் சீர்திருத்தங்கள் செய்யப்பட்ட அரசாங்கத்தின் கீழ் மேல் சபையானது பிரதமரையும் பல்வேறு அமைச்சர்களையும் தெரிவு செய்யும். தற்போது பல்வேறு சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு குறிப்பிட்ட அளவிலான அமைச்சர்கள் இருக்கின்றனர். அந்த அளவு தொடர்ந்தும் இருக்குமென்றால் அமைச்சரவையிலும் ஒரு குறிப்பிட்ட அளவு பிரதிநிதித்துவம் தமக்கு வேண்டுமென சமூகங்கள் வலியுறுத்தும். மத்திய அரசாங்கத்தில் ஒரே மாதிரியான இனங்களைச் சேர்ந்தவர்கள் இடம்பெற்றிருப்பார்கள். இலங்கையைப் போன்ற மோதல் சூழ்நிலைகளில் செயற்படும் அரசாங்கமொன்று உலகின் வேறெப்பாகத்திலாவது செயற்படுகின்றதா என எனக்குத் தெரியாது. இனரீதியான பரந்த வேறுபாடுகளைக் கொண்ட நாடுகளின் மத்தியில் அதிகாரம் குவிந்த அரசாங்கம் அமையுமென்றால் இவ்வாறான சிக்கல்கள் தான் உருவாகும்.

சமஷ்டி முறை சமஷ்டி முறையில் அந்த அமைப்பிலுள்ள ஒவ்வொரு பிரிவுக்கும் தானாகவே ஆட்சி செய்வதற்கு முழுமையான அதிகாரம் உள்ளது. இருப்பினும் அவை இணைந்த இரண்டொரு சபைகளாகி நாட்டைப் பாதிக்கும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடும். அமெரிக்காவிலுள்ள அரசாங்கம் அப்படியானது தான். சுயாட்சி அதிகாரமுள்ள அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளிலும் இதே அரசமைப்புதான். இந்த விடயத்தில் சுவிட்சர்லாந்து, இலங்கைக்கு நல்லதோர் உதாரணம். அது சிறிய நாடாக இருந்தாலும் அங்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி நாட்டவர்கள் வாழ்கின்றனர். இருப்பினும், அங்கு சமஷ்டி முறை வெற்றியளித்திருக்கிறது. அங்குள்ள ஒவ்வொரு அரச உப பிரிவும் தமது அலுவல்களை சுயமாகவே கவனித்துக் கொள்கின்றன. வெளிநாட்டு அலுவல்கள், வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் சர்ச்சைக்குரிய விடயங்களை மேல்சபை கையாள்கிறது. சிலோனில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் சுயாட்சி வழங்க வேண்டும். நாட்டின் வருவாயைக் கையாள்வதற்கென இரண்டொரு மேல்சபைகள் இருக்க வேண்டும். இதற்கு பலர் எதிர்ப்பு தெரிவிப்பர். இருப்பினும், பிரச்சினைக்கு ஏதோ ஒரு வகையான சமஷ்டி முறைதான் பொருத்தமானதாக இருக்கும் என்பது தான் தனது நம்பிக்கை என பண்டாரநாயக்கா கூறினார். சிறுபான்மை இனங்களுடன் தான் இன்னும் பணியாற்றத் தொடங்கவில்லை. ஏனென்றால் அவர்களுடைய தற்காலிக ஏற்பாடுகள் விசேட பிரதிநிதித்துவத்துக்கு பயன்படலாம். ஆனால், அந்த ஏற்பாடுகள் ஒரு சமூகம் இன்னுமோர் சமூகத்தை ஆதிக்கம் செய்கின்றது என்ற பயம் இருக்கும் வரை தொடர்ந்து இருக்கவே செய்யும். இதையே பண்டாரநாயக்கா கொழும்பு தமிழர்களுக்கான ஆசனம் தொடர்பான விடயத்திலும் தெரிவித்தார். எல்லா சமூகங்களையும் திருப்திப்படுத்தக் கூடிய அரசமைப்பொன்றை உருவாக்குவது கடினம். சமஷ்டி முறையே தீர்வு. இப்படி ஒரு பிரச்சினை இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டால் அது குறித்து தான் மகிழ்ச்சி அடைவதாகவும் இதைவிட சிறந்த தீர்வுத்திட்டமொன்று எவரிடமாவது இருந்தால் அவர் அதை மக்கள் முன்பாக வைப்பார் என தான் நம்புவதாகவும் பண்டாரநாயக்கா தனது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

அவருடைய உரையை அடுத்து விறுவிறுப்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் எழுப்பப்பட்ட முக்கியமான விடயங்கள் பற்றிய சுருக்கமான விபரம் வருமாறு:

இலங்கையின் சரித்திரத்தில் ஆரம்ப கட்டத்தில் சமஷ்டி முறை எவ்வாறு செயற்பட்டது என திரு. சண்முகம் புரிந்து கொள்ளவில்லை. பிழையான எண்ணங்கள் மனதை ஆக்கிரமிக்கும் சந்தர்ப்பத்திலும் சமஷ்டி முறையை எவ்வாறு செயற்படுத்த முடியுமென கொடுக்கப்பட்ட விளக்கத்தையும் அவர் புரிந்து கொள்ளவில்லை. கொழும்பு ஆசனத்துக்குப் போட்டியிட முயற்சி எடுத்தபோது சேர்.பி. அருணாசலம் நடத்தப்பட்ட விதம் மற்றும் மேல் சபையின் உப தலைவருக்கான தேர்தலில் சேர் இராமநாதன் நடத்தப்பட்ட விதம் குறித்தும் அவர் உதாரணம் காட்டி பேசினார். சமஷ்டி மேல்சபையில் கூட வேற்றுமைகள் உருவாகும் என சுப்பையா கூறினார். ஒரு இனம் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களில் சமஷ்டி முறை பொருந்தும்.

மேல் மாகாண விடயத்தில் அதை எவ்வாறு செயற்படுத்துவது என ஜுலியஸ் பிலிப்ஸ் கேட்டார். ஜே.எச்.பி. விஜயரட்ணம் வருவாய் பற்றாக்குறையால் சில மாகாணங்களில் நிர்வாகம் செயற்படுவதில் சிரமம் இருப்பதை எடுத்துரைத்தார். மதம், சாதி சம்பந்தமான பிரச்சினைகள் வட மாகாணத்தில் தீவிரமாக காணப்படுவதால் அவை எவ்வாறு தீர்த்து வைக்கப்படும் என தான் அறிய விரும்புவதாகவும் பிலிப்ஸ் கூறினார். பிரச்சினைகளை யார் தீர்த்து வைப்பது என்ற விடயத்தில் மூவின மக்களுக்குமிடையில் தகராறு எழுந்தால் எண்ணிக்கையைக் கணக்கிலெடுக்கும் போது தாழ்நிலப்பகுதி சிங்களவர்களின் கை ஓங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். சிறுபான்மை சமூகங்களை அலட்சியம் செய்யக் கூடாதென சுப்பிரமணியம் கூறினார். இந்த சூழ்நிலைகளின் கீழ் பிரிட்டிஷ் ஆட்சியே பாதுகாப்பானது என பெய்லி மயில் வாகனம் சொன்னார்.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஏன் தொடர்ந்து இருக்க கூடாது. இதற்கு பதிலளித்துப் பேசிய பண்டாரநாயக்கா பின்வருமாறு கூறினார். மதப்பிரச்சினை சட்டத்தால் தீர்க்கப்பட வேண்டியது. நிதி சமத்துவமின்மை மிகப்பெரிய தடை. கல்விப்பிரச்சினையும் அப்படியானது தான். நிதி தேவைப்படும் மாகாணங்களிடையே பொது நிதியைப் பகிர்ந்தளிக்கலாம். இந்த விடயம் சர்ச்சை நிறைந்தது. கடைசியாகப் பேசியவர் நாம் ஏன் தொடர்ந்தும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருக்கக் கூடாதெனக் கேட்டார். ஏன் இத்தனை பயமும், விவாதமும்? எந்த ஒரு நாடும் சுயாட்சியை விரும்பவில்லையென்றால் அது நாடாகவே இருப்பதற்குத் தகுதியில்லை. அப்படிப்பட்ட ஒரு நாடு நிர்மூலமாக்கப்பட வேண்டும்.

டாக்டர் ஐசக் தம்பையா பேசுகையில், பண்டாரநாயக்கவின் உரை நன்கு தயாரிக்கப்பட்டு செறிவுமிக்க வகையில் ஆற்றப்பட்டது. அது பெரும் ஆர்வத்தை தூண்டுமென தான் நம்புவதாகவும் சொன்னார். எனக்குத் தெரிந்தவரையில் சமஷ்டி முறை பிரிட்டிஷ மலாயாவில் தான் மிக நன்றாக செயல்படுகின்றது. சமஷ்டி முறை பற்றி சிந்திக்கும் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ளவர்களின் தலைவர்கள் மலாயா சென்று அங்கு அது எவ்வாறு செயற்படுகின்றது என மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

இறுதியில் தரமானதோர் உரையை தெரிவு செய்ததற்காக மாணவர் காங்கிரசுக்கு டாக்டர் தம்பையா பாராட்டு தெரிவித்தார். சில காலங்களுக்கு முன்பு யாரோ ஒரு கனவான் கல்விக் கொள்கையைப் பற்றிப் பேசினார். இன்றிரவு பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் கொள்கைகளைப் பற்றிப் பேசினார். இதையடுத்து டாக்டர் தம்பையா உரையாளருக்கு நன்றியுரை ஆற்றினார்.

சிலோன் மோர்னிங் லீடருக்காக யாழ் செய்தியாளர்

*சிலோன் மோர்னிங் லீடர் (The Ceylon Morning Leader) பத்திரிகையில் சமஷ்டி பற்றிய பண்டாரநாயக்கவின் கட்டுரைகள் 1926 இல் மே – 19,27, யூன் 02,09,23,30, யூலை 17 வெளியானது. இது அந்தத் தொடரின் இறுதிக் கட்டுரை.

நன்றி – தினக்குரல்







**“இலங்கைத் தமிழருக்கென இத்தீவில் தாயகம் உண்டு, அதில் தமக்கென அரசை உருவாக்க உரிமையுடையவர்கள்”**

எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கா



# இது போராடும் பூமி... புலிகளின் காலம் பிரபாகரன் வழிகாட்டி...

இன்று எங்கள் வானத்தில்
வெள்ளிநிலவு பாலை அள்ளித்தான் சொரிகிறது.
விண்மீன்கள் கண்தூங்கவில்லை.
இலுப்பைமரம் பூத்துக் கொட்டுகிறது.
ஆழக்கிணறேதும் ஊற்றடைத்துப் போகவில்லை.
குண்டம் குழியுமான பாதையெனிலும்
இன்றும் பயணம் நடக்கிறது
இது தமிழீழம்.
எல்லாம் நடக்கும்.
விஜேதுங்காவுக்கு ஒரு வினா
உன்னால் முடியுமா தம்பி?
எங்களுக்கு வித்தே வேண்டாம்.
நாங்கள் வேரிலிருந்தே முளைவிடும் சாதி.
எங்களைக் கூட்டிக்குவித்து தீயிடு
மறுநாள் சாம்பலிலிருந்து பிறப்போம்.
வெட்டிச் சரித்துப் புதைத்திடு
மூன்றாம் நாள் எங்கள் முகம் தெரியும்.
இது தமிழ்ச்சாதி
இங்கே
குண்டு சுமந்து வானூர்தி வட்டமிடும்.
குழிகள் தேடி எவரும் ஓடுவதில்லை.
போட்டுவிட்டு 'புக்காரா' போகும்.
புழுதியைத் தட்டிவிட்டு
அந்த இடத்திலேயே மீண்டும் பாய்விரிப்போம்.
சிதறிப் போன சுவரின் கற்களை எடுத்தே
அடுப்பு மூட்டி சமையல் தொடங்குவோம்.
விஜேதுங்கா!
என்னடா பொடியா செய்யப் போகிறாய்?
இது தமிழ்ச்சாதி.
திக்குளித்தும் தோல்கருகாச் சாதி.
கண்களினால் சுவாசித்து
மூக்கினால் பார்க்ம் வித்தியாசமானவர்கள்.
மலைகள் இல்லையென்று நாங்கள் தளரவில்லை.
ஆறுகளில்லையென்று அந்தரித்துப் போகவில்லை.
ஆழக் கிணறுவெட்டி நீரள்ளிக் குடிக்கின்றோம்.
ஆக மூன்று மாதங்களே இங்கு மழைபொழியும்.
என்றாலும் பச்சை நிறத்தில் தான்
எங்கள் மண் பாவாடை கட்டியுள்ளது.
இது தமிழ்ச்சாதி.
தெருப்புழுதியில் கயிறு திரித்து
தேரிழுக்கும் சாதி.
அப்பு விஜேயதுங்கா?
என்னசெய்யும் உத்தேசம்
படைகளை நடத்தி தடகளப் போட்டியா?
நல்லது நாளை சந்திப்போம்.
வெற்றிக் கம்பத்தைத் தொட்டபின்
வெள்ளிக் கிண்ணத்துடன் பேசுவோம்.
எதிரியை வாவென்று கடிதம் எழுதியாச்சு
தமிழனே! நீ என்ன செய்கின்றாய்.
பூச்செடிகளுக்ச் கொண்டும்,
மிருகங்களுக்குக் கொம்பும் ஏன் கொடுக்கப்பட்டது?
போராட வழங்கிய போர்க்கருவிகள் அவை.
'அழிக்கவருபவனை அழித்துவிடு'
கீதையின் சாரமே இதுதான்.
நிமிர்ந்து நிற்பவையே நிலைக்கும்.
விழுந்து கிடப்பன் யாவும் மிதிக்கப்படும்.
தலைநிமிர்ந்த பனைகளைத் தறிக்கக்கூடாது.
சட்டமே வந்துவிட்டது.
ஆனால்...
முல்லைக்கொடியை மதிக்கக்கூடாது என்று
ஏன் எவரும் குரலெழுப்பவில்லை?
காலில் விழுந்து கிடப்பவைகளை
எவரும் கணக்கெடுத்துக் கொள்ளவதில்லை
அனதால் தான்.
மனிதர்களுக்கும் இது பொருந்தும்.
தமிழனே!
மணிமுடிதரித்த உன் தலையில்
வெய்யிலுக்குத் தொப்பி போடவும் வெட்கப்படுகின்றாய்
எழுகுதிரைகள் பூட்டிய தேரில் உலாவந்தவனே!
அச்சமுறிந்த சைக்கிள்தானும் உன்னிடம் இல்லையா?
ஊருக்கெல்லாம் துணி நெய்து கொடுத்தவனே!
கோமணத்துண்டுக்கும் வழியற்றுப் போனாயா?
வாழும் வழிகள் ஆயிரம் சொன்னவனே!
அளும் உரிமையை மட்டும் யாரிடம் கொடுத்தாய்?
கொம்பும், முரசும், பேரிகையும் எங்கே?
கவசமும், வேலும், கைவாளும் எங்கே?
இவற்றையெல்லாம் எறிந்துவிட்டு
அன்னதானமடத்தில் என்னடா செய்கிறாய்?
இந்த மண்ணில் உனக்கொரு வரலாறு வேண்டும்.
இருந்தாய், வாழ்ந்தாய் என்பதற்கு
அடையாளம் வேண்டும்.
உன் தலைமுறைக்கு ஒரு சரித்திரம் இருக்கட்டும்.
உயிர் என்ன உயிர்.
அதைக்காட்டு பார்க்கலாம்.
உருவமற்ற ஒன்றுக்காக ஏன் அச்சப்படுகினறாய்.
எத்தனை காலம் வாழ்ந்தாய் என்பதில்
பெருமை கிடையாது.
எப்படி வாழ்ந்தாய் என்பதே மகிமைக்குரியது.
குறவண்ன் புழுவும், கும்புடுபூச்சியும் கூட
பூமியில்தான் வாழ்கின்றன.
யார்தான் கணக்கில் எடுத்தார்கள்?
போருக்கு வாவென்று
எதிரிக்குக் கடிதம் போட்டாச்சு
நீ புறப்படு.
பீளைசாறிய கண்களைத் திறந்துபார்
பாயைச் சுருட்டி அசைவிலேபோடு
தாயிடம் விடைபெறு.
உன் தங்கை எங்கே?
உனக்குமுன் அவள் களத்துக்குப் போய்விட்டாள்.
வெளியே பார் வெய்யில் அடிக்கிறது
இது போராடும் பூமி...
புலிகளின் காலம்...
பிரபாகரன் வழிகாட்டி...

புதவை இரத்தினதுரை
சித்திரை 1994

# பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதியை உறுதிப்படுத்துவது தொடர்பில் உறுதியான செயற்பாடுகள் இல்லாத பட்சத்தில் மனித உரிமை பேரவை பொறுப்புக்கூறலிற்கான சர்வதேச மூலோபாயங்களை பயன்படுத்தவேண்டும்

**– ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் மிச்செலே பச்செலேட்–**

பெப்ரவரி 26, 2022

பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதியை உறுதிப்படுத்துவது தொடர்பில் உறுதியான செயற்பாடுகள் இல்லாத பட்சத்தில் மனித உரிமை பேரவை பொறுப்புக்கூறலிற்கான சர்வதேச மூலோபாயங்களை பயன்படுத்தவேண்டும் என ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செலே பச்செலெட் தெரிவித்துள்ளார்.



இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே:

தற்போதைய அரசாங்கம் இலங்கையில் மோசமான சர்வதேச குற்றங்கள் இடம்பெற்றன என்பதை ஏற்றுக்கொள்ள தயாரில்லை என்பதையும், பொறுப்புக்கூறலை முன்னெடுக்க தயாரில்லை என்பதையும் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றது.

குற்றச்செயல்களில் ஈடுபட்ட சில அதிகாரிகளை உயர் பதவிகளில் அமர்த்தி தண்டனையின்மை கருத்தினை வலுப்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதியை உறுதிப்படுத்துவது தொடர்பில் உறுதியான செயற்பாடுகள் இல்லாத பட்சத்தில் மனித உரிமை பேரவை பொறுப்புக்கூறலிற்கான சர்வதேச மூலோபாயங்களை பயன்படுத்தவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.
(The current Government has continued to demonstrate its unwillingness to recognize those serious international crimes and pursue accountability but has also incorporated some military officials who may have been implicated in alleged war crimes into the highest levels of Government, reinforcing a narrative of impunity. In the absence of tangible results that ensure justice for victims, the Human Rights Council should continue to pursue international strategies for accountability)

ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டவர் அல்லது அல்லது உலகளாவிய அதிகார வரம்பினை உள்ளடக்கிய உள்நாட்டு அதிகார வரம்பின் கீழ் உள்ள நீதித்துறை நடவடிக்கை மூலம் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையில் சகல தரப்பினரும் இழைத்த சர்வதேச குற்றங்களை விசாரணை செய்வதற்கு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளுடன் ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையும் அதன் உறுப்புநாடுகளும் இணைந்து செயற்படவேணடும் எனவும் மனித உரிமை ஆணையாளர் பரிந்துரைத்துள்ளார்.
(The High Commissioner reiterates the recommendations she made in paragraph 61 of her 2021 report to the Council and Member States and further recommends that they:
[1] (a)Cooperate with victims and their representatives to investigate and prosecute international crimes committed by all parties in Sri Lanka through judicial proceedings in domestic jurisdictions, including under accepted principles of extraterritorial or universal jurisdictions and continue to explore possible targeted sanctions against credibly alleged perpetrators of grave human rights violations and abuses)

கடந்த கால மனித உரிமை மீறல்களிற்கு பொறுப்புக்கூறல் இல்லாதது குறித்தும், பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளிற்கு மதிப்பில்லாதமை குறித்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் தொடர்ந்தும் கரிசனை கொண்டுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களில் நீதித்துறையினதும் ஏனைய முக்கிய ஸ்தாபனங்களினதும் சுதந்திரம் இல்லாமல்போயுள்ளது.

மேலும் இராணுவமயப்படுத்தலை நோக்கிய நகர்வுகளும் அரச ஸ்தாபனங்களில் சிங்கள தேசியத்தையும், பௌத்தத்தையும் அதிகளவு முன்னிறுவதையும் பார்க்க முடிகின்றது.

சிறுபான்மையினத்தவர்கள் புறக்கணிக்கப்படுவதும், சிறுபான்மை சமூகத்தினரின் நிச்சயமற்ற நிலையும் நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடான ஈடுபடுவதில் அரசாங்கத்தின் புதுப்பிக்கப்பட்ட வெளிப்படைதன்மையின் சமீபத்தைய அறிகுறிகளையும்,பயங்கரவாத தடைச்சட்டத்தில் மாற்றங்களை கொண்டுவருவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும் மனித உரிமை ஆணையாளர் கவனத்தில் எடுத்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமை கடப்பாடுகளை நிறைவேற்றுதவற்கும் மீண்டும் மோசமான மனித உரிமைகள் நிகழ்வதை தடுப்பதற்கும் அவசியமான சட்ட நிறுவன மற்றும் பாதுகாப்பு துறை சீர்திருத்தங்களை இலங்கை இன்னமும் ஆழமாக முன்னெடுக்கவேண்டும்.

நீதிமன்றத்தை அடைந்துள்ள கவனத்தை ஈர்த்த மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்ந்தும் தடைகளையும் பின்னடைவையும் சந்திப்பது குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளார்.

இலங்கையின் தொடர்ச்சியான ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக சர்வதேச குற்றங்களில் ஈடுபட்டவர்களையும், பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களையும் விசாரணைக்கு உட்படுத்த தவறியுள்ளதுடன் வலுவான நிலைமாற்றுக்கால நீதி பொறிமுறையை முன்னெடுக்க தவறியுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் இலங்கையில் மோசமான சர்வதேச குற்றங்கள் இடம்பெற்றன என்பதை ஏற்றுக்கொள்ள தயாரில்லை என்பதையும், பொறுப்புக்கூறலை முன்னெடுக்க தயாரில்லை என்பதையும் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றது.

வதாகவும் காணப்படவேண்டும் என மனித உரிமை ஆணையாளர் பரிந்துரைத்துள்ளார்.

அரசமைப்பில் மனித உரிமை பாதுகாப்பினை உறுதி செய்யும்போது மனித உரிமை பாதுகாப்பு தொடர்பான ஐக்கியநாடுகளின் பல்வேறு பரிந்துரைகளை கருத்திலெடுக்க வேண்டும். எனவும் மனித உரிமை ஆணையாளர் பரிந்துரைத்துள்ளார்.

சிவில்நிர்வாகத்தை நடத்துவதில் இராணுவத்தை நம்பியிருப்பதை குறைக்கவேண்டும், பொதுமக்களின் வாழ்க்கையில் இராணுவத்தின் செல்வாக்கை குறைக்க வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களிற் என்ன நடந்தது, அவர்கள் எங்கிருக்கின்றாகள் என்பதை கண்டறிவதற்காக விரிவான அணுகுமுறையை இலங்கை பின்பற்ற வேண்டும், என பரிந்துரைத்துள்ள மனித உரிமை ஆணையாளர் காணாமல் போனவர்கள் தொடர்பான இராணுவத்தின் ஆவணங்களை உடனடியாக பகிரங்கமாக்க வேண்டும், காணாமல் போனவர்களிற்கு காரணமானவர்கள் என கருதப்படுபவர்கள் அனைவரையும் சுயாதீன விசாரணைக்கு உட்படுத்தி பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு நஸ்ட ஈட்டை வழங்கவேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்த விடயங்களை பகிரங்கப்படுத்தவேண்டும், பாதிக்கப்பட்டவர்களிற்கு வெளிப்படைதன்மையை உறுதி செய்ய வேண்டும், அரச மற்றும் அரசசாராதவர்களிற்கு உள்ள தொடர்புகுறித்து சுயாதீன விசாரணையை முன்னெடுக்க வேண்டும்.




குற்றச்செயல்களில் ஈடுபட்ட சில அதிகாரிகளை உயர் பதவிகளில் அமர்த்தி தண்டனையின்மை கருத்தினை வலுப்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதியை உறுதிப்படுத்துவது தொடர்பில் உறுதியான செயற்பாடுகள் இல்லாத பட்சத்தில் மனித உரிமை பேரவை நீதிக்கான சர்வதேச மூலோபாயங்களை பயன்படுத்தவேண்டும் .

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் 2021 ம் ஆண்டு அறிக்கையின் 60 பத்தியில் இலங்கைக்கு தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை மீள வலியுறுத்தியுள்ளார்.

புதிய அரசமைப்பினை உருவாக்கும் நடவடிக்கைகள் பரந்துப்ட அனைவரையும் உள்ளடக்கிய கலந்தாய்வுகளின் அடிப்படையிலும்- நீதித்துறையினதும் இலங்கையின் தேசிய மனித உரிமை ஆணைக்குழு உட்பட ஏனைய முக்கிய ஸ்தாபனங்களினது சுதந்திரத்தை ஆழப்படுத்துவதாகவும் நல்லிணக்கம் சனத்தொகையின் அனைத்து உறுப்பினர்களும் முழுமையான மனித உரிமைகளை அனுபவிப்பதற்கு ஒருபகுதியாக காணப்படும் அரசியல் அதிகாரப்பகிர்வை முன்னோக்கி நகர்த்து

சர்வதேச சட்டங்கள் தொடர்பான தனது கடப்பாடுகளை இலங்கை பின்பற்றுவது உறுதி செய்வதற்காக பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் மேலும் ஆழமான சீர்திருத்தங்களை முன்னெடுக்கவேண்டும்.

சர்வதேச தராதரம் மரபுகளை அடிப்படையாக கொண்ட புதிய சட்டம் அறிமுகப்படுத்தும் வரை தற்போதைய சட்டத்தினை பயன்படுத்துவதை நிறுத்திவைக்க வேண்டும்.

முன்னைய அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல கடந்த இரண்டு வருடகால பகுதியில் இலங்கையில் சிவில் நிர்வாகத்தை இராணுவமயப்படுத்தும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

சிவில் நிர்வாகம் இராணுவ அதிகாரிகளின் கரங்களிற்கு செல்வது ஜனநாய ஆட்சியையும் நாட்டின் நீண்டகால குணாதிசயத்தையும் பாதிக்கும் என மனித உரிமை ஆணையாளர் கவலையடைந்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சிற்கு அப்பால் யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என குற்றம்சாட்டப்பட்ட தற்போதைய மற்றும் முன்னாள் அதிகாரிகள் பல அமைச்சுகளில் அதிகாரம் மிக்கபதவிகளில் உள்ளனர்.

# பசிலின் இந்திய பயணத்துக்கு முன் மோடிக்கு பறந்த முக்கிய கடிதம்

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன்

பெப்ரவரி 17.2022

சிறிலங்காவுக்கு இந்தியா வழங்க இருக்கின்ற பொருளதார நிவாரண உதவிப்பொதிக்கு முன்னராக சிறிலங்காவுக்கு இந்தியா வழங்கவுள்ள பொருளாதார நிவாரணப் பொதியை முறைப்படுத்துவதற்கு சிறிலங்காவின் நிதியமைச்சர் பசில் இராஜபக்ச நியு டெல்லிக்கு செல்லவுள்ள நிலையில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரனின் கடிதமொன்று டெல்லிக்கு சென்றுள்ளது.

கடுமையான அந்நிய செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சிறிலங்காவை மீட்டெடுக்கும் முகமாக அத்தியாவசியப் பொருட்களுக்கும் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யவும் உணவு இறக்குமதிக்காகவும் மற்றும் அந்நிய செலவானி இருப்பினை கட்டியெழுப்பவும் 900 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியாக கடனாக வழங்கவுள்ளது.

இந்நிலையில் சிறிலங்காவுக்கான இந்தியாவின் நிவாரண நிதியுதவிகள் செயலாக்க உறுதிப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய கடிதத்தில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 1.4ம் சரத்தில் குறிப்பிட்டவாறுஇ இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்கு பகுதி தமிழர்களின் தாயகம் என்பதனை உறுதியான செயலாக்க உத்தரவாதத்துடனேயேஇ சிறிலங்காவுக்கான எந்தவொரு உதவிகளும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ள பிரதமர் வி.உருத்திரகுமாரன் மூன்று முக்கிய விடயங்களை உறுத்திப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அ) இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைச் செயலாக்க வேண்டும்

ஆ) இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு தமிழர் தாயக பகுதியில் சிங்களர் குடியேற்றங்களை நிறுத்த வேண்டும்

இ) தமிழர் பகுதிகளுடன் சிங்களக் கிராமங்களை இணைத்து தமிழர் பகுதிகளின் எல்லை வரையறை செய்வதை நிறுத்த வேண்டும்.

சிங்களக் குடியேற்றங்கள் இராணுவத்தின் யுத்த வெற்றிச் சின்னங்கள் தொல்லியல் திணைக்களத்தின் பகுதிகள் என அடையாளப்படுத்தல், வனத்துறை திணைக்கள பகுதிகள் என தமிழர் பகுதிகளை சிறிலங்காவின் அரச இயந்திரங்கள் வலுக்கட்டாயமாக அபகரித்து நிறுவிவருவதன் ஊடாக தமிழர்களை அவர்களது நிலத்திலேயே சிறுபான்மையினர் ஆக்குகின்ற நோக்கத்தை கொண்டதாக உள்ளதென பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழர் பகுதிகளுடன் சிங்களக் கிராமங்களை சேர்த்து தமிழர் பகுதிகளில் சிங்கள மக்கள் தொகையை அதிகமாக்குவதற்காக எல்லைகளைப் பிரித்து சிறிலங்கா அரச இயந்திரம் வரையீடு செய்வதாகவும் தனது கடித்தில் பிரதமர் வி.உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார்.



தமிழர் பகுதிகளில் பெருமளவில் சிறிலங்கா இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருப்பது ஆக்கிரமிப்பாகவுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கைத்தீவில் சீனத்தின் அடிச்சுவடுகள் பெருகி வருவதைப் பொறுத்த வரை இந்தியாவுக்கும் சீனத்துக்கும் இடையே சிறிலங்கா அரசாங்கம் நடுநிலை காப்பது போல் பாசாங்கு செய்த போதிலும், சீனத்துடன் சிறிலங்காவின் உறவு என்பது குறுநில அரசின் உறவே என்பதுதான் உண்மை என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கோடிட்டுக் காட்டியுள்ள பிரதமர் வி.உருத்திரகுமாரன் இது இந்தியாவின் நலன்களுக்கு பாதகமான ஓர் தளமாக பயன்படுத்த முடியும் என்றும் எச்சரித்துள்ளார்.

தமிழர்கள் அழிக்கப்படுவது மனிதகுல இழப்பாக மட்டுமல்ல இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கும் பெருங்கேடாகவும் அது அமைவதோடு தமிழர்களின் நலனே இந்தியாவின் பாதுகாப்பு நலன் என்பதனையும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக வணிகம் ULAGA VANIKAM 2023
LIST YOUR BUSINESS
ON OUR BUSINESS DIRECTORY
உலக வணிகம் ULAGA VANIKAM
விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல
அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள்
செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு
நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை
பெருகச் செய்யும். அது உங்கள் வணிக
முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது
உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
தொலைபேசி எண்: 437.345.4203



# சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

“இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்.“



| | |
|---|---|
| **Amman Women & Child Development Center** | |
| Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai | 4 67 490 4955 |
| **Hermans Girls Home** | |
| Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai | 97 76 058 5344 |
| **Jesus Lives Girls Home** | |
| Main St., Kalmuanai - Amparai | 01 94 67 492 1161 |
| **Methodist Girls Home** | |
| Wesly School Rd, Kalmuanai - Amparai | 94 67 222 9182 |
| **RKM Sharatha Girls Home** | |
| Girls Vidyalaya Rd, Karaithivu Amparai | 05 94 67 222 3600 |
| **Seephe Divi Child Delelopment Centre** | |
| Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai | 94 67 226 1144 |
| **Sri Indasara Child Development Centre** | |
| DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai | 94 27 562 2919 |
| **St. Maryís Boys Home** | |
| Yard Rd, Kalmunai - Amparai | 01 94 71 354 5782 |
| **Swami Vipuilanantha Boys Children Development Centre** | |
| Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai | 94 67 227 7514 |
| **Canaan Harvest Childrenís Home** | |
| No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla | 94 77 229 2022 |

| | |
|---|---|
| **Up Country Children Home** | |
| 19/6, Badulupitiya Rd - Badulla | 94 55 222 3335 |
| **Arutpani Girls Home** | |
| Beach Rd, Navakkuda - Batticaloa | 94 77 6849 |
| **Assisi Boys Home** | |
| Main Rd, Kurukulmadam - Batticaloa | 94 65 225 0313 |
| **Benthel Boys Children Home** | |
| Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa | 94 77 632 8577 |
| **Benthel Girlís Children Home** | |
| Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa | 94 77 632 8577 |
| **Bethel Girls Children Home** | |
| Vipulanada Rd, Valichenai - Batticaloa | 94 77 515 3078 |
| **Eravur Children Care Home** | |
| Meerakerny Rd, Eravur - Batticaloa | 94 77 996 6345 |
| **Good Shepherd Children Home** | |
| Post Office Rd, Valaichenai - Batticaloa | 94 65 225 7400 |
| **Hari Boys Home** | |
| New Kalmuani Rd - Batticaloa | 94 65 222 3653 |
| **Jeevananthan Girls Home** | |
| Main Rd, Pudukuduirippu - Batticaloa | 94 65 365 0438 |
| **Kattankudy Boys Home** | |
| Kattankudy 01 - Batticaloa | 94 65 224 5308 |
| **London Sivan Kovil Girls Home** | |
| Main Rd, Settipalayam - Batticaloa | 94 65 205 6336 |
| **Managayarkarasi Girls Home** | |
| Maruthadi Rd - Batticaloa | 94 65 205 7310 |
| **Manikkavasagar Boys Home** | |
| Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa | 94 77 191 3037 |
| **Methodist Girls Home** | |
| Bar Rd, Kotamunai - Batticaloa | 94 65 222 5402 |
| **Miyani Boys Home** | |
| Miyani nagar, Thannamunai - Batticaloa | 94 77 459 0298 |
| **Miyani Girls Home** | |
| Miyani nagar, Thannamunai - Batticaloa | 94 77 792 6410 |
| **Pariyowan Boys Home** | |
| Trinco Rd, Santhurukondan - Batticaloa | 94 05 222 2524 |
| **Ramakrishana Boys Home** | |
| New Kalmunai Rd, Kalladi - Batticaloa | 94 65 222 2752 |
| **Ramakrirushana Girls Home** | |
| New Kalmunai Rd, Kalladi - Batticaloa | 94 65 222 2752 |
| **Sakthi Girls Home** | |
| Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa | 94 65 225 0745 |
| **Shakthi Girls Home** | |
| Arasadi Thervu, Kokaticholai - Batticaloa | 94 65 364 2290 |
| **Shanthi Bawan Girls Home** | |
| Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa | 94 65 222 2524 |
| **Spaks Girls Home** | |
| Main Rd, Periya Kallaru - Batticaloa | 94 67 222 1875 |
| **Thilahawathiyar Girls.Children Home** | |
| Main St., Kathiraveli, Vaharai - Batticaloa | 94 77 629 8461 |
| **Thilahawathiyar Girls Home** | |
| Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa | 94 65 225 1166 |
| **Thiruniyanasampathar Gurukulam** | |
| Main Rd, Kaluthavalai - Batticaloa | 94 65 225 0277 |
| **Trust Village Womens Development Center** | |
| Savukady Rd, Mayilampavelhi - Batticaloa | 94 76 789 7573 |
| **Vidhyajothi Boys Home** | |
| Central Rd - Batticaloa | 94 77 481 6576 |
| **Vipulanantha Children Home** | |

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101
**Vivehanada Children Home**
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442
**Yoga Suwami Saiva Girls Children Home**
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420
**St.Joseph Elders Home**
Trinco Rd- Batticaloa 94 71 851 1951
**Swami Vipulananthar Elder Home**
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202
**Ozanam Centre**
Sathurukondan - Batticaloa 94 65 365 8636
**Uthayam Association of Visually Handicapped**
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

**Elim Boys Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824
**Elim Girls Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962
**Forth Sq Girls Child Development Center**
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109
**Hindu Board Boys Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304
**Hindu Board Girls Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082
**Holy Family Girls Child Development Center**
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270
**Karunai Girls Child Development Center**
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334
**Karunalayam Annai Krishnabai Girls C. D. C.**
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873
**Karunalayam Boys Children Development Center**
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002
**Salvation Army Girls Child Development Center**
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696
**SOS Village Child Development Center**
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711
**Sri Pramanatha Girls Child Development Center**
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004
**Thurkkapuram Girl Child Development Center**
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894
**Valluvar Girlsí Child Development Center**
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513
**Mother Teresa Elder Home Amithi Illam**
Kondavil - Jaffna 94 21 223 0302
**Sivapoomi Elders Home**
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230
**Sivapoomi School ForChildren with Special Needs**
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894
**Vaalvagham-Home for the Vissually Handicapped**
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

**Aruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313
**Aropanam Boys Child Development Center**
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088
**Gandhi Nilaya Chidren Home & Training Centre** - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461
**Holy Family Girls Child Development Center**
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115
**Karuna Nilayam Girls Child Development Center**
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836
**Mahadeva Saiva Boy Child Development Center**
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121
**Mahadeva Saiva Girls Child Development Center** (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119
**Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)**
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118
**Sencholai Boysí Child Development Center**
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308
**Sencholai Girlí Child Development Center**
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504
**Thangamma Elders Home** -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619
**Trist Children Home**
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694
**Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home**
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162
**Association. to Empowerthe Special Needs Children**
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776
**Killinochchi Special Needs Newtwork**
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

**Annai Girlsí Child Development Center**
Uppukulam - Mannar 94 23 222 2483
**Anpu Sakotharar Boys Child Development Center**
Keeri - Mannar 94 77 534 4427
**Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center**
Pesalai - Mannar 94 23 205 0095
**Sivanarul Boys Child Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998
**Sivanarul Girls Children Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804
**Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory**
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

**Saradha Mission Child Development Center**
Kirigalpotta - Matale 94 66 205 1721
**St. Francis Child Development Center**
Vihaara Rd - Matale 94 77 438 4851

**Anpu Boysí Child Development Center**
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502
**Barathy GirlChild Development Center**
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234
**Ladani Girls Child Development Center**
Silawaththai - Mullaitivu 94 77 422 8853
**Nallayan Girls Child Development Center**
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034
**Pari Girlsí Child Development Center**
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034
**Iniya Vazhvu Illam**
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

**Happy Home Child Development Center**
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174
**Maranatha Child Development Center**
Hatton - Nuwara Eliya 94 51 222 2489
**Rainbow Child Development Center**
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680
**Shalom Child Development Center**
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

**Annai Saratha Children Home**
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506
**Anpu Illam**
167, Central Rd - Trincomalee 94 26 222 1214
**Four Square**
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170
**Grace Girls**
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644
**Hasanath Boys**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**Hasanath Girls**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**My Fatherís House Boys Children Homes**
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861
**Rawlathul Athfal**
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438
**Rewathe Child Development Center**
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328
**Sivayogasamayam Swami Gangadaranatha Children Home**
64 Main St. - Trincomalee 94 26 222 2049
**Sri Sanmuga Boys** 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234
**Sri Sanmuga Girls** 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521
**Thapovanam Boys**
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Thapovanam Girls** Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Deva Anpu Children Home**
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859
**Hindu Anpakam Children Home**
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683
**Salvatorian Girls Home**
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577
**Sri Ahilandeswary Children Home** Kovilkulam - Vavuniya 94 24 222 1685
**Mother Teresa Elder Home** Pampaimadu -Vavuniya 94 24 205 4494
**Sivan Elders Home**
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827
**Thanagamma Eleders**
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

# ஈழத்தமிழ் நோக்கு நிலையிலிருந்து இந்தியாவை அணுகுவது



## அரசியல் ஆய்வாளர் நிலாந்தன்




பெப்ரவரி 13, 2022

கடந்த ஞாயிற்றுக்கிழமை சக்தி தொலைக்காட்சியின் மின்னல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் "நாங்களும் இந்தியாவின் தலையீட்டைக் கோரித்தான் நிற்கிறோம்" என்று கூறு கிறார். அவருடைய கட்சி கிட்டு பூங்காவில் ஒழுங் குபடுத்திய ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட பிரகடனத்திலும் இந்தியா ஒரு நட்பு சக்தி என்று கூறப் பட்டிருக்கிறது. இந்தியத் தலையீட்டைக் கேட்பது என்று முடிவெடுத்தால் ஆறு கட்சிகளின் கூட்டு அழைத்தபோது அதில் இணைந்து கூட்டுக்கோரிக்கையின் வடிவத்தை மாற்றியிருந்திருக்கலாந்தானே? மேலும், 13க்கு எதிராக அக்கட்சி மக்கள் மத்தியில் தெரிவிக்கும் கருத்துக்களை தொகுத்துப் பார்த்தால் அக்கட்சி உண்மையாகவே இந்தியாவின் தலையீட்டை கோரி நிற்கின்றதா? என்ற சந்தேகமே எழுகிறது.

எனினும், கடந்த புதன்கிழமை மீனவர்களின் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அக்கட்சி கொண்டுவர இருந்த ஒத்திவைப்பு பிரேரணையை, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் வேண்டுகோளை ஏற்று அக்கட்சி கையாண்ட விதம் பொசிற்றிவ் ஆனது.

13ஆவது திருத்தத்தை எதிர்ப்பது என்பது அதன் தர்க் கபூர்வ விளைவாக இந்தியாவுக்கு எதிராகத்தான் அமை யும். ஏனென்றால் கடந்த 34 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியா 13வது திருத்தத்தை ஒரு வாய்ப்பாடு போல சொல்லி வருகிறது. எனவே தமிழ்மக்கள் ஏற்றுக் கொள் ளாத ஒரு தீர்வை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்தியா முன்வைக்கும்போது அதை எதிர்ப்பவர்கள் தவிர்க்கவியலாதபடி இந்தியாவையும் எதிர்க்க வேண்டித் தான் இருக்கும். ஆனால் இங்கே பிரச்சினை என்ன வென்றால் அதற்காக இந்தியா ஒரு பகை நாடா என்பது தான்.

கிட்டு பூங்கா பிரகடனம் இந்தியாவை ஒரு நட்பு நாடாக சித்தரிக்கிறது. ஆனால், ஈழத்தமிழர்கள் இந்தியாவை நட் புநாடாக பார்த்து அதை நம்பவும் தேவையில்லை, பகை நாடாகப் பார்த்து அதை எதிர்க்கவும் தேவையில்லை. அதை தமது நோக்கு நிலையிலிருந்து கையாள்வதே பொருத்தமாக இருக்கும். அதற்குப் பெயர்தான் ராஜதந் திரம். இந்தியாவை ஒரு நட்பு நாடாக நம்பினால் அதன் விளைவாக இந்தியாவின் மீது நம்பிக்கைகளை முதலீடு செய்ய வேண்டியிருக்கும். அதுதான் முதலாம் கட்ட ஈழப் போரின்போது நடந்தது. ஆனால் இந்தியா ஒரு பேரரசு. அது ஈழத் தமிழர்களை அதன் பேரரசு நலன்களின் அடிப் படையில்தான் அணுகும். எனவே இதுவிடயத்தில் நட்பு-பகை என்பதெல்லாம் கிடையாது. நலன்சார் பேரம்தான் உண்டு. இந்தியாவை நட்பு - பகை என்ற இருமைகளுக்கு அப்பால் கையாளப்பட வேண்டிய ஒரு பிராந்திய பேரரசு என்ற அடிப்படையில் பொருத்தமான ஒரு வியூகத்தை வகுப்பதுதான் சரியாக இருக்கும்.

ஈழத்தமிழர்கள் மத்தியில் இந்தியாவை குறித்து ஒரு வித கறுப்பு-வெள்ளை சிந்தனைதான் உண்டு. ஒன்றில் இந்தியாவை நேசிக்கிறார்கள், அல்லது இந்தியாவை வெறுக்கிறார்கள். இரண்டுக்குமிடையே இந்தியாவை புத்திசாலித்தனமாக கையாளவேண்டும் என்ற நோக்கு நிலை ஈழத்தமிழர்கள் மத்தியில் மிகவும் பலவீனமாகவே காணப்படுகிறது.

ஈழத்தமிழர்கள் இந்தியாவை ஒரு நட்பு நாடாக பார்க்கும் நிலைமை எங்கிருந்து உற்பத்தியாகிறது? அது தமிழ கத்தை மையமாக வைத்து சிந்திக்கும்போதுதான் உற்பத் தியாகிறது. கடலால் பிரிக்கப்பட்டிருக்கும் தமிழகம் மொழி யால் இனத்தால் பண்பாட்டால் ஈழத்தமிழர்களிடமிருந்து பிரிக்க முடியாத ஒரு நிலத்துண்டு. எனவே தமிழகத் துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையில் உள்ள இந்த



பிணைப்பை-கனெக்டிவிற்றியை-வைத்துக் கொண்டு இந்தியாவை ஈழத்தமிழர்கள் பார்க்கிறார்கள்.

தமிழகம் எனப்படுவதுகூட ஒற்றைப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு சனத்தொகையோ, நிலப் பரப்போ அல்ல. அது பல அடுக்குகளைக் கொண்டது. அங்கே ஆளுங்கட்சி உண்டு. ஏனைய கட்சிகள் உண்டு. ஈழ அபிமானிகளாகக் காணப்படும் கட்சிகள் உண்டு. ஈழ உணர்வாளர்கள் உண்டு. இவை தவிர தமிழகத்தின் பொதுசனம் உண்டு. இதில் தமிழகத்தின் ஆளும் கட்சி இந்திய சமஸ்டி கட்டமைப்புக்கு கட்டுப்பட்டது. அது இந்திய நடுவண் அரசின் வெளியுறவுக் கொள்கையை மீறி ஈழத் தமிழர்களுக்காக முடிவெடுப்பதில் வரையறைகள் இருக் கும். ஏனைய கட்சிகளும்கூட ஈழத்தமிழர்களின் விவ காரத்தை தமது தேர்தல் அரசியல் நோக்கு நிலையி லிருந்தே அணுகும். இதுவும் ஈழத்தமிழர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. ஆனால் ஈழத்தமிழர்களின் நெருங்கிய நண்பர்களாக காணப்படும் கட்சிகளும் அரசியல் வாதிகளும் உணர்வாளர்களும் தேர்தல் மையநோக்கு நிலைகளுக்கு அப்பால் ஈழத்தமிழர் களுக்காக அர்ப்பணிக்க கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இது ஒரு சிறு தொகை. இது தவிர தமிழகப் பொதுசனங்கள் ஈழத்தமிழர்களுக்கு ஏதும் நடந்தால் கொதித்து எழுவார்கள். ஆனால் அக்கொதிப்பை மடை மாற்றவும் திசைதிருப்பவும் தலைவர்களால் முடியும். இதுதான் தமிழகம். எனவே தமிழகத்தை தட்டையாக ஒற்றைப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்ளக்கூடாது.

தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான இனமொழி உறவை அடிப்படையாக வைத்து இந்தியா ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் தலையிடுகிறது என்ற ஒரே காரணத்துக்காக ஈழத் தமிழர்களின் விவகாரத்தை இந்தியா தமிழகத்துக்கு ஊடாகத்தான் பார்க்கும் என்றோ, அல்லது இனமான உணர்வுக்கூடாகத்தான் அணுகும் என்றோ எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. ஒரு பேர ரசின் வெளியுறவுக் கொள்கையை அவ்வாறு விளங்கிக் கொள்ளவும் கூடாது.

ஒரு பேரரசின் வெளியுறவுக் கொள்கை அதன் அரசியல் பொருளாதார ராணுவ நலன்களின் அடிப்படையில்தான் வடிவமைக்கப்பட்டிருக்கும். அயல் நாடுகளுடனான உற வும் அவ்வாறுதான் அமையும். புதுடில்லிக்கு கொழும் புக்கும் இடையிலான உறவும் அப்படித்தான். எனவே அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் நலன்சார் உறவுகளின் அடிப்படையில்தான் இந்தியா இலங்கையை அணுகும். அதிலும்கூட கொழும்பில் இருக் கும் அரசாங்கத்தைத்தான் அவ்வாறு அணுகும். கொழும் பில் இருக்கும் அரசாங்கத்தின் நலனை பகைத்துக் கொண்டு இந்தியா ஈழத்தமிழர்களை முழுமையாக நெருங்கிவராது. கொழும்பில் இருக்கும் அரசாங்கம் பணிய மறுக்கும்பொழுது ஈழத்தமிழர்களை ஒரு கரு வியாகக் கையாண்டு அரசாங்கத்தின் மீது இந்தியா அழுத்தங்களைப் பிரயோகிக்கும். இவ்வாறு ஈழத் தமிழர் களை ஒரு கருவியாக பயன்படுத்த விளையும்பொழுது அதில் ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் இடை யிலான இன ரீதியான, மொழி ரீதியான, பண்பாட்டு ரீதியிலான இணைப்புகளை இந்திய மத்திய அரசு தனது புவிசார் அரசியல் நோக்கு நிலையிலிருந்து அணுகும். நிச்சயமாக ஈழத்தமிழர்களின் செண்டிமெண்டலான நோக்கு நிலைகளில் இருந்தோ அல்லது தமிழகத்தின்

# ஈழத்தமிழ் நோக்கு நிலையிலிருந்து இந்தியாவை அணுகுவது

இன உணர்வு நோக்கி நிலைகளிலிருந்தோ அணுகாது. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்திய-ஈழத்தமிழ் உறவை இந்த அடிப்படையில்தான் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆனால் ஈழத் தமிழர்களில் கணிசமானவர்கள் தமிழகத்துக்கும் தமக்கும் இடையிலான இனம், மொழி, பண்பாடு சார்ந்த நெருக்கத்துக்கூடாக இந்திய மத்தியஅரசை விளங் கிக்கொள்ள முற்படுகிறார்கள். இது தவறு. இதுவிடயத்தில் தமிழகத்துக்கும் தமிழர்களுக்கும் இடையிலான கனெக்ரிவிட்டியை இந்திய நடுவண் அரசு அதன் பேரரசு நோக்குநிலையி லிருந்து பயன்படுத்துகிறது என்பது ஒரு கொடுமையான யதார்த்தம். ஏனென்றால் அரசுகள் எப்பொழுதும் அப்படித்தான் நடந்து கொள்ளும். இது மேற்கத்தைய அரசுகளுக்கும் பொருந் தும். சீனாவுக்கும் பொருந்தும். எனவே ஈழத் தமிழர்கள் இந்தியாவை சென்டிமென்டலாக அணுகும் அந்த நோக்கு நிலையில் இருந்து விடுபட வேண்டும். மாறாக புத்தி பூர்வமாக அணுக வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லையென்றால் இந்தியாவுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற தர்க்கத்தை பலமாக முன்வைக்கவேண்டும். ஈழத்தமிழர்கள் மிகநீண்ட கடல் எல்லைகளின் சொந்தக்காரர்கள். தமிழ்க் கடலை கட்டுப்படுத்தும் எந்த ஒரு நாடும் இந்தியாவின் தெற்கு மூலையை கட்டுப்படுத்தும். எனவே தமிழ்க் கடலை இழந்தால் இந்தியா தனது தெற்கு வாசலின் பாதுகாப்பையும் இழக்க நேரிடும். இந்த தர்க்கத்தை ஈழத்தமிழர்கள் முன் வைக்கலாம். இந்தியாவை நோக்கி ஈழத்தமிழர்கள் முன்வைக்கக்கூடிய கோரிக்கைகளும் அந்த அடிப்படையில் அமைவது நல்லது.

ஒரு மக்கள் கூட்டம் வெளிநாடுகளை நோக்கி அதன் கோரிக்கைகளை முன்வைக்கும்போது வெளிநாடுகள் ஏற்றுக்கொள்ளும் என்று பார்த்து அந்தக் கோரிக்கைகளை வடிவமைக்கத் தேவையில்லை. மாறாக தங்களுக்கு எது தேவை என்ற அடிப்படையில் உச்சமான கோரிக்கைகளை முன் வைக்கலாம். பின்னர் அதற்காக உழைக்க வேண்டும். இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைத்திருக்கும் கட்சிகள் இந்த விடயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் 13வது திருத்தம் என்ற கோரிக்கையை ஈழத்தமிழர்கள் முன்னிலைப்படுத்த தேவையில்லை. அதேசமயம் 13ஆவது திருத்தத்தை எதிர்ப்பதாக கூறிக்கொண்டு இந்தியா தொடர்பான தனது அணுகுமுறைகளில் ஒரு குழப் பமான படத்தை வெளிக்காட்டும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் இதில் ஒரு தெளிவான நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். அக்கட்சியின் தலைவர்கள் தாங்கள் இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்கு எதிர் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் 13ஐ அவர்கள் எதிர்க்கும் விதம் அக்கட்சியிடம் இந்தியாவை என்கேஜ் பண்ணுவதற்குரிய பொருத்த மான வெளியுறவுத் தரிசனம் ஏதும் உண்டா என்ற கேள்வியை எழுப்புகின்றது.




இந்தியா ஒரு பிராந்திய பேரரசு. ஈழத்தமிழர்கள் அரசற்ற ஓரினம். இனப்படுகொலை, புலப் பெயர்ச்சி போன்றவற்றால் மெலிந்து போய் இருக்கும் ஒரு மக்கள் கூட்டம். ஈழத்தமிழர்கள் மத்தியில் மகப்பேற்று விகிதமும் கவலை தரும் வகையில் குறைந்துவருகிறது. சில ஆண் டுகளில் ஈழத் தமிழர்கள் இலங்கைத் தீவின் இரண்டாவது சிறிய தேசிய இனமாக மாறக்கூடிய ஆபத்து உண்டு என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள். எனவே ஈழத்தமிழர்கள் குறுகிய காலத்துக்குள் தமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு ஒரு வழி வரைபடத்தை தயாரிக்க வேண்டும்.

ஓர் அரசற்ற இனத்தைப் பொறுத்தவரை அல்லது சிறிய தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை பக்கத்துப் பேரரசுதான் இறுதியிலும் இறுதியாக தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதனை உலகின் நவீன வரலாறு உணர்த்துகிறது. இப் பொழுது கொதிநிலையில் இருக்கும் உக்ரேன் விவகாரத்திலும் இதுதான் நடக்கிறது. ரஷ்யா கிரிமியாவை ஆக்கிரமித்தது இந்த அடிப்படையில்தான். தீபெத்தில், பலுசிஸ்தானில், காஷ்மீரில் போராடும் மக்களுக்கு மீட்சி கிடைக்காமல் இருப்பதும் அந்த அடிப்படையில்தான். பங்களாதேஷ் தனிநாடு ஆகியதும் அந்த அடிப்படையில்தான். பின்லாந்து மிக நுட்பமான ஒரு வெளியுறவுக்கொள்கையை வடிவமைக்க வேண்டி வந்ததும் அந்த அடிப்படையில்தான். கிழக்குத் திமோரில் பொதுமக்கள் வாக்கெடுப்பின் முடிவுகளை இறுதியிலும் இறுதியாக நடைமுறைப்படுத்தியது பக்கத்தில் இருக்கும் பலமான அரசாகிய ஒஸ்ரேலியாதான். எனவே சிறிய தேசிய இனங்களின் போராட்டங்களைப் பொறுத்தவரை இறுதி முடிவை தீர்மானிப்பது அருகிலுள்ள பெரிய அரசுகள்தான் என்பதே உலகளாவிய அனுபவம் ஆகும்.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் பிராந்திய அரசியலை கெட்டித் தனமாக அணுக வேண்டும்..இந்தியாவின் நலன்களுக்கும் ஈழத் தமிழ் நலன்களுக்கும் இடையிலான பொதுப்புள்ளிகளைக் கண்டுபிடித்து பேரம் பேச வேண்டும்.

நன்றி: நிலாந்தன்

**நான் சாகலாம்;**

**நீ சாகலாம்;**

**ஆனால் – நாங்கள் சாகக்கூடாது.**

லெப். கேணல் குணா




**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு**

**தொடர்புகளுக்கு**

**437.345.4203**

**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# தமிழீழ தமிழர்களுக்கு சிறீலங்கா பாராளுமன்றம் ஒருபோதும் தீர்வு தராது!

**பாராளுமன்ற உறுப்பினர், முன்னால் நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்**

பெப்ரவரி 16, 2022

சிறீலங்கா பாராளுமன்றம் தமிழீழத் தமிழர்களுக்கு எந்தக் காலத்திலும் ஒரு தீர்வைத் தராது. ஆட்சியில் உள்ளவர்களுக்கு நெருக்குதல்களை உருவாக்கியே நாம் தீர்வைப் பெற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஆறு கட்சிகள் இணைந்து நேற்று நடத்திய ஈழத் தமிழர் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வும் தேசிய, பிராந்திய, சர்வதேச நிலவரங்களும் கருத்தரங்கு நேற்று கல்வியங்காடு இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசும்போதே விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவரது உரை முழு விபரம் வருமாறு, ஆறு கட்சிகள் சேர்ந்து நடத்தும் இந்தக் கருத்தரங்கத்தில் பங்குபற்றுவதில் மனமகிழ்வடைகின்றேன். சென்ற வாரம் Times of India என்ற இந்தியப் பத்திரிகையின் இலத்திரனியல் ஊடகத்திற்கு ஒருபேட்டி அளித்தேன். அங்கு நான் கூறிய ஒருவிடயம் பத்திரிகைகளில் வெளிவரவில்லை. அதனை இப்பொழுது உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகினறேன்.

இது வரை பிரிந்து நின்ற ஆறு கட்சிகளும் எவ்வாறு ஒருமித்து அந்தக் கடிதத்தை பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுத முடிந்தது என்று செவ்விகண்டவர் கேட்டார். அதற்கு நான், எமது அரசியல் குறிக்கோள்களைப் பொறுத்தவரையில் எமக்குள் அதிகம் வித்தியாசம் இல்லை என்றேன். அவற்றை அடையும் மார்க்கம் பற்றியே எமக்குள் முரண்பாடுகள் உண்டு என்றேன். அதை விளக்குமாறு கோரப்பட்ட போது, நான், எமது தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்துமே **"ஒற்றையாட்சி வேண்டாம் சமஷ்டி ஆட்சி முறையே வேண்டும்"** என்று தான் கோரி வருகின்றோம் என்றேன். எமது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஒரு படி மேலே போய் கூட்டு சமஷ்டியை எமது குறிக்கோளாகக் குறிப்பிட்டுள்ளோம் என்றேன். ஆகவே எமது குறிக்கோள் ஒன்றே அதனை அடையும் விதத்தில் எமக்குள் வேற்றுமைகள், வித்தியாசங்கள், முரண்பாடுகள் உண்டு என்றேன். நான் அங்கு கூறியதை இங்குள்ள அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன். ஏதோ காரணத்திற்காக செவ்வி கண்டவர் இக்கேள்வியையும் பதிலையும் தணிக்கை செய்துவிட்டார்.

ஆகவே முக்கியமான ஒரே குறிக்கோளை வைத்திருக்கும் எமது ஆறு கட்சிகளும் இன்று இந்த கருத்தரங்கத்தை ஒருமித்து நடத்துவதில் வியப்பொன்றுமில்லை.

இந்தியாவிற்கெதிரான கருத்துடைய எமது 24 கரட் கட்சி, அதன் தாய்க் கட்சியின் யாப்பு இன்று வரையில் ஒற்றையாட்சியே எமக்கு வேண்டும் என்று கூறினாலுங்கூட, தேர்தல் காலத்தில் சமஷ்டியே தமது குறிக்கோள் எனக் கூறி வருகின்றார்கள். ஆகவே அவர்களும் கொள்கை ரீதியாக எங்களுடன் தான்! மலை உச்சியில் இருந்து உண்மை உணர்ந்து அவதரணம் செய்து மக்களுடன் மக்களாக நின்று சிந்தித்து எங்கள் எல்லோருடனும் ஒருங்கிணைந்து செயலாற்ற அக்கட்சி ஒத்துக் கொண்டிருந்தால் எமதுமக்களின் அரசியல் பலம் இன்னும் மேலோங்கியிருக்கும். இப்பொழுதும் காலம் கடந்துவிடவில்லை என்று அவர்களுக்கு இந்த உரையின் ஊடாக அன்புடன் எடுத்துக்கூறிவிட்டு இன்றைய தலையங்கத்திற்கு வருகின்றேன்.

**"ஈழத் தமிழர் தீர்வில் நாடாளுமன்றத்தின் வகிபாகம்"** என்பது தலையங்கம். எனவே தமிழ்ஈழத் தமிழருக்கு அப்பாற் போய் இலங்கை எங்கிலும் வாழும் சகல தமிழ் மக்களையும் உள்ளடக்கியே தலையங்கம் நிற்பதை நாங்கள் அவதானிக்க வேண்டும். தமிழீழம் என்றால் இலங்கையின் வடக்கு கிழக்கையே அச் சொல் குறிக்கும். ஈழம் என்றால் முழு இலங்கையையும் குறிக்கும். எனவே வடக்கு கிழக்குத் தமிழ் மக்களுக்கு அப்பால் சென்று மலையகத் தமிழர்களையும் வடக்குகிழக்கு தவிர்ந்த கொழும்புத் தமிழர்களையும் உள்ளடக்கிய மற்றைய மாகாணத் தமிழ் மக்களையும் ஒன்று சேர்த்தே மேற்படி தலையங்கம் தரப்பட்டுள்ளது. அதாவது பொதுவாக இந்நாட்டின் தமிழ் மக்களின் தீர்வில் பாராளுமன்றத்தின் வகிபாகம் என்னவாக இருக்கலாம் என்பதே கேள்வி. அப்படித்தான் நான் இந்தத் தலையங்கத்தைப் புரிந்து கொண்டுள்ளேன். எனினும் நான் பொதுவாகவும் தமிழீழத் தமிழர்கள் பற்றி சிறப்பாகவும் சிந்தித்துப் பேச விழைகின்றேன்.

முழு நாட்டினதும் தமிழ் மக்களைப் பற்றிப் பார்க்கும் போது நாம் சுதந்திரம் கிடைத்த காலத்திற்கு முன்பிருந்தே ஆராய வேண்டியுள்ளது. ஏனென்றால் இலங்கைக்கான பாராளுமன்றம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றிய சதிகள் சுதந்திரத்திற்கு முன்னரே தொடங்கிவிட்டன. அச்சதிகளே இன்று இந்த ஒற்றையாட்சிக்கு உட்பட்ட பாராளுமன்றத்தை எமக்குத் தந்துள்ளன.

சதிகள் பற்றி ஆராய முன் சுமார் மூன்று நிமிடங்களுக்கு இந்நாட்டின் தமிழர்களைப் பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வையுடன் தொடங்கலாம் என்று நினைக்கின்றேன். ஏன் என்றால் எம்முள் பலருக்கு இலங்கைத் தமிழரின் வரலாறு பற்றி அதிகம் தெரியாது.

சிங்கள மக்களைப் போல மகாவம்சக் கதைகளையே அவர்கள் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இலங்கையின் தமிழ்பேசும் மக்களில் இலங்கைத் தமிழர்கள் 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இங்குள்ள ஆதிவாசிகளான தமிழ்ப்பேசும் மக்களுடன் அந்தந்த காலகட்டத்தின் போது மேலதிகத் தமிழர்கள் இங்கு வந்து சேர்ந்துள்ளார்கள் என்பது தான் வரலாறு.

நாம் பலதரப்பட்ட தமிழர்களின் வாரிசுகள்! பாண்டிய, பல்லவ, சோழ, சேர, ஆரிய சக்கரவர்த்திகள் போன்றோர் இங்கு வந்த போது அவர்கள் தம் மக்களையும் தம் நாட்டில் இருந்து கொண்டு வந்து இங்கு குடியேற்றினார்கள். கடைசியாக வந்தவர்களே பிரிட்டிஷார் இங்கு கொண்டு வந்த எமது மலையக சகோதர சகோதரிகள். மதத்தால் வித்தியாசமானவர்களாக இருந்தாலும், பெரும்பான்மை கிழக்கிலங்கை முஸ்லீம்களும் தென்னிந்தியாவின் குறிப்பிட்ட இடங்களில் இருந்து இங்கு வந்து குடியேறியவர்களே. அவர்களின் அழகு தமிழ்ப் பேச்சுவழக்கு அதனை ருசிப்படுத்துகின்றது.

ஆதித்தமிழர்கள் குமரிக்கண்ட மக்களின் வழித்தோன்றல்கள் என்று கூறப்பட்டாலும் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் தான் இரும்புக் காலப் பண்பாடு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது என்று சரித்திர ஆசிரியர்கள் இதுவரையில் கணித்துள்ளார்கள். கீழடி அகழ்வுகள் எமது சரித்திர அறிவை மாற்றியது போல் இந்து சமுத்திர ஆழ் கடல் ஆராய்ச்சிகள் குமரிக்கண்ட நாகரிகம் பற்றி ஒரு நாள் பறைசாற்றுவன. அப்போது எமது சரித்திரப் பார்வை வேறுபடும். எனினும் தற்போதைய சரித்திரக் கணிப்பைப் பார்ப்போம்.

தலைசிறந்த இந்திய வரலாற்றாசிரியரான விமலா பேக்லே அவர்கள் யாழ் குடாநாட்டில் அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் தமிழ் நாட்டின் தெற்கில் வாழும் தமிழ் மக்களுடன் நெருங்கிய தொடர்புகளையும், ஒத்தியல்புகளையும் கொண்டிருந்தார்கள் என்று கூறியுள்ளார.

கலாசார ரீதியாக புத்தளத்தில் இருக்கும் பொம்பரிப்புக்கும் சுண்ணாகம்- கந்தரோடைக்கும் இடையில் நெருங்கிய ஒற்றுமைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதே போன்று தூத்துக்குடி மாவட்டத்தில் இருக்கும் ஆதிச்சநல்லூரில் கண்டுபிடித்த அகழ்வுகளும் ஒரே மாதிரி காணப்பட்டுள்ளன. இதனைப் பேராசிரியர் சுதர்ஷன் செனவிரத்ன, பேராசிரியர் இந்திரபாலா போன்றவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

அந்த அகழ்வுகளுள் சவ அடக்க தாழிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. தாழி சவ அடக்க முறை மூன்று இடங்களிலும் பின்பற்றியமை தெரிய வந்துள்ளது. மட்பாண்டத்தில் செய்யப்பட்ட பெரிய தாழிகளில் இறந்தவர் ஒருவருடைய உடலையோ, சாம்பலையோ அவற்றில் இட்டு இறந்தவர் பாவித்த முக்கியமான உபகரணங்களையும் அதனுள் போட்டு நிலத்தில் அடக்கம் செய்யும் முறையே தாழி சவ அடக்கமுறை. வட கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் இத் தாழிகள் பல அண்மைக் காலங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் ஆதிவாசிகள் வட இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்ற கருத்து தற்போது கைவிடப்பட்டுள்ளது. விஜயனும் அவரின் 700 சகாக்களும் வட இந்தியாவில் இருந்து வெளியேறி இங்கு வந்தார்கள் என்பதற்கு எந்த வித சான்றுகளும் இந்திய மாநிலங்கள் எவற்றிலும் இல்லை. மகாவம்சத்தை எழுதிய மகாநாம என்ற பிக்குவின் கற்பனையில் பிறந்தவர்களே மேற்படி விஜயனும் அவனின் சகாக்களும். பௌத்த மத விருத்திக்காக எழுதப்பட்ட கற்பனைக் கதையே மகாவம்சம்.

பல வருட காலமாக ஆதியில் இருந்து அதாவது 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து எமது தமிழ் மக்களும் சிங்களவர்களும் இந்நாட்டில் சமகாலத்தில் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்ற பிழையான கருத்தை எம் மக்கள் கொண்டிருந்திருக்கின்கிறார்கள்.

கி.பி 5ம் நூற்றாண்டில் அதாவது 1500 ஆண்டுகளுக்கு முன்னர் மகாவம்சம் என்ற நூல் பாளிமொழியில் வெளிவந்த போது சிங்களவர் என்ற ஒரு இனமே அப்பொழுது உருவாகவில்லை. சிங்களமொழி பாவனைக்கு வந்தது கி.பி 6ம் மற்றும் 7ம் நூற்றாண்டு அளவில் தான்.

சிங்களமொழியின் முதல் இலக்கண நூலான **"சிதத் சங்கராவ"** கி.பி 13வது நூற்றாண்டில் தான் வெளி வந்தது. 2000 வருடங்களுக்கு முன்னர் சிங்களமொழி இருந்திருந்தால் ஏன் அவர்களின் இலக்கணநூல் 700 ஆண்டுகளுக்கு முன்னர் தான் வெளிவந்திருக்க வேண்டும்? சிங்களம் என்பது மிக அண்மையமொழி. தமிழ், பாளி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளினதும் கிராமிய பாரம்பரிய மொழிகளினதும் சேர்க்கையே சிங்களமொழி. வேண்டுமென்றே சிங்களமொழியினதும் சிங்களவர்களினதும் வரலாறு திரிபுபடுத்தி கூறப்பட்டு வந்துள்ளது.

வரலாற்று ரீதியாகவும் DNA சோதனைகள் மூலமாகவும் தற்போது அறிந்து கொள்ளப்பட்டிருக்கும் வரலாற்று உண்மை என்னவென்றால் சிங்களவரின் மூதாதையர்கள் இலங்கைக்கு வெளியில் இருந்து வரவில்லை. ஆரியர் வருகை என்பது கட்டுக்கதை. உள்நாட்டிலேயே ஆதியில் இருந்து வந்த மக்கள் தான் தமிழர்களதும் சிங்களவர்களதும் மூதாதையர்கள் என்பது இன்று சரித்திர ஆசிரியர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இரு இனங்களும் ஒரே மூதாதையர்களின் வழித்தோன்றல்கள் என்பது வரலாற்று ரீதியாக தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் தமிழர்கள் வாழ்ந்து வந்த காலம் இற்றைக்கு 3000 வருடங்களில் இருந்து இற்றை வரையிலாகும். எமது மூதாதையர்களில் சிலர் சிங்கள மக்களாக மாறியது சிங்களமொழி நடைமுறைக்கு வந்த கி.பி 6ம், 7ம் நூற்றாண்டுகளிலாகும். பின்னர் வந்த இனம் இன்று பாராளுமன்றத்தில் முதன்மை இனமாக மாறியுள்ளது.

எமக்கு சுதந்திரம் கிடைத்த காலத்தில் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக இருக்க மற்றைய மாகாணங்களில் சிங்களவர்கள் பெரும்பான்மையினராக இருந்தார்கள்.

## சிங்களப்பேரினவாதம் உருவாக்கிய பொய்யே "மகாவம்சம்"

## மகாவம்சம் இன்றும் எழுதப்படுகிறது

# தமிழீழ தமிழர்களுக்கு சிறீலங்கா பாராளுமன்றம் ஒருபோதும் தீர்வு தராது!

பாராளுமன்ற உறுப்பினர், முன்னால் நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்

ஆகவே தமிழ்ப் பேசும் வட கிழக்கு மாகாணம் ஒரு அலகாகவும் மற்றைய மாகாணங்கள் இன்னொரு அலகாகவும் மொழிவாரியாகக் காணப்பட்டன.

எனவே நாடு பிரித்தானியரால் அவ்வாறே பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு மொழிவாரியாகப் பிரித்துப் பார்த்திருந்தால் சமஷ்டி முறையிலான அரசியல் யாப்பு கட்டாயமாகத் தரப்பட்டிருக்கும். ஏனென்றால் கண்டியர்கள் கூட சமஷ்டியையே விரும்பினார்கள்.

அவ்வாறு இலங்கைக்குச் சமஷ்டி வராது செய்தவர்தான் இலங்கை தேசத்தின் தந்தை என்று சிங்கள மக்களால் கொண்டாடப்பட்டுவரும் டி.எஸ்.சேனநாயக்க அவர்கள்.

அவரே இலங்கையின் முதல் பிரதம மந்திரியானார். ஆனால் அவர் தனது திருகுதாளங்களை சுதந்திரம் கிடைக்க முன்னரே தொடங்கியிருந்தார்.

தமிழ் மக்களுக்கு எதிரான முதல் சதி அவராலும் பின்னர் ஆளுநர் நாயகமாக பதவி வகித்த சேர். ஒலிவர் குணதிலக வாலுமே தான் இயற்றப்பட்டது. அவர்கள் இருவரும் எப்படியாவது இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடாக ஆங்கிலேயர்களால் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற திடமான நினைப்பில் இருந்தார்கள்.

அதனால்தான் 1943ல் பிரித்தானியா கூடிய அதிகாரங்களை இலங்கைக்கு வழங்க இருப்பதாக அறிவித்த பின் சேர் ஜவர் ஜெனிங்க்ஸ் என்ற அரசியல் யாப்பு சட்ட நிபுணருடன் சேர்ந்து இலங்கையின் சிறுபான்மையினர் எவருடனும் கலந்தாலோசியாது ஒரு ஒற்றையாட்சி அரசியல் யாப்பு வரைவை இலங்கைக்கெனத் தயாரித்து பிரித்தானிய கொலனி ஆதிக்க அரசிற்கு அவசர அவசரமாக கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்.

அப்படியிருந்தும் கொலனி அரசாங்கம் சிறுபான்மையினரை கலந்தாலோசியாது தமக்கு தரப்பட்ட வரைவை ஏற்காது சோல்பரி பிரபுவின் தலைமையில் ஒரு ஆணைக்குழுவை இங்கு அனுப்ப ஆயத்தமானார்கள். இதைக் கண்டு அதிர்ச்சியுற்ற சேனநாயக்காவும் குணதிலகாவும் இரண்டாவது சதியில் இறங்கினார்கள்.

இலண்டன் சென்று ஆணையாளர்களைச் சந்தித்து அவர்களைத் தம்பக்கம் ஈர்ப்பதே அந்தச்சதி. ஆணையாளர்கள் இங்கு வருமுன் சேர் ஒலிவர் குணதிலக இலண்டன் சென்று ஒலிவர் ஸ்டன்லி என்ற பிரித்தானிய மாநில செயலாளரைச் சந்தித்து அவருக்கூடாக சோல்பரி பிரபுவைச் சந்தித்து தமது வரைவே இலங்கைக்குச் சிறந்தது என்ற கருத்தை முன்கூட்டியே ஆணைக்குழுத் தலைவரின் மனத்தில் ஆழப்பதியப் பண்ணினார்.

இவ்வளவையும் மறைமுகமாகச் செய்துவிட்டு இருவரும் மூன்றாவது சதியில் இறங்கினார்கள். 22.12.1944ல் சோல்பரி ஆணைக்குழுவினர் இங்கு வந்தபோது டி.எஸ். சேனநாயக்கா **"இந்த ஆணைக்குழு எமக்கு வேண்டாம்"** என்ற ஸ்லோகத்தை எழுப்பி அதிகாரபூர்வமாக ஆணைக்குழுவை பகிஷ்கரித்தார்.

இதன் காரணம் கண்டியர்களாலும் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க போன்றவர்களாலும் தமிழர்களாலும் சமஷ்டி முறை பற்றி சமர்ப்பணங்கள் எழலாம் என்பதால். அவ்வாறான சமர்ப்பணங்களைத் தடுக்கவே இவ்வாறு செய்தார்.

ஆகவே கண்டியர்களும் பண்டாரநாயக்கவும் பொன்னமபலமும் சமஷ்டியை முன்வைக்க முன் பகிஷ்கரிப்பின் மூலமாக அவர்களின் வாய்களை டி.எஸ்.சேனநாயக்க அடைத்துவிட்டார். இவ்வளவுக்கும் ஏற்கனவே தமது வரைவை ஆணையாளர்கள் ஏற்கவேண்டும் என்பதற்கான பூர்வாங்க ஆயத்தங்களை டி.எஸ்.சேனநாயக்கவும் சேர் ஒலிவரும் சேர்ந்து செய்த பின்னர் தான் பகிஷ்கரிப்பு நடந்தது.

சமஷ்டியை ஆதரிக்கவேண்டிய ஜி.ஜி.பொன்னம்பலம் தன் கெட்டித்தனத்தை வெளிக்கொண்டு வருவதுபோல் 50க்கு 50ஐ முன்வைத்தார். அவர் சமஷ்டியை முன்வைத்திருக்கலாம். ஆனால் அவரின் 50க்கு 50ஐ ஆணைக்குழு நிராகரித்தது.

ஒற்றையாட்சி முறையை ஆதரித்து தமது அறிக்கையை அவர்கள் வெளியிட்டனர். சேனநாயக்க மீனுக்கு வாலையும் பாம்புக்குத் தலையையும் காட்டி தனது காரியத்தைச் சாதித்துக் கொண்டார்.

சேர் ஐவோர் ஜெனிங்ஸ் ஒருமுக்கிய கருத்தை அப்போது வெளியிட்டிருந்தார்-**"சோல்பரி ஆணையாளர்களின் சிபார்சு என்று புதிய அரசியல் யாப்பு வரைவு அழைக்கப்பட்டாலும் உண்மையில் திரு.சேனநாயக்காவின் வரைவே அது"** என்றார்.

**"செனட் சபை மட்டுந்தான் ஆணையாளர்களின் சிபார்சு"** என்று கூறினர். ஹுலுகல்ல 2014 ல் எழுதிய நூலின் 177ம் பக்கத்தில் இவையாவும் கூறப்பட்டுள்ளன.

திரு.செல்வேந்திரா சபாரட்ணம் அவர்களால் விரைவில் வெளியிடப்படப் போகும் நூலிலும் இவை முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளன.

ஆகவே பாராளுமன்றத்தின் வகிபாகம் என்று நாங்கள் ஆராயும் போது அதன் பின்னணியில் நடைபெற்ற பல திருகுதாளங்களை நாங்கள் மனதில் வைத்தே இக் கருப்பொருளை நோக்கவேண்டும்.

பாராளுமன்றத்தின் வகிபாகம் பற்றிப் பார்க்கும் போது 1972ம் ஆண்டின் குடியரசு அரசியல் யாப்பு பாராளுமன்றத்தில் இயற்றப்படும் வரையில் பாராளுமன்றமே தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் முக்கிய பங்கு வகித்தது. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. 1948ம் ஆண்டின் அரசியல் யாப்பு தனது உறுப்புரை 29(2)ன் மூலமாக சிறுபான்மையினரின் உரித்துக்களை ஓரளவு பாதுகாக்க எத்தனித்தது.

ஆகவே சிங்கள பெரும்பான்மையினரின் ஆதிக்க நட



வடிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டி பெரும்பான்மையினரை ஓரளவு பின்வாங்கச் செய்யக் கூடியதாக இருந்தது. அப்படியிருந்தும் **"சிங்களம் மட்டும்"** சட்டம் உறுப்புரை 29(2)ன் ஏற்பாடுகளுக்கு முரணாக பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டது. இது சிறுபான்மையினருக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்தாலும் தொடர்ந்து பாராளுமன்றமே தமிழ் மக்களின் உரித்துக்களுக்கான போராட்டத் தளமாக தொடர்ந்து இருந்து வந்தது.

அடுத்த காரணம் 1972 வரையில் கூட பாராளுமன்றத்தில் ஆங்கில மொழியே கோலோச்சி வந்தது. அதன் காரணத்தினால் சகல இன மக்களும் பெரும்பாலும் ஆங்கில மொழியிலேயே பேசியதால் உடனுக்குடன் இரு தரப்பாரின் கருத்துக்களும் மற்றையவர்களால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. கருத்துப் பரிமாற்றங்கள் மூன்றாம் நபரான மொழி பெயர்ப்பாளர் உதவியின்றி நேரடியாக நடைபெற்றன.

1972ம் ஆண்டின் முதல் குடியரசு அரசியல் யாப்பு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. வெளிநடப்பு செய்தனர்.

அப்பொழுதிருந்து பாராளுமன்ற தமிழ் உறுப்பினர்களுக்கு பாராளுமன்றம் ஒரு அரசியல் பேசும் தக்க புகலிடமாகத் தென்படவில்லை. சிங்கள ஆதிக்கம் பெருகியது. அதே நேரம் காணி உச்ச வரம்புச் சட்டம், வீடுகள் உச்ச வரம்புச் சட்டம் ஆகியன 1972ம் ஆண்டின் பின்னர் வெளிவந்து சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆகவே 1972ன் பின்னர் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்றமானது வெறும் அரசியல் பேசும் அரங்கமாகவே அமைந்தது. ஆனால் அவர்கள் பேச்சுக்கள் சிங்கள மக்களைப் போய் அடையவில்லை. இதற்குக் காரணம் எமது பாராளுமன்றமானது பெரும்பான்மையினரது அடாவடித்தனத்துக்குத் துணை போக சம்மதித்தமையே. ஜனநாயக முறைமைகள் பேணப்படவில்லை.

சிறுபான்மையினரின் கருத்துக்கள் பொருட்படுத்தப்படவில்லை. அத்துடன் சிங்கள ஊடகங்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுக்களைத் தமது ஊடகங்களில் வெளியிடப் பின்நின்றனர்.

அவர்களின் ஆங்கிலப் பேச்சுக்கள் கூட கொழும்பு ஊடகங்களில் வெளிவருவது மிக அரிதாகவே இருந்தன. இதனால் தமிழ்ப்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் சிங்கள மக்களைச் சென்றடையவில்லை. எவ்வளவு தான் உண்மைகளைத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் எடுத்துரைத்தாலும் அவை சிங்கள மக்களைச் சென்றடையவில்லை என்பதே உண்மை.

தமிழர்கள் யாவரும் பயங்கரவாதிகளே என்ற எண்ணந்தான் சிங்கள மக்களிடையே மேலோங்கியது. இத னால் தமிழ் மக்களின் உண்மை நிலை பாராளுமன்றத்தினுள் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒரு முறை சிங்கள ஊடகத்தின் கேள்விக்கு சிங்களத்தில் பதில் அளித்தேன். அப்போது அந்த சிங்கள ஊடகவியாளர் உங்கள் உறுப்பினர்கள் இது பற்றி எதுவுமே கூறவில் லையே என்றார்.

அப்போது நான் கூறினேன் **"நாங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் கூறிக்கொண்டு தான் இருக்கின்றோம். உங்களுக் குத்தான் விளங்கவில்லை"** என்றேன்.

ஆனால் 1972ன் முன்னர் தமிழ்ப் பாராளுமன்ற உறுப் பினர்கள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் பேசியவை பொது மக்களைப் போய் அடைந்தன. இன்றோ ஆங்கிலத்தில் பேசினாலும் சிங்கள மக்களைச் சென்றடைவதில்லை. தமிழில்ப் பேசினாலும் எமது கருத்துக்கள் சிங்களப் பெரும்பான்மை மக்களை அடைவதில்லை.

இந்த கால கட்டத்தில்த் தான் தமிழ் இளைஞர்கள் அடுத்து என்ன செய்யலாம் என்று சிந்திக்கத் தொடங்கினர். பாராளுமன்றத்தில் எத்தகைய அறிவுக் கூர்மைசார் பேச்சுக்களை நிகழ்த்தினாலும் அவற்றால் பயன் ஏதும் புலப்படவில்லை என்று கண்டு வன்முறையை விடுதலை ஆயுதமாக்கினர்.

2009ல் இளைஞர்களின் ஆயுதங்கள் மௌனிக்கப்படும் வரை தமிழ்ஈழத் தமிழ் மக்களின் தீர்வு தொடர்பாக நாடாளுமன்றத்தின் வகிபாகம் மிகக் குறைந்தே காணப்பட்டது. எனினும் தமிழ்ப் பிரதிநிதிகள் 22 பேர் அப்போது இருந்துங்கூட அவர்களால் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் தீர்வு தொடர்பாக எதுவும் செய்ய முடியவில்லை. காரணம் போர் நடந்துகொண்டிருந்தமையே.

2009ம் ஆண்டின் பின்னரான பாராளுமன்றத்தை எடுத்துப் பார்த்தோமானால் பாராளுமன்ற தமிழ் சிங்கள உறுப்பினர்களுக்கிடையேயான இடைவெளி நீண்டு கொண்டு செல்வதை அவதானிக்கலாம். மலையகத் தமிழர்கள் சிலர் சிங்களத்தில் பேசுவதை சிங்கள உறுப்பினர்கள் புரிந்து கொள்கின்றார்கள். ஆனால் தமிழில் பேசுவோரின் பேச்சின் மொழிப் பெயர்ப்பைக்கூட கேட்கும் பொறுமை சிங்கள உறுப்பினர்களுக்கு இல்லை என்றே சொல்லலாம்.

அடுத்து தமிழ்ப் பேசும் உறுப்பினர்களின் தொகை குறைந்து வருகின்றது. அரசாங்கம் தமிழ்ப் பேசும் உறுப்பினர்களின் கருத்துக்களைப் பொருட்படுத்துவதில்லை. ஆங்கிலம் கூட பல சிங்கள உறுப்பினர்களுக்கு புரிவதில்லை. ஆகவே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பொறுத்த வரையில் பாராளுமன்றத்தின் வகிபாகம் குறைந்து கொண்டே செல்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினரின் ஆர்ப்பாட்டங்கள், காணி அபகரிப்பை எதிர்க்கும் கிராமத்தவரின் எதிர்ப்புப் போராட்டங்கள், மீனவர்களின் போராட்டங்கள், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான நடைபவனி போன்றன மக்கள் தாங்களே களத்தில் முன் நின்று போராட வேண்டிய அத்தியாவசியத்தை

# தமிழீழ தமிழர்களுக்கு சிறீலங்கா பாராளுமன்றம் ஒருபோதும் தீர்வு தராது!

**பாராளுமன்ற உறுப்பினர், முன்னால் நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்**

அவர்களுக்கு உணர்த்தியுள்ளன.

மக்கட் தலைவர்களும் இதையுணர்ந்து பாராளுமன்றத்தில் இருந்து கொண்டே சர்வதேச ரீதியாக எவ்வாறு தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லலாம் என்பது பற்றி சிந்தித்து செயலாற்றி வருகின்றார்கள்.

பாராளுமன்றத்தின் வகிபாகத்தை ஆராயும் போது ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பது ஒற்றையாட்சியின் கீழ் நாம் கோருவது சமஷ்டி அல்லது இணைப்பாட்சியையே!

ஒற்றையாட்சி முறையைக் கைப்பற்றிக் கொண்டவர்கள் ஒரு போதும் அதன் இறுக்கத்தைத் தளரவிட முன்வரமாட்டார்கள். சமஷ்டி என்பது அந்த இறுக்கப் பிடியைத் தளரச் செய்வது. பாராளுமன்றத்தில் பங்கு சிங்களப் பிரதிநிதித்துவம் இருக்கும் போது சிங்கள மக்களின் அளுங்குப் பிடிக்குப் பாதிப்பு ஏற்படும் வண்ணம் எதனையும் செய்ய சிங்களப் பிரதிநிதிகள் எவரும் முன்வரமாட்டார்கள். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு உதாரணம் கூறுகின்றேன். பேரூந்தில் பயணம் செய்யும் போது பெண்களுக்கென்று சில ஆசனங்கள் அவற்றில் ஒதுக்கப்பட்டுள்ளதை நாம் அறிவோம். அந்த ஆசனங்களில் ஆண்கள் உட்கார்ந்திருக்கின்றார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

கேட்டால் **"இப்பொழுது தானே ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமஉரிமை தந்தாகிவிட்டதே. பின் எதற்கு உங்களுக்கு பிரத்தியேக ஆசனங்கள்"** என்று கூறி இருக்கைகளைத் தர மறுக்கின்றார்கள் ஆண்கள்.

வாகன சாரதி, கண்டக்டர் யாவருமே ஆண்கள். அவர்களும் சம உரிமை பற்றிக் கூறி எந்த நடவடிக்கைகளையும் எடுக்க மறுக்கின்றார்கள்.

ஆகவே அங்குள்ள பெரும்பான்மையினரான ஆண்களிடம் பேசிப் பயனில்லை. வேறு வழிமுறை களையே பெண்கள் கையாள வேண்டும்.

நான் என்ன கூற வருகின்றேன் என்றால் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரமும் பலமும் கொண்டவர்கள் இணைப்பாட்சிக்கு ஒத்துக் கொள்ளமாட்டார்கள். ஆகவே தான் சர்வதேச கருத்துப் பரிமாற்றங்களின் மூலம் நெருக்குதல்களை ஒற்றையாட்சியின் மீது ஏற்படுத்த வேண்டிய காலகட்டம் தற்போது உருவாகியுள்ளது. இதை உணர்ந்து தான் முதலமைச்சர் என்ற எனது பதவியைப் பயன்படுத்தி இங்கு வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபை அலுவலர்களுக்கும் எமது நிலை பற்றிய விரிவான விபரங்களையும் புள்ளி விபரங்களையும் என் பதவியின் போது தந்துதவினேன். அப்போதைய செயலாளர் நாயகம் ஹுசெயின் அவர்கள் எமது ஆவணங்களைப் பரிசீலித்ததின் பலனாக எமக்கு சாதகமான கருத்துக்களை அக் காலகட்டத்தில் எடுத்தியம்பினார்.

சர்வதேச ரீதியாக நாங்கள் எமது அரசியல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி ஒரு சார்பான ஏதுவாக அமைகின்றது. அன்றாடப் பிரச்சனைகளை பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவற்றைத் தீர்க்க முடியும். ஆனால் தமிழீழத் தமிழர்களின் அரசியல் தீர்வில் பாராளுமன்றத்தின் வகிபாகம் தற்போது மிகவும் வேதனைக்குரிய அவல நிலையையே அடைந்துள்ளது.

அத்துடன் இன்னுமொரு விடயம் ஆராயப்பட வேண்டியுள்ளது. வெளிநாடொன்றுடன் 13வது திருத்தச்சட்டம் பற்றிப் பேசி எமது ஆறு கட்சிகளும் துரோகம் இழைத்துவிட்டன என்று ஒரு சாரார் குற்றம் சாட்டி வருகின்றார்கள். அவர்கள் அவ்வாறு கூறுவதற்குக் காரணம் அரசாங்கத்தின் புதிய அரசியல் யாப்பு தமிழ் மக்கள் கோரிக்கைகளுக்கு இடமளிக்கும் என்று அரசாங்க அமைச்சர் ஒருவர் கூறியமையே.

இவர்களின் அரசியல் அப்பாவித்தனம் இதில் இருந்து புலப்படுகின்றது. புதிய அரசியல் யாப்பானது அதிகார மையத்தை மாகாணத்தில் இருந்து மாவட்டத்திற்கு மாற்ற இருக்கின்றது. மாவட்டங்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்தை உண்டுபண்ணி **"பார்த்தீர்களா! உங்கள் கிராமங்கள், மாவட்டங்கள் இனித் தம்மைத்தாமே ஆளப் போகின்றன"** என்று கூறப் போகின்றார்கள். வட கிழக்கு இணைப்பு, மாகாண அரசாங்கம் அல்லது அரசாங்கங்கள் என்பவற்றைத் தாண்டி மத்தியின் கைப்பொம்மைகளாக மாவட்டங்களை ஆக்கவிருக்கின்றார்கள்.

எம்மைக் குறை கூறுவோர் இலவு காத்த கிளிகளாக மாறப் போகின்றார்கள். புதிய அரசியல்யாப்பு எமது மாகாண சபை முறைமையை அடியோடு அழித்து இந்தியாவின் தலையீட்டையும் அண்டவிடாமல் செய்துவிடும். இதை உணர்ந்து எம்மைக் குறைகூறுவோர் விழித்துக் கொள்ள வேண்டும். பதின்மூன்றுக்குப் பதில் மாவட்ட அரசாங்கமே வரவிருக்கின்றது. மாவட்டங்கள் மத்தியின் அதிகாரத்தினுள் சிறைப்பட்டிருப்பன.

நாங்கள் எங்கள் மக்களுக்கு உணர்வூட்டுவதிலும் பார்க்க அவர்களுக்கு அறிவூட்ட வேண்டும். எமது அரசியல் போராட்டங்களுக்கு மக்களின் நேரடி நடவடிக்கைகளே வலுச் சேர்க்கக்கூடும். இனிவருங்காலத்தில் பாராளுமன்றத்தில் பேசுவதால் விளையும் நன்மை மிகக் குறைவே. ஆனால் மக்களுக்குப் பிழையான அரசியல் அறிவைப் புகட்டக்கூடாது. ஆகவே பாராளுமன்றம் தமிழீழத் தமிழர்களுக்கு எந்தக் காலத்திலும் ஒரு தீர்வைத் தராது ஆட்சியில் உள்ளவர்களுக்கு நெருக்குதல்களை நாம் உருவாக்காவிட்டால்!




GTA CHIROPRACTIC CENTRE
We are specialized in
• Motor Vehicle Accidents
• Slip & Fall
• WSIB
• Extended Health Care
• Sports Injuries
• Physiotherapy
• Chiropractic
• Orthotics Shoes
• Massage Therapy
• Acupuncture
Health is Wealth
Pathmaraj (Pat) Pathman
Tel: 416-321-0482 Cell: 416-528-5318
Fax: 416-321-0486
GTA Square Mall 5215 Finch Ave, E#206
Scarborough, ON, M1S 0C2
www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com


R.S தங்கப் பட்டறை
நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லாவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்
குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்
திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்
பழைய நகைகளை மாற்றி
இன்றைய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்
தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171
S.மூர்த்தி
Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough


சங்கத்தமிழ்
ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!
உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?
விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்
437.345.4203


Nickon Photo & Video
Digital Album
நிக்கொன் போட்டோ & வீடியோ
டிஜிட்டல் அல்பம்
உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...
Call: Vijay
416.554.8899
Facebook ID:
Nickon Studio




# ஈழத்தமிழர் வரலாறு -03

வரலாற்றின் தொடக்க காலத்தில் இருந்து மொழி அடிப்படையில் இரு இனங்கள் (தமிழ், சிங்ளம்) வாழ்ந்ததற்கான சான்றுகள் இலங்கையிற் காணப்படுகின்றன. இதன் தொடக்க காலச் சான்றுகளாக கி.மு. 03 ஆம் நூற்றாண்டிற்குரிய பிராமிச் சாசனங்கள் கொள்ளத்தக்கன. இது வரை கிடைத்த சாசனங்களில் சில தமிழ்மொழியிலும், பல பிராகிருத மொழியியயுலும் எழுதப்பட்டுள்ளன. இப்பராகிருத மொழி இருந்தே பிற்காலத்தில் சிங்கள மொழி உருவாக்கம் பெற்றது. இதனால் மொழி அடிப்படையில் சிங்கள மொழியைக் காட்டிலும் தமிழ் தொன்மையானதெனக் கூறமுடியும். மகாவம்சம் கூட கி,மு. 1 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இருபத்திரண்டு மன்னர்கள் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்ததாகக் கூறுகிறது. இவர்களுள் பத்து மன்னர்களைத் தமிழர்கள் எனக" கூறும் இந்நூல் ஏனைய மன்னர்களை எந்த இனத்துக்குரியவர் எனக் கூறவில்லை. ஆனால் மொழி அடிப்படையில் பிராகிருதம் வட இந்திய மொழிகளையும் தமிழ் தென்னிந்தியத்திராவிட மொழிகளையும் ஒத்துள்ளன. இதனால் வரலாற்றறிஞர்களில் பலர் பிராகிருத மொழிக்கும் (Proto Sinhala) வட இந்திய மொழிகளுக்கும் இடையிலான ஒற்றுமையைச் கூட்டிக்காட்டி மகாவம்சம் கூறும் வட இந்தியாவில் இருந்து ஏற்பட்ட




விஜயனின் குடியேற்றத்தை சிங்கள இனத்தின் வருகையாக நியாயப்படுத்தினர். இதன் மூலம் கி.மு. 1 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் அனுராத புரத்தில் ஆட்சி புரிந்த பன்னிரண்டு மன்னர்களையும் சிங்கள இனத்துக்குரியவர்கள் என அடையாளம் கண்டனர். அதன் அடிப்படையிலேயே எல்லாளனை வெற்றி கொண்ட துட்டகாமினியை சிங்கள இனத்தின் விடுதலை வீரனாக சித்தரித்தனர். ஆனால் மொழி அடிப்படையில் இரு இனங்கள் தோன்றமுன்னர் இவர்கள் பொதுப்பட்ட கலாசாரத்தின் வழிவந்தவர்கள் என்பதையும், அக்கலாசார மக்கள் மகாவம்சம் கூறும் காலப்பகுதிக்கு முன்னரே நாகரிகமுடைய மக்களாக வாழ்ந்தனர் என்பதையும் அண்மைக்காலங்களில் இலங்கையில் பரவலாகக் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இந்த மக்கள் யார்? எங்கிருந்து குடியேறினார்கள்? எப்போது குடியேறினார்கள்?




என்பன முக்கிய கேள்வியாகும். மானிடவியலாளர் இற்றைக்கு ஐப்பதாயிரம் வருடங்களுக்குமுன்னர் இலங்கையில் மக்கள் வாழ்ந்ததற்கான மனிதச் சுவடுகள் இல்லையெனக் கூறுகின்றனர். இதனொரு நாட்டில் இருந்து புலம்பெயர்ந்திருக்க வேண்டும் என்பதே பொதுவான உண்மையாகும். இந்நாடு தென்னிந்தியா என்பது தொல்லியலாளரின் பொதுவான கருத்தாகும்.

### மனிதனின் கூர்ப்பும் இலங்கையின் முதல் மனிதர்களும்

இதுவரை தொல்லியலாளருக்கு கிடைத்துள்ள சான்றுகளின்படி மனிதன் என்ற அந்தஸ்தினைப் பெற்ற ஹோமோ ஹபிலீஸ் (வல்லமை வாய்ந்த மனிதன்) என்பவனது எச்சங்கள் ஆபிரிக்காவில் உள்ள தான்சானியாவிலும் எதியோப் பியாவிலும் கிடைத்துள்ளன. இவை ஏறத்தாழ முப்பது இலட்சம்


ஹோமோ ஹபிலீஸ

வருடங்கள் பழமை வாய்ந்தவையெனக் கணிப்பிடப்பட் டுள்ளன. இம்மனிதார்களே உலகில் பழமை வாய்ந்த பழங்கற்கால மனிதர்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கால ஓட்டத்தில் மேலும் பழமை வாய்ந்த மனிதர்களை உலகின் பல பாகங்களில் சந்திக்கிறோம். ஹோமோ ஏறக்ரஸ் (நிமிர்ந்த மனிதன்) எனப்படும் மனிதன் ஆறு இலட்சம் வருடங்களுக்கு முன்னர் ஐரோப்பாவில் இருந்து சீனா வரை வாழ்ந்துள்ளான். கைக்கோடரிகள் எனப்படும் கற்கருவிகளை இவர்கள் உபயோகித்தனர். இன்றைய மனிதனோடு ஒப்பிடக்கூடிய ஹோமோ ஸப்பியன்ஸ் எனப்படும் சிந்தனை வாய்ந்த மனிதனது எச்சங்கள் 35000 ஆண்டுகள் பழமை வாய்ந்தவையாக கிடைத்துள்ளன.


ஹோமோ ஏறக்ரஸ்

மனிதனது வரலாற்றில் இம்மாற்றம் ஏற்பட்டு வரும்பொழுது புவியின் வரலாற்றிலும் பல மாறுதல்கள் இடம்பெற்றன. பிலிஸ்ரோசின் என புவியியல் வரலாற்றியலாளரால் அழைக்கப்படும் இக்காலப்பகுதியில் நான்கு தடவைகள் உலகின் பல பாகங்கள் துருவப்பகுதியில் இருந்து பெருகி வந்த பனிப்படர்வு இலக்காகின. நான்காவது பனிப்படர்வு 12,000 வருடங்களுக்கு முன்னர் பின்வாங்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது. இப்பனிப்படர்வு நிகழ்ந்த காலத்தில் கடல் மட்டம் குறைந்திருந்தமையால் நிலப்பாகங்களின் வழியாக அக்கால மனிதர்கள் தாம் முன்னர் வாழ்ந்திராத இடங்களுக்குப் புலம் வெயர்ந்தனர். இவ்வாறே இன்று இராஷ்யாவின் கிழக்கு கோடியிலுள்ள காம்ரட்ச்காகுடா நாட்டிலிருந்து வட அமெரிக் காவின் மேற்கு கோடியிலுள்ள அலாஸ்கா குடாநாட்டிற்கு அமெரிக்க செவ்விந்தியர்கள் புலம் பெயர்ந்தனர் பல உயிரினங்களும் புலம் பெயர்ந்தன. ஐரோப்பாவிலிருந்து பிரித்தானியத் தீவுகட்கு முதல் மனிதர்கள் புலம்பெயர்ந்தமையும் இவ்வாறே நடைபெற்றது. இலங்கையின் முதல் மனிதர்களும் இறுதிப் பனிப்படர்வின் போது இராமரணைப் பகுதியில் இருந்திருக்கக் கூடியதொரு நிலப்பாகத்தின் வழியாக தென் னிந்தியாவில் இருந்து புலம் பெயர்ந்திருக்காலம் எனக் கூறப்படுகிறது.

பனிப்படர்வு முடியும் தறுவாயில் உலகின் பல பாகங்களில் ஏற்பட்ட காலநிலைமாறுதலினாலும், மனிதன் இயற்கை யாகவே அடைந்து வந்த தொழில் நுட்பவளர்ச்சி காரணமாகவும் அவனது வாழ்கை முறை வேகமாக மாறத்தொடங்கியது, வில், அம்பு போன்ற பொறிகள் அறியப்பட்டமையால் மிகச்சிறிய அம்புநுனி போன்ற கருவிகளை உபயோகிக்கத்தொடங் கினான். இக்காலத்தில் காட்டுப்புற்களாகத் தோன்றிய பயிர்களிலிருந்து தானியங்களை அறுக்க சிறிய பிளேட் கோன்ற கால் அலகுகளை உபயோகித்தான். இக்காலத்தினையே தொல்லியலாளர் இடைக்கற்காலம் அல்லது குறுனிக்கற்காலம் என அழைப்பர். இக்காலப் பண்பாட்டோடு இலங்கையின் மனித நாகரிக வரலாறு தொடங்குவதை இலங்கையின் பல பகுதி களில் கிடைத்த தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

### மகாவம்சமும் மனித நாகரிகத்தின்தோற்றமும்

மகாவம்ச ஆசிரியர் தான் வாழ்ந்த காலத்திற்கு முற்பட்ட 1000 ஆண்டுகால (கி.மு. 06- கி.பி. 04) வரலாற்றைக் கூறியுள்ளார். இவ்வரலாற்றில் சிங்கள மக்களின் மூதாதையினர் வட இந்தியா வில் இருந்துவந்த ஆரியரின் வழித்தோன்றல்கள் எனவும், புத்தருக்குப் பின் பௌத்தமதம் தழைத்தோங்கும் புனிதபூமி இலங்கை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்த நோக் கோடே இந்த வரலாறு எழுதப்படுகிறது எனவும் மகாவம்ச ஆசிரியர் சூசகமாகத் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் இலங்கையின் நாகரிக வரலாறு கி.மு. 06 ஆம் நூற்றாண் டளவில் வட இந்தியாவில் இருந்து வந்த விஜயன் கூட்டத் தாரோடு ஆரம்பிப்பதாகவும், இவர்களே இலங்கையில் நீர்ப்பாசன விவசாயம், இரும்பின் உபயோகம், அரச அமைப்பு என்பவற்றை ஏற்படுத்தியதாகவும் இந்நூல் கூறுகிறது. விஜயன் வருகைக்கு முன் இங்கு இயக்கர், நாகர் எனப்படும் மக்கள் வாழ்ந்தாலும் அவர்கள் நாகரிகமற்ற அமானுஜர்கள் என இந்நூல் மேலும் கூறுகிறது.

இலங்கையின் வரலாறு பற்றிய ஆய்வின் தொடக்க காலத்தில் மகாவம்சம் கூறும் காலப்பகுதிக்குரிய வரலாற்றை அறிவதற்கு பிற ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் மகாவம்சம் கூறுவதே உண்மை வரலாறு என வலியுறுத்தப்பட்டது. இதையுறுதிப்படுத்தும் வகையில் பறிகாலத்தில் வட இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பண்பாட்டு உறவு பற்றிய சான்றுகளை வடஇந்தியாவில் இருந்து ஏற்பட்ட ஆதிக்குடியேற்றத்தின் தொடர்ச்சியென நியாயப்படுத்தினர். பேராசிரியர் பரணவிதான விஜயன் குடியேற்றத்திற்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்தவர்கள் மனிதப்பிறவிகள் அற்ற அமானுஜர்கள் எனவும் அவர்களை மனிதர்களாகக் கொண்டாலும், திராவிட மக்களாகக் கொள்ள முடியாதென அடித்துக்கூறினார். இலங்கையின் புகழ்பூத்த வரலாற்றறிஞர்களில் ஒருவரான மெணடிஸ் மகாவம்சம் கூறும் விஜயனது குடியேற்றம் வெறும் கட்டுக்கதை எனக் கூறினாலும், இலங்கையின் நாகரிக வரலாறு சிங்கள மக்களின் வருகையோடு ஏற்பட்டதென நியாயப்படுத்தினார். ஆனால் இன்று இக்கருத்துக்களை பெரும்பான்மை சிங்கள மக்கள் போற்றும் நிலையில் இருந்தாலும், வரலாற்றறிஞர்களில் பலர் ஏற்கும் நிலையில் இல்லை. இதற்கு கடந்த இரு சகாப்தங்களாக இலங்கையின் பல பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வரலாற்றுச் சான்றுகளே காரணமாகும். இச்சான்றுகள் மகாவம்சம் காரணமாகும். இச்சான்றுகள் மகாவம்சம் கூறும் விஜயன் குடியேற்றம் பற்றிய கற்பனைக் கதைக்கு பல நூற்றாண்டகளுக்கு முன்னரெ நாகரிகமான இரு மக்கள் கூட்டத்தார் இலங்கையில் வாழ்ந்ததை உறுதிப்படுத்துவதாகும். இப்புதிய கண்டுபிடிப்பில் சார்வதேச சமூகமும் பங்குகொண்டிருப்பதால் அரசம் தமது வரலாற்றுப் பாடநூல்களில் சில மாற்றங்களைச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தை 1993 இன் பின்னர் வெளிவந்த வரலாற்றுப் பாடநூல்களில் மேலோட்டமாகக் காணமுடிகிறது. இந்நூல்களில் இலங்கையின் நாகரிக வரலாறு விஜயன் வருகையோடு ஏற்பட்டதாக மகாவம்சம் கூறுவதை சுட்டிக்காட்டும் அதேவேளை மகாவம்சம் கூறும் காலத்திற்கு முன்னரே நாகரிகமான மக்கள் வாழ்ந்ததை தொல்பொருட் சான்றுகள் கூறுகின்றன எனச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. ஆனால் அந்த மக்கள் யார் என்பதைக் கற்கும் மாணவரும், கற்பிக்கும் ஆசிரியரும் தெரிந்து கொள்ளாத வகையில் வரலாற்று நூல்களில் மறக்கப்பட்டிருந்த இராமாயணக் கதையை இடம் பெறச் செய்ததன் மூலம் மறைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த மக்கள் யார்? எந்த நாட்டிலிருந்து புலம் பொயர்ந்தார்கள்? என்ற உண்மையைத் தெரிந்து கொள்வதன் மூலம் இன்றைய தமிழ் சிங்கள மக்களின் பூர்வீகத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

### தொல்லியற்சான்றுகளும் மனித நாகரிகத்தின் தோற்றமும்

இலங்கையில் இதுவரை அறியப்பட்டுள்ள காலத்தால் முந்திய மக்கள் இடைக்கற்காலப் பண்பாட்டிற்குரியவர்களாவர். இம்மக்களுக்கு முற்பட்ட பழங்கற்கால மக்கள் இலங்கையில் வாழ்ந்தார்கள் என்ற கருத்து காலத்திற்கு காலம் தொல் லியலாளரால் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆயினும் அக் கருத்தை உறுதிப்படுத்தக் கூடிய பூரணமான சான்றுகள்




இதுவரை கிடைக்கவில்லை. இடைக்கற்காலப் பண்பாட்டு மக்களைப் பொறுத்தவரை தாழ்நிலம் தொட்டு, மலைநாடு, வரை நீர் நிலைகளை அண்டி வாழ்ந்துள்ளார் என்பதை பலாங்கொடை, இரத்தினபுரி, கித்துள்கொட, அநுராதபுரம், முல்லைத்தீவு, மாங்குளம், மாதோட்டம், பூநகரி ஆகிய இடங்களில் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத் துகின்றன. இவற்றுள் பலாங்கொடையிலும், மாதோட்டத்திலும் இப்பண்பாட்டுடன் இணைந்த பல்வேறு சான்றுகள் கண்ட பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் இதுவரை கிடைக்கவில்லை. இதற்கு இப்பிராந்தியம் சுண்ணாம்புக் கற்பகுதியாக இருப்பதால் இடைக்கால மக்கள் கல்லாயுதங்கள் செய்யப்பயன்படுத்திய குவாட்ஸ் கல்வரை இல்லாதது ஒரு காரணமாக கூறப்படுகிறது. ஆனால் காரைநகரில் சந்திராந்தை என்ற இடத்தில் இக்கல்வகை கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால் இப்பிராந்தியத்திலும் இடைக்கற்கால மக்கள் வாழ்ந்திருக்காலம் என ஊகிக்க இடமளிக்கிறது.

மானிடவியலாளர் இப்பண்பாட்டு மக்கள் ஆதி ஒஸ்ரலோயிட் இனவர்க்கத்தைச் சார்ந்தவர்கள் எனவும், மொழியியலாளர் இவர்கள் பேசிய மொழி ஆதி ஒஸ்ரலோயிட் எனவும் கூறுகின்றனர். தமிழ்நாட்டில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்களின் தொடக்க காலம் கி.மு. 32,000 ஆண்டுகள் எனவும் இலங்கையில் கி.மு. 28,000 ஆண்டுகள் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. மானிடவியல், மொழியியல் என்பவற்றில் இலங்கையில் நிலவிய இடைக்கற்காலப் பண்பாட்டிற்கும், தமிழ்நாடு திருநெல்வேலி "தேரி" கலாசாரத்திற்கும் இடையே நெருங்கிய ஒற்றுமை இருப்பதாகத் தொல்லியலாளர் பலரும் கூட்டிக்காட்டியுள்ளனர். அல்ஜின் என்ற தொல்லியலாளர் தமிழ்நாடு இடைக்கற்காலப் பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய இருபக்க அலகுடைய கல்லாயுதவகை இந்தியாவில் தமிழ்நாட்டைத் தவிர இலங்கையில் மட்டும் பயன்படுத்தியிருப்பதாகக் கூறியுள்ளார். இதனால் இலங்கையில் அறியப்பட்டடுள்ள முதற்பண்பாடும், அதற்குரிய மக்களும் தமிழர் நாட்டில் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இதில் தமிழ்நாட்டிற்கு நேரெதிரே அமைந்த பூநகரியிலும், மாதோட்டத்திலும் இப்பண்பாட்டிற்குரிய தடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதால் தமிழ் நாட்டிலிருந்து ஏற்பட்ட முதல் பண்பாட்டலை முதலில் இப்பிராந்தியங்ளில் ஏற்பட்டு பின்னர் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குப் பரவியிருக்காலம் எனக் கருத இடமுண்டு.

நன்றி: வெளிச்சம் 1995.03



**1950களில் பட்டதொம்ப குகையில் தோண்டப்பட்ட பலாங்கொடை மனிதனின் எலும்புக்கூடு**


















# சிங்களப்பேரினவாதம் உருவாக்கிய பொய்யே "மகாவம்சம்"

# மகாவம்சம் இன்றும் எழுதப்படுகிறது

# ஈழத்தீவின் பூர்வீக குடிகள் தமிழர்களே

வட இந்தியாவில் உள்ள வங்காளம், ஒரிசா ஆகிய பகுதிகள் முந்தைய காலத்தில் லாலா தேசம் என்று அழைக்கப்பட்டது. இந்த ராஜ்ஜியத்தை ஆண்ட மன்னன் சிங்கபாகு, சிங்கத்துக்கும் ஒரு ராஜகுமாரிக்கும் பிறந்தவர். பிற்காலத்தில் தனது தந்தையான சிங்கத்தை தேசடிச் சென்று, தனது மகனைக் கண்ட சிங்கம் வாஞ்



சையோடு அவனருகில் வர, சிங்கபாகு தனது தந்தையான சிங்கத்தை கொன்று (தன் தந்தையை) கண்டுபிடித்து தலையை வெட்டி துண்டிக்கிறார்.

சிங்கபாகு, சிகாசிவாலி என்ற பெண்ணை மணந்து அவளை பட்டத்து ராணி ஆக்குகிறார். இவர்களுக்கு 16 முறை இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. இந்தக் குழந்தைகளில் மூத்தவன் விஜயன். அவனை பட்டத்து இளவரசனாக சிங்கபாகு நியமிக்கிறார்.

**இலங்கைக்கு சென்ற "கள்ளத்தோனி" விஜயன்**

விஜயன் மிகவும் கொடூரமானவன். அவன் செய்த அட்டூழியங்கள் பற்றி, மன்னனிடம் மக்கள் முறையிடுகிறார்கள். மகனைத் திருத்த முயற்சிக்கிறார், சிங்கபாகு. ஆனால் விஜயன் திருந்தவில்லை. நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு, மக்களைத் துன்புறுத்துகிறான்.

அவன் அட்டூழியங்கள் எல்லை மீறிப் போனதால், மன்னனிடம் மக்கள் மீண்டும் முறையிடுகிறார்கள். "விஜயனுக்கு மரண



தண்டனை விதியுங்கள்" என்று வற்புறுத்துகிறார்கள்.

இதன் காரணமாக, விஜயனையும், அவன் நண்பர்கள் 700 பேர்களையும் நாடு கடத்துகிறார், மன்னர். இவர்களை மூன்று கப்பல்களில் ஏற்றி, "எங்காவது போய் பிழைத்துக் கொள்ளுங்கள். இனியாவது திருந்தி வாழுங்கள்" என்று புத்திமதி கூறி அனுப்பி வைக்கிறார். மூன்று கப்பல்களும் இலங்கையை அடைகின்றன.



*ஈழத்தீவின் பூர்வீக குடிப்பெண் குவேனி*




குவேனி என்ற சொல், கவினி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு ஆகும். கவினி என்றால் "பேரழகு படைத்தவள்" என்று பொருள்.

இலங்கையை ஆண்ட இராவணன்(தமிழ் மன்னன்) இராட்சதன் என்று கூறப்பட்டது போல, குவேனியையும் இராட்சத குலம் என்று வர்ணிக்கிறது, "மகாவம்சம்". விஜயனுக்கு அடைக்கலம் கொடுக்கிறாள் குவேனி (தமிழ் பெண்).

இருவரும் காதல் வயப்பட்டு திருமணம் செய்து கொள்கிறார்கள், இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தனர். விஜயனுடன் இலங்கை சென்ற அவனுடைய 700 நண்பர்களும் பல நகரங்களையும், கிராமங்களையும் உருவாக்குகிறார்கள்.

சிம்மாசனம் ஏற ஆசைப்பட்ட விஜயன், ஒரு இளவரசியை மணந்து கொள்ள வேண்டும் என்று கூறியதையடுத்து, விஜயனின் நண்பர்கள் மதுரைக்கு சென்று, அங்கு மன்னருக்கு முத்துக்கள், தங்க ஆபரணங்கள் முதலியவற்றை பரிசாக வழங்கி, தங்கள் மன்னனான விஜயனுக்கு இளவரசியை மணமுடித்து வைக்குமாறு கேட்டுக் கொள்கிறார்கள்.

இதற்கு பாண்டிய மன்னன் சம்மதிக்கிறார். பாண்டிய இளவரசியுடன், விஜயனின் 700 நண்பர்களுக்கும் 700 பெண்களை தேர்வு செய்து, இலங்கைக்கு அனுப்பி வைக்கிறார்.

பாண்டிய இளவரசி தன்னை மணப்பதற்கு இசைந்து இலங்கைக்கு வந்து விட்டதை அறிந்து விஜயன் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, குவேனியை அழைத்து, "நான் பாண்டிய ராஜகுமாரியை மணக்கப் போகிறேன். இங்கிருந்து போய்விடு" என்று கூறுகிறான்.

இதனால் வேதனை அடைந்த குவேனி, குழந்தைகளை அழைத்துக் கொண்டு "லங்காபுரா" என்ற இடத்துக்கு போய்




விடுகிறாள். பாண்டிய ராஜகுமாரியை மணந்து கொண்ட விஜயன், அவளுடன் வந்த 700 பெண்களுக்கும் அமைச்சர்களாக உள்ள தன் நண்பர்களை அவரவர் தகுதிக்கு ஏற்ப மணம் முடித்து வைக்கிறான். 38 ஆண்டு காலம் இலங்கையை ஆண்டான். அவனது சந்ததிகளே சிங்களர்கள்.

**குவேனி சாபம்**

குவேனியை ஏமாற்றிவிட்டு வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டதால், ஆத்திரமடைந்த குவேனி சாபம் விடுகிறாள். இலங்கையில் சிங்கள சந்ததிகள் யாராலும் நிலையான அரியணையில் அமர முடியாது என்று சாபம் விடுகிறாள். இந்த காரணத்தினால் இன்று வரை இலங்கையில் அரசியல் ரீதியான பிரச்சனைகள் இருக்கின்றன.

1. இலங்கைத் தீவு நான்கு திசைகளாலும் அழிக்கப்பட்டட்டும்: இந்த சாபத்தின் போது குவேனி மானகந்தா நீரூற்றில் இருந்து பாயும் நீரில் தலைமயிரை சேர்த்து இலங்கைக் கடலின் நான் திசையிலும் வீசினாள். நான் திசையாலும் அழிவு எட்டட்டும் என்பத அந்த சாபத்தின் சாரம்.

2. இலங்கையின் தலைவர்கள் அழிந்து போகட்டும் : சாபுர்ன என்றழைக்கப்படுகிற இந்த சாபத்தின் படி இலங்கைக்கு யார் எல்லாம் தலைமை கொடுக்கிறார்களோ அவர்கள் அழிந்து போகட்டும் என்பதே. (இங்கு இலங்கை என்று குறிப்பிட்டாலும் சிங்கள "நூல்களில் இது சிங்கள இனம்" என்றே குறிப்பிடப்படுகிறது)

3. அன்னிய ஆக்கிரமிப்புகளுக்கு சிக்கட்டும்: இந்த சாபத்தில், அந்நிய நாடுகளின் ஆக்கிமிப்புக்கு உள்ளாகி நாடு நாசமாகட்டும் என்று சபிக்கிறாள்.

4. ஹெல இனம் இரத்தத் தூய்மை இழந்து தனித்துவத்தை இழக்கட்டும்: பக்கி மவுரி என்கிற இந்த சாபத்தின் மூலம் இனத்தூய்மை இழந்து. ஒருவரை ஒருவர் சாக்காட்டுங்கள் என்கிற சபிப்பு.

5. ஹெல தீவு இரண்டாகப் பிளந்து கடலுக்குப் பலியாகட்டும்: 'நிமி மினிசி' என்கிற இந்த சாபத்தின் மூலம் இலங்கை இரண்டாக உடைந்து இறுதியில் சமுத்திரத்தில் மூழ்கட்டும் என்கிற சாபம்.

6. அறிவில்லாத இனம் தோன்றட்டும்: இலங்கையில் அறிவீனமான இனம் தோன்றட்டும் என்கிற இந்த சாபத்துக்கு "தக்னிகா" என்கிற பெயரில் அழைக்கப்படுகிறது.

7. சூரியன், மழை, காற்று, கடல் மற்றும் நீர் என்பவற்றால் அனர்த்தங்கள் வரட்டும்: சூரியன், மழை, காற்று, கடல், நீர் என்பவற்றால் எப்போதும் அனர்த்தங்களுக்கு சிக்கலாகிக்கொண்டே இருக்க வேண்டும் என்று சபித்தாள்.

8. நோய்களோடே இருக்கக் கடவது: குணமடைய முடியாததும் விரைவாக பரவக் கூடியதுமான நோய்களுக்கு எப்போதும் ஆளாகிக்கொண்டிருக்கட்டும்.

9. சிதைந்து சீரழிகின்ற இனமாக ஆகட்டும்: குவேனியின் சாபம் என்னவென்றால், கடலில் மிதக்கும் மரக் குச்சி அலைகளுக்கு அகப்பட்டு இங்குமங்குமாக எந்தக் இலக்குமில்லாமல் இறுதியில் மூழ்கிவிடுவது போல எந்தக் கொள்கையும் இல்லாத மக்கள் இலங்கையில் உருவாகட்டும்.

**சாபத்தில் இருந்து மீள ஆலயம் கட்டிய சிங்களவர்கள்**



*கள்ளத்தோனி விஜயன் - குவேனி (தமிழ் பெண்) க்காக கட்டப்பட்ட முதல் வழிபாட்டு சிலை*



இந்த சாபத்தை போக்க வேண்டுமாயின் இளவரசர் விஜயன் - குவேனி ஆகியோரின் சிலைகள் அருகருகில் இருக்கும் வகையில் ஆலயம் ஒன்று 2014 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

மாத்தறை புகையிரத நிலைய வீதியில் உள்ள திருசுப்பிரமணியர் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்ட போது அந்த ஆலயத்தில் விஜயன் மற்றும் குவேனியின் சிலைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

இலங்கையில் சிங்களவர்கள் உருவாக காரணமான விஜயன் மற்றும் இயக்கர் குல வேடுவ பெண்ணான குவேனி ஆகியோருக்கான முதல் கோயில் இதுவாகும்.

**தபால் தலை வெளியீடு**

1956-ல் விஜயனின் வருகை" என்ற தலைப்புடன் சிறப்பு தபால் தலை ஒன்றை இலங்கை அரசு வெளியிட்டது. குவேனி ஒரு மரத்தடியில் அமர்ந்திருப்பது போலவும், கப்பலில் வந்த விஜயன் அவளிடம் அடைக்கலம் கோருவது போலவும் இந்த தபால் தலை அமைந்திருந்தது. தபால் தலையை பார்த்த சிங்கள தலைவர்கள், அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.




விஜயன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தவன் என்ற கருத்து ஏற்கத்தக்கது அல்ல. தவிரவும், விஜயன் வந்த போதே இங்கு குவேனி என்ற தமிழ்ப் பெண் இருந்திருக்கிறாள் என்று கூறினால், இலங்கையின் பூர்வகுடிகள் தமிழர்கள் என்பதை நாமே ஒப்புக் கொண்டது போலாகிவிடும். எனவே, இந்த தபால் தலையை வாபஸ் பெற வேண்டும்" என்று கூறினார்கள். இதன் பிறகு தபால் தலை வாபஸ் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில், புத்தமதம் பரவுவதற்கு முன் சிவ வழிபாடுதான் நடந்து வந்திருக்கிறது. பூமியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட சிவன் சிலைகளும், நந்தி சிலைகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. சிவனை வழிபட்டவர்கள் தமிழர்கள்தான் சிங்களர்கள் அல்ல.




கி.மு. மூன்றாம் நூற்றாண்டுகளில், வட இந்தியாவில் ஆட்சி புரிந்த மௌரிய பேரரசன் அசோகன், கலிங்கப் போரின் முடிவில் பௌத்த மதத்தைத் தழுவினார். அவர் புத்த மதத்தை பரப்புவதற்காக, மகிந்த தேரே என்ற புத்த மத குரு தலைமையில் ஒரு குழுவை இலங்கைக்க

அனுப்பினார்.

அக்குழு இலங்கைக்கு வந்த போது, அனுராதபுரத்தை தலை நகரமாகக் கொண்டு ஆண்ட தமிழ் மன்னன் பெயர் திசையன் அல்லது தீசன் என்றும், அசோகன் விருப்பப்படி அவன் புத்தமதத்தை தழுவினான் என்றும், அவனுக்கு “தேவ நம்பி” என்ற பட்டத்தை அசோகர் வழங்கினார் என்றும், பாளி மொழியில் எழுதப்பட்ட வரலாற்று



நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திசையன் இறந்த பிறகு, சேனன், குத்தன் என்ற இரு தமிழ் மன்னர்கள் 22 வருடங்கள், அனுராதபுரத்தில் நல்லாட்சி நடத்தினார்கள் என்று அதே நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டச்சுக்காரர்கள் அரசாண்ட போது, இலங்கைக்கு வந்திருந்த அடிரியன் ரேலண்ட் என்ற ஆராய்ச்சியாளர், தமிழ், சிங்களம், மலாய் ஆகிய மொழிகளை அறிந்தவர். அவர் எழுதிய குறிப்புகளில், “இத்தீவை விட்டுப் போவதற்கு முன் தமிழர் பற்றியும், தமிழ் மொழி பற்றியும் சிறிது கூற வேண்



உறொபேற்று நொக்சு தி. பி. 1712இல் (கி. பி. 1681) வரைந்த படம். தி. பி. 1691 தொடக்கம், தி. பி. 1710 வரை கண்டி அரசனின் கைதியாக இருந்தவர். தன் இலங்கை அநுபவங்களைப் பற்றி எழுதி வெளியிட்ட நூலில் இந்தப் படத்தையும் சேர்த்து வெளியிட்டார். கயிலாய வன்னியனின் ஆதிக்க எல்லைகளைப் (Coylet Wannes Country) படத்தில் காட்டியுள்ளார்.

டும்.

இந்தத் தீவின் பெரும் பகுதியில் தமிழர்கள் வாழுகிறார்கள். இந்தப் பகுதி கைலாய வன்னியன் என்ற மன்னனால் ஆட்சி செய்யப்படுகிறது. இங்கு வாழும் மக்கள், சிங்களவரின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள் அல்ல. டச்சுக் காரர்களின் ஆட்சிக்கும் உட்பட்டவர்கள் அல்ல.

கரை ஓரமாக உள்ள நிலம் அனைத்தும், இந்த மன்னனுக்கே உரித்தானது. கரை ஓரங்களில் வாழும் மக்கள் தமிழ் மொழி பேசுகிறார்கள். நீர்கொழும்பு பகுதிக்கு தெற்கே, தெய்வேந்திர முனைவரையுள்ள பகுதிகளில் சிங்கள மொழி பேசப்படுகிறது”. இவ்வாறு அடிரியன் ரேலண்ட் கூறியுள்ளார்.

டச்சு ஆட்சியின் போது இலங்கை வந்த



(BC 300)

“பெரும் தலைவன் ஒருவனுக்கு எல்லோருடைய சம்மதத்தின் பேரிலும் செய்து கொடுக்கப்பட்ட குகை.”

மற்றொரு ஆராய்ச்சியாளர் கிறிஸ்தோபர் சுவைட்சர். இவருடைய குறிப்புகளில், “மட்டக்களப்பு, காலி, திரிகோணமலை, மன்னார், யாழ்பாணம், அரிப்பு, கற்பிட்டி, நீர்கொழும்பு முதலான பகுதிகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

வன்னி நாட்டில் உள்ள தமிழர்கள், சுதந்திரமாக ஆட்சி நடத்துகிறார்கள். மற்ற பகுதிகளில் உள்ளவர்கள், டச்சுக்காரர்களின் ஆட்சியின் கீழ் உள்ளனர்.” இவ்வாறு சுவைட்சர் கூறியுள்ளார்.

**தமிழில் கையெழுத்து**

பிரித்தானியரால் 1815ல் கண்டி கைப்பற்றப்பட்ட போது மன்னன் விக்கிரம ராஜசிங்கன், “விக்கிரமராச சிங்கன் என்கிற கண்ணுச்சாமி” என்று தமிழில் கையெழுத்து இட்டார். கண்டி



Capture of Sri Wickrama Rajasinghe Last King of Kandy

அமைச்சர்களாக இருந்த சிங்களவர்களும் தமிழில் கையெழுத்திட்டார்கள்.

சிங்களர் உள்பட அனைவரும் தமிழில் கையெழுத்துப் இட்டதால், அப்போது கண்டியில் தமிழ் தான் ஆட்சி மொழியாக இருந்திருக்கிறது என்பது புலனாகின்றது. கண்டி மன்னர் எழுதிக் கொடுத்த சாசனம், இன்னமும் இலங்கையில் உள்ள ஆவணக் காப்பகத்தில் பத்திரமாக உள்ளது.

**மகாவம்சத்தில் காணப்படும் முரண்பாடுகள்**

விஜயனும் ஏனைய 700 குழுவினரும் கப்பலில் கி.மு 247ல் வந்ததாக கூறப்பட்ட போதும் அது தொடர்பான எந்த ஆவணமும் இவர்களின் ஆட்சிப் பிரதேசத்திலோ இந்தியாவிலோ காணப்படவில்லை.

விஜயனையும் 700 தோழர்களும் கப்பலில் கி.மு 247ல் வந்ததாக கூறப்பட்ட போதும் இந்தியாவில் கி.பி 6ம் நூற்றாண்டுக்கு முன்னர் அவ்வாறான பாரிய அளவிலான கப்பல் படை இருந்ததாக எந்த ஆதாரங்களும் கிடைக்கவில்லை.




மத்திய இந்தியாவில் உள்ள விஜய னின் நாட்டில் இருந்து கடற் பயணம் மேற் கொண்டு இருப்பார்களாயின் இலங்கை யின் வட பகுதியை அடைவதே இலகு எனினும் மன்னார்- புத்தளத்திற்கு அரு கில் உள்ள தம்பபன்னி என்ற பகுதியில் இறங்கியதாக கூறப்படுகின்றது.

இலங்கையில் தேவநம்பிய தீச மன்னன் காலத்தில் பௌத்த மதம் அறிமுகப் படுத்தப்பட்டது, எனினும் அதற்கு முன்னர் வருகை தந்த விஜயனும் சரி, அதற்கு பின்னரான இலங்கையின் முதலாவது மன்னனாகிய பண்டுகாயனின் மதம் என்ன?

அத்துடன் பண்டுகாபயன் அனுராதபுர நகரத்தின் தெற்கே ஒரு கோவிலை அமைத்தான் என்று கூறப்படுகின்றது, மாறாக விகாரை அமைத்ததாக எங்கும் கூறப்படவில்லை.

அத்துடன் இலங்கையின் தென் முனை வாகிய தெய்வேந்திர முனையிலும் ஒரு விஷ்னு ஆலயம், அம்பாந்தோட்டையில் கதிர்காமம், சிவனொளி பாதமலை, சிலாபம் முன்னேச்சரம் என நாட்டின் சகல திசைகளிலும் புராதன இந்து ஆலயங்கள் இன்றும் காணப்படுகின்றன.

இவைகளை தொகுத்து நோக்கும் போது இலங்கை வரலாற்றை கூறும் மகாவம்சம் வரலாற்றை திரித்துக் கூறும் பௌத்த நூலாகக் காணப்படுவதுடன் இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழரே, வந்தேறு குடிகள் சிங்களவர் என்ற உண்மை வெளிப்படுகின்றது.

எனவே இந்த வரலாற்று உண்மையை அறிந்து, தமிழர்களாகிய நாம் பெருமை கொள்வதுடன் இதனை பகிர்வதன் ஊடாக அனைத்து தமிழர்களும் இந்த நாட்டின் உரிமையுள்ள பூர்வீகக் குடிகள் என்ற தன்னம்பிக்கையை வளர்த்திடுவோம்...!






**தேவநம்பிய தீசன் தமிழ் மன்னன்**
**ஈழத் தீவில் பௌத்த வரலாற்றை**
**தேற்றுவித்த மன்னன்**
**கி.மு. 274 – 247)**

உ

## பவள விழா

யாழ்/அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 75வது ஆண்டு நிறைவு

அன்புடையீர்,

மேற்படி நமது பாடசாலையின் 75வது ஆண்டு நிறைவினையொட்டி பவள விழாவினை இவ்வாண்டு இறுதியில் கொண்டாடுவதுடன் மலர் ஒன்றை உருவாக்கி வரலாற்றுப் பதிவினை ஆவணமாக்கும் பெருமுயற்சியை மதிப்புக்குரிய திரு. கணேஷ்ஐயர் சௌந்தரராசன் ஐயா அவர்களின் அனுசரணையுடன் முன்னெடுத்துள்ளோம். இதற்கான ஒருங்கிணைப்புக் கூட்டம் COVID-19 காரணமாக ஓரிடத்தில் கூட முடியாததால் புலம்பெயர் பழைய மாணவர்களுடன் தொலைபேசி மூலமாக உரையாடி பவள விழா செயற்குழு ஒன்றை அமைத்துள்ளோம். அத்துடன் முக்கியமாக பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்களிடம் இருந்து பவள விழா மலருக்கான ஆக்கங்களையும் மற்றும் இயன்றளவு நிதிப் பங்களிபையும் மிகத் தயவுடன் எதிர்பார்க்கிறோம். கீழ்க்காணும் கனடிய வங்கி இலக்கத்திற்கு உங்களால் இயன்ற நிதிப் பங்களிப்பினையும் அனுப்பி வைத்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### செயற்குழு விபரம்:

| | |
|---|---|
| திரு. ஆறுமுகம் இராசேந்திரம் | திரு. தம்பையா திருநீலகண்டன் |
| திரு. அருளானந்தம் தயாபரன் | திருமதி. அருளானந்தம் யாழினி UK |
| திரு. ஏகாம்பரம் தேவராசா | திரு. கதிரன் கேதீஸ்வரன் |
| திரு. வரதன் குணா | திரு. சிவகுரு விநாயகமூர்த்தி |
| திரு. தம்பையா இராஜேஸ்வரன் | திரு. அம்பலவாணன் கைலாசபிள்ளை |
| திரு. சுப்பிரமணியம் சண்முகம் UK | திரு. கணபதிப்பிள்ளை பேரின்பலிங்கம் |
| திரு. பேரம்பலம் கணபதிபிள்ளை | திரு. தனிநாயகம் அருட்பாலா |
| திரு. கந்தன் மகாலிங்கம் GERMANY | திரு. பாலசிங்கம் பாலகுமார் UK |
| திருமதி. வித்தியாதரன் அருளினி | திருமதி. பூலோகஇந்திரன் யோகம் |
| திருமதி. இன்பநாதன் திருக்கலாதேவி | திரு. தில்லையம்பலம் தர்மகுலசிங்கம் SWISS |



முக்கிய குறிப்பு: இந்நிகழ்வு கோவிட்-19 காரணமாகவே பின்போட்டு வைக்கப்பட்டதை மனவருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

தொடர்புகள்: Email - ANALAIVADALOORTMS@GMAIL.COM

தொலைபேசி: திரு. த. இராஜேஸ்வரன் 416 580 1982
திரு. சி. விநாயகமூர்த்தி 647 401 7164
திரு. அ. கைலாசபிள்ளை 647 296 3529



வங்கி மூலம் பணம் அனுப்புபவர்கள் எம்முடன் உடன் தொடர்பு கொண்டு அதை உறுதி செய்யவும். நன்றி

வங்கி/BANK : BANK OF MONTREAL, A/C No.- 3948496, Transit No.-24922, Institution No.- 001

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்பதை யாமறிவோம். எனவே அனைவரும் ஒன்றிணைந்து நம்மை வளர்த்து ஆளாக்கிய பாடசாலையின் வரலாற்றை நிறைவாக ஆவணமாக்குவோம்.

நன்றியுடன் பவள விழா செயற்குழு - 2022


உலக வணிகம் ULAGA VANIKAM 2023

LIST YOUR BUSINESS
ON OUR BUSINESS DIRECTORY
உலக வணிகம் ULAGA VANIKAM
விளம்பரம்
ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வதுஉங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
தொலைபேசி எண்: 437.345.4203





4915 Steeles Ave. East, Unit 02, Scarborough ON M1V 4Z4



உங்கள் தேவைக்கேற்ப அனைத்து வைபவங்களுக்கும் சிறந்த முறையில் உணவுகள் தயாரித்து வழங்கப்படும்
இலங்கை, இந்திய மற்றும் கனேடிய உணவு வகைகள்
Aaru Tasty
P: (416) 291-9600
www. aarutasty.com info@aarutasty.com



பலம் தான் உலக அரசியலை நிர்ணயிக்கின்றது. எமது பலத்தின் மூலம் விடுதலையை வென்றெடுப்போமாயின் சர்வதேச சமூகம் எமக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுத்தேயாகவேண்டும். அதுவரை அவர்கள் முட்டுக்கட்டைகளைப் போட்டபடி இருப்பார்கள்.





# தமிழீழப் பிரசவமும் — சர்வதேச சமூகப் பிரவேசமும்

உலகில் நாடு என்ற அமைப்பு இருக்கும் வரை புதிய நாடுகள் தோன்றிக்கொண்டிருக்கும். மனித வரலாறிற்கு முடிவில்லை. நாடுகளின் எண்ணிக்கையும் அவற்றின் எல்லைக்கோடுகளும் நிரந்தரமல்ல. இது பண்பாட்டை மேன்மைப்படுத்தும் யுகம். இன, மொழி, வாழ்விட அடையாளங்களை முதன்மைப்படுத்தும் காலம். ஒரே மொழி பேசும் இனம் தனது வாழ்விடத்தை நாடாக மாற்றத் துணிவது வரலாற்றின் நியதி. புதிய நாடுகள் பல்லின நாடுகளில் இருந்து தோன்றுகின்றன. பெரும் நிலப்பரப்புக்களைக் கொண்ட சாம்ராஜ்யங்கள் நாடுகளாக உடையும் போது இன, மத, மொழி அடிப்படையிலான பொது அடையாளங்கள் உடைவின் அடிப்படை அம்சங்களாக அமைகின்றன. பண்பாட்டு முரண்பாடுகள் பிரிவினைக்கு வித்திடுகின்றன. எண்ணிக்கையில் கூடிய இனம் தன்னையே நாடாக எண்ணிச் செயற்படும்போது விரிசல் ஏற்படுகின்றது. ஓரங்கட்டப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கு முறைக்கு உட்படும் எண்ணிக்கையில் குறைந்த இனம் தன்னாட்சிக்காகவும், தனிநாட்டிற்காகவும் போரிடும் தேவை ஏற்படுகின்றது. போராட்டம் வெற்றி பெறும் போது தனி நாடு பிறக்கின்றது.

மனித வரலாறு தொடங்கிய நாட்தொட்டு இன்று வரை போர் என்பது மக்கள் அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. விளையாட்டு அணிகள் போல் இரு இராணுவங்கள் மோதுகையில் மக்கள் பார்வையாளர்களாக இருப்பார்கள் என்பது உண்மைக்குப் புறம்பான செய்தி. போர்க்களத்தில் இருந்து எவராலும் முற்றாக விலகி வாழ முடியாது. அதோடு போர் மக்களைப் பாதிக்காமல் விடாது. சொத்தழிவு, உயிரழிவு, இடப்பெயர்வு என்பது முற்காலத்திற்கும் பொதுவான நிகழ்ச்சி. ஐரோப்பாவின் 17, 18ம் நூற்றாண்டுகளில் போர் என்பது சீருடை தரித்த நன்கு அடையாளம் காணக்கூடிய இரு இராணுவங்களின் மோதல் என்ற சித்தாந்தம் வலுப்பெற்றிருந்தது. பிரெஞ்சுப் புரட்சியோடு அது கைவிடப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரெஞ்சுக் குடிமகனும் புரட்சிகர இராணுவத்தின் பங்காளனாகக் கருதப்பட்டான். அவனுடைய பங்களிப்பு தேசப்பற்றின் வெளிப்பாடாகவும், குடியுரிமைக் கடமையாகவும் தீர்மானிக்கப்பட்டன. நெப்போலியன் 1892 - 1815 காலப் பகுதியில் நடத்திய கண்டம் தழுவிய போரில் மக்கள் பங்களிப்பு உச்சம் அடைந்தது.

நெப்போலியனுக்கு எதிராகப் போரிட்ட ருக்ஷ்யன் ஜெனரல் வொன் குளோஸ்விற்ஸ் தனது போர் பற்றிய நூலில் (ON WAR: VON CLAUSEWITZ) இரு நாடுகள் போரிடும் போது அந்த நாடுகளின் மக்கள் அனைவரும் வாழ்வா சாவா என்று மூர்க்கத்தனமாகப் போரிடவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (1832) இராணுவங்கள் மாத்திரம் மோதுவதே போர் என்ற பழைய கருத்தை நிராகரித்தவரும் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து மக்கள் போரில் பங்கேற்கவேண்டும் என்று முதன் முதலாக கூறியவரும் அவர்தான். ஐரோப்பியப் போரியல் சிந்தனையில் ஒரு வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்தியவர் வொன் குளோஸ்விற்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

வழமையான சிந்தனைப்படி ஒரு சிறிய இராணுவ அணி போருக்கு வரலாம் என்று 1793ல் எதிர்பார்க்கப்பட்டது. அதுவரை ஒருவர் சிந்தனைக்கும் உட்படாததொரு பிரமாண்டமான இராணுவம் களத்திற்கு வந்தது. திடீரென்று போர் ஒரு மக்கள் விவகாரமாக மாறிவிட்டது. 30 மில்லியன் மக்களைக் கொண்ட நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் தனது குடியுரிமையைச் செலுத்த முன்வந்தான். முழுத்தேசமும் தனது எடைமுழு வதையும் ஒன்றாகக் குவித்தது. இவ்வாறு தனது நூலில் வொன் குளோஸ்விற்ஸ் மிகவும் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார். (ON WAR: PUBLISHED BY HARMONDSWORTH 1971 P.384) நெப்போலியன் காலத்து மக்கள் போர் முறைக்கு வொன் குளோஸ்விற்ஸ் சித்தாந்த வடிவம் கொடுத்திருக்கிறார். அது இதன்மேல் இடம்பெறுகின்றது.

வரலாற்று ரீதியாக இலங்கைத் தீவில் தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையில் தொடர்ச்சியான மோதல் நிலை நிலவுகின்றது. இத்தீவின் வரலாறு இரு இனங்களின் மோதல் என்று சொல்லும் அளவிற்கு அது காணப்படுகின்றது. இதற்கான விளக்கம் பலவாறு கூறப்படுகின்றது. பெரும்பான்மை இனமாக இருந்தாலும் அழிக்கப்பட்டுவிடுவோமோ அல்லது நாமாகவே அழிந்துவிடுவோமோ என்ற சிறு இனத்திற்குரிய அச்சம் சிங்களவர்களுக்கு இருக்கிறது என்கிறார் சிறீலங்காவுக்கான முன்னால் அமெரிக்கத் தூதுவர் ஹோவாட் றிகின்ஸ். (HOWARD WRIGGINS) பண்பாட்டு அடிப்படையில் இருசாராரும் பெருமளவில் வேறுபடுகின்றனர். ஒன்றிணைந்து செயற்படும் வாய்ப்புக்கள் அரிது. பரஸ்பர சந்தேகங்கள் முற்றி விட்டன. ஒரேநாட்டின் இரு இனங்கள் பிளவுபட்டிருப்பதை புவித்தட்டில் ஏற்பட்ட வெடிப்பிற்கு நிகர். (FAULT LINES) என்கிறார் பேராசிரியர் சாமுவல் ஹன்ரிங்ரன் (THE CLASH OF CIVILIZATIONS AND THE REMAKING OF WORLD ORDER : SAMUEL P.HUNTINGTON. PENGUIN BOOKS 1997) FAULT LINE CONFLICTS எனப்படும் புவித்தகட்டு வெடிப்புப்போன்ற பண்பாட்டு முரண்பாடுகள் இருவிதமாக உருவாகின்றன என்கிறார் இவ்வாசிரியர்.

முதலாவதாக வெவ்வேறு பண்பாட்டு விழுமியங்களைக்கொண்ட இரு அயல் நாடுகளுக்கிடையில். இரண்டாவதாக ஒரேநாட்டு எல்லைக்குள் வாழும் இரு வேறுபட்ட பண்பாடுகளுக்கிடையில். இன்றைய உலகில் நடக்கும் பெரும்பாலான மோதல்கள் மேற்கூறிய இரு வகையை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்கிறார் ஹன்ரிங்ரன்.

பனிப்போருக்குப் பிந்திய காலத்தில் கருத்தியல் போர் பின்தள்ளப்பட்டுள்ளது. பண்பாட்டு அடிப்படையிலான போர் முன்நிலைக்கு வந்துள்ளது. பண்பாடு ஒன்றிணைக்கும் பாலமாகவும் அதே சமயத்தில் வேறுபடுத்தும் அதல பாதாளமாகவும் இடம் பெறுகின்றது. ஒரே பண்பாட்டைக் கொண்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்தாலும் இறுக்கமான பிணைப்பையும் பாசத்தையும் தமக்கிடையில் வளர்த்துக்கொள்கின்றனர். வேறுபட்டபண்பாட்டிற்குரியவர்கள் ஒருவரை ஒருவர் எதிரியாகக் கருதும் நிலையும் இப்போது தோன்றி யுள்ளது. ஒரு சிங்களப் பிரதமர் தமிழ் போராளிகளை "விசர் நாய்கள்" என்றும் அவர்கள் "சுட்டுக்கொல்லப்பட வேண்டும்" என்று கூறியதற்கு அடிமனதிலும் நுனிநாக்கிலும் ஊறிவிட்ட பண்பாட்டு விசம் தான் காரணம். ராஜிவ் காந்தியின் சடுதி மறைவிற்குப் பின் புதுடில்லி ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப்போருக்கு "மில்லியன் தென்னிந்திய வாழ் தமிழர்களின் ஆதரவையும் உதவியையும் அதனால் நிறுத்த முடியவில்லை." என்று மேற்கூறிய ஆசிரியர். (பக்கம் 275)

ஈழத்தமிழர்களின் உரிமைப்போர் காந்திய முறையில் சாத்வீகப் போராக ஆரம்பித்தது. இந்தியப் பண்பாட்டில் தாம் ஒரு உறுப்பினர்

# தமிழீழப் பிரசவமும் — சர்வதேச சமூகப் பிரவேசமும்




என்ற அப்போதைய ஈழத்தமிழ் தலைவர் கள் நினைத்தார்கள். இதனால் சாத்வீகப் போருக்கு தலைமை தாங்கிய எஸ். ஜே.வி. செல்வநாயம் "ஈழத்து காந்தி" என்று அழைக்கப்பட்டார். காந்தியின் அகிம்சையையும் ஒத்துழை யாமை யையும் சட்டமறுப்பயையும் தந்தை செல்வா என்றழைக்கப்பட்டவர் முன் னெடுத்தார். இந்த முயற்சியில் அவர் கண் டது முழுத்தோல்வி மத்திரமே. எனினும் மக் கள் மத்தியில் ஒரு விழிப்பை ஏற்படுத்தினார் என்பதை மறுக்க இயலாது. வேறுபட்ட பண் பாட்டைக் கொண்ட சிங்கள அரசினால் காந் தியத் தின் சிறப் பை உணர முடியவில்லை. ஆயுத முனையில் அடக்கு முறையில் ஈழத் தமிழர்களின் உரிமைக் கோரிக்கையை நசுக்க முற்பட்டார்கள். அதன் விளைவு இன் றைய போராக வெடித்துள்ளது.

காந்தியத்தின் தோல்வி தமிழீழத்தில் புதிய வர லாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தியது. 1970




களில் தோன்றி அரச அடக்குமறையும் (STATE REPRESSION) அதற்கு எதிரான ஈழத்தமிழர்களின் ஆயுத எதிர்ப்பு முறையும் (ARMED RESISTANCE) சரித்திர நியதி யாக அமைகின்றன. ஆரம்பகட்டத்தில் ஈழத்தமிழர் களின் ஆயுத எதிர்ப்பு இளைய தலைமுறை யினர் சிலரால் முன்னெடுக்கப்பட்டது. இதை வெகு ஜன இயக்கமாக விபரிக்கமுடியாது. வொன குளோஸ்விற்சின் ஒட்டுமொத்த மக்கள் யுத்தம் (TOTAL WAR) என்ற கோட்பாடும் இதற்குப் பொருந்தாது. "ஒழுக்கம், கட்டுப்பாடு, கொள்கைத்திட்டம் ஆகியவை கொண்ட ஒரு புரட்சிகர அமைப்பினால" ஆரம்பகட்டத்தில் தமிழ் இளைஞர்களின் வன் முறைப் போராட் டம் நெறிப்படுத்தப்பட வில்லை. (இரண்டு தசாப்தங்களும் புலிகளும்: கலாநிதி அன்ரன் பாலசிங்கம், முத்தமிழ் விழா மலர் 1991 பக்கங் கள் 139 - 155) எனினும் அரச ஒடுக்கு முறைக்கு எதிரான ஆவேசமும் புரட்சிகரப் போர்க்குணமும் இவர்களிடம் மிகுதியாகக் காணப்பட்டன.

இவர்களில் ஒருவராகத் தோன்றிய தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள் 1972 நடுப்பகுதியில் தனித்தியங்கும் தனது தீர்மானத்தை நிறைவேற்றினார். 1980 களிலும் அதன் பின்பு தமிழீழத்தினதும் சிங் கள தேசத்தினதும் தலைவிதியை அவர் மாற் றியமைத்தார். "லங்கா கார்டியன்" என்ற செய்திச் சஞ்சிகையின் ஆசிரியர் மேர்வின் டீ. சில்வா பிரபாகரன் பற்றி, ஒரு முக்கிய தசாப் தத்தின் வரலாற்று நாயகன் என்று குறிப் பிடுகின்றார். **"இது எனது தனிப்பட்ட மானசீக மதிப்பீடு அல்ல இலங்கைத் தீவை அதி ரவைத்த பூகம்ப நிகழ்வுகளின் அடிப்படையில் பார்க்கும் போது இது தவிர்க்கமுடியாத வரலாற்றின் தீர்ப்பு"** என்கிறார் மேர்வின் டீ. சில்வா. தொடங்கிய நாட்தொட்டே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு **"வளைந்துகொடாமை, இலட்சிய உறுதி, தனித்துவமான போக்கு"** என்பவற்றைக் கடைப்பிடிக்கின்றது. தமிழீழம் என்ற தனிநாடு தவிர்ந்த பிறிதொரு தீர்விற்கும் இடமில்லை என்ற நிலைப்பாட்டில் புலிகள் உறுதியாக நிற்கின்றனர்.

இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு

கவனத்தில் முதலிடம் பெற்றுள்ளது. போர்த் திறனிலும், இலட்சிய உறுதியிலும் தியாக சிந்தனையிலும் புலிகள் இணையற்று விளங் குகின்றனர். எமது விடுதலைப்போர் ஒடுக்கப் பட்ட மக்களுக்கு உந்து சத்தியாக அமைகின் றது. இன்றுள்ள விடுதலைப் போராட்ட அமைப் புக்களில் பாரிய விடுவிக்கப்பட்ட பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டிருக்கும் ஒரே யொரு அமைப்பு விடுதலைப்புலிகள் மாத் திரமே. தான் வகுத்த கொள்கைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் விதத்தில் ஒரு நேர்த்தியான ஆட்சி முறையை புலிகள் அமைத்துள்ளனர். தனியான நீதித்துறை, பாதுகாப்புத்துறை, நிர்வாகத்துறை, பொருளா தாரத்துறை, போன்றவற்றை தமது கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் நிறுவியுள்ளனர். சக்தி வாய்ந்த கடற்படையைக் கொண்ட உலகின் ஒரேயொரு அங்கீகாரம் பெறாத அரசமைப்பு என்ற சிறப்பு புலிகளுக்கு உண்டு.

இன்றைய உலக ஒழுங்கில் சர்வதேச சமூகத் தின் அங்கீகாரம் அவசியம் தேவைப்படுகின்

நாடுகள் சட்டரீதியாகத் தோற்றம் பெற்றன. வெஸ்பாலியா அமைதி உடன்படிக்கை கத்தோலிக்க நகரான மியூன்ஸ்ரறிலும் (MUE NSTER) புரட்டஸ்தாந்து நகரமான ஒக்ஸ்னா புறுக்கிலும் (OSNABRUECK) கைச்சாத்திடப் பட்டன. இவை கூட்டாக வெஸ்பாலியா அமை தி உடன்படிக்கை என்று அழைக்கப்படுகின் றது.

சர்வதேச சமூகம் என்ற கூட்டமைப்பு பரிணாம வளர்ச்சியில் வெஸ்றபாலியா அமைதி உடன் படிக்கை ஒரு மைல் கல்லாகக் கருதப்படுகின் றது. இந்த உடன்படிக்கையின் பெறுபேறுகள் சர்வதேச சமூக வளர்ச்சியில் பாரியளவு பங்களிப்புச் செய்தன. முதலாவதாக புரட்டஸ் தாந்து மதத்தைத் தழுவிய ஐரோப்பிய

சர்வதேச சமூகம் என்றால் இறைமை பெற்ற ஐரோப்பிய நாடுகள் என்ற ஆதிநிலை மாறி இன்று இறைமை பெற்ற அனைத்துலக நாடு கள் என்ற நிலை தோன்றியுள்ளது. என்றாலும் இது உண்மைநிலை அல்ல. முதலாம் உலக நாடுகள் அதாவது தொழில்வளம், பொருளா தாரபலம், இராணுவப்பலம் பொருந்திய அமெரிக்கா, மேற்குலக நாடுகள், ஜப்பான் ஆகியவைதான் சர்வதேச சமூகம் என்ற அந்தஸ்தைத் தமக்குத் தாமே சூட்டியுள்ளன. சர்வதேச சமூகம் என்ற சொற்றொடர் இப்படி யான ஆதிக்க சக்திகளைத்தான் குறிப்பிட உதவுகின்றன. தமிழீழம் போன்ற புதிய நாட் டின் தோற்றத்திற்கு இவர்களுடைய அனுமதி நிச்சயம் அவசியமில்லை. பலம் தான் உலக அரசியலை நிர்ணயிக்கின்றது. எமது பலத் தின் மூலம் விடுதலையை வென்றெடுப் போமாயின் சர்வதேச சமூகம் எமக்கு சாத கமான நிலைப்பாட்டை எடுத்தேயாகவேண் டும். அதுவரை அவர்கள் முட்டுக்கட்டை களைப் போட்டபடி இருப்பார்கள்.

அங்கீகாரம் என்பது சர்வதேச சமூகத்தின் உறுப்பு நாடாக ஏற்றுக்கொள்வதைக் குறிப் பிடும். அங்கீகாரத்தை இராசதந்திர மொழியில் றெக்கொக்நிசன் (RECOGNITION) என்பார் கள். ஒரு நாடு புதிதாக உருப்பெற்ற நாட்டை இ ருவிதத்தில் அங்கீகரிக்க முடியும். சர்வதேச நியமங்களுக்கு அமைவாக புதிய நாட்டுடன் இராசதந்திர மற்றும் அரசியல் தொடர்புகளை ஏற்படுத்தல். சர்வதேச சமூகத்தின் உறுப்பு நாடாக

*புதிய நாடுகளின் தோற்றம் சம்பந்தமான நிலையான கொள்கை சர்வதேச சமூகத்திடம் இல்லை. தமது தேசிய நலனிற்குப் பொருத்தமான இடத்தில் புதிய நாட்டின் தோற்றத்திற்கு அனுசரணை வழங்குவார்கள். தேசிய நலனிற்கு இலாபம் இல்லையென்றால் வழங்க மாட்டர்கள். ஆனால் நிலைமை கட்டுமீறிச் செல்லு மானால் மற்றும் உபாயங்களைக் கையால்வார்கள். இறுதிக்கட்டமாக தவிர்க்க முடியாத கட்டம் தோன் றுமாயின் அங்கீகாரத்தை வழங்கிவிடுவார்கள்.*




## ஈழத் தமிழரின் பூர்வீக நிலம் இது




றது. தமிழீழத்திற்கு உலகநாடுகளின் அங்கீ காரம் இல்லாவிட்டால் பாரிய எதிர் விளை வுகள் ஏற்படும். மேம்பாட்டு நிதி உதவிகள் கிடைப்பது கடினம். தமிழீழத்தின் வர்த்தக மற்றும் கொடுக்கல் வாங்கற் செயற்பாடுகள் முடக்கம் அடையும். சர்வதேச சமூகம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் விடுதலைக்கு அங் கீகாரம் வழங்கியுள்ளது மாத்திரமல்ல விடு தலைக்கு ஊக்குவிப்பும் வழங்கியுள்ளது. அங் கீகாரம் தேசிய நலனின் அடிப்படையில் வழங் கப்படுகிறது.

சர்வதேச சமூகம் (INTERNATIONAL COMMUNITY) என்ற சொற்றொடர் 17ம் நூற் றாண்டு தொடக்கம் பாவனையில் உள்ளது. 1648ம் ஆண்டில் ஐரோப்பியாவில் 30 வருட காலம் நடைபெற்ற மதப்போர் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு வெஸ்பாலியா அமைதி உடன்படிக்கை (PEACE OF WESTPHALIA) நிறைவேற்றப்பட்டது. கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்தாந்து மதத்தினருக்கு இடையிலான போரின் முடிவாக இருந்தாலும் இந்த உடன் படிக்கைக் குப்பின் நன்கு வரையறை செய்யப் பட்ட எல்லைகள் அரசு, மக்கள் என்பன உள்ள

நாடு களுக்கு சர்வதேச அங்கீகாரம் வழங் கப்பட் டது. கர்தோலிக்க மதபீடத்திற்கு உட் படாத நாடுகள் தோன்ற வாய்பப்ளிக்கப்பட்டது. 300 வரையிலான கத்தோலிக்க மதபீட ஆட்சிக்குட்பட்ட சிறிய நாடுகள் தனித்தியங் கும் வாய்ப் புக்கள் அளிக்கப்பட்டன. அவர்கள் பிற நாடு

களோடு ஒப்பந்தம் செய்வதற்கும் போருக்குச் செல்வதற்கும் அனுமதிக்கப்பட்டன. ஆனால் கத்தோலிக்க மதபீடத்திற்கு எதிராகப் போரிட முடியாது என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. மூன்றாவதாக ஐரோப்பிய வலுவாதிக்கம் (POWER) பிரான்சு, சுவீடன், நெதர்லாந்து ஆகியவற்றுக்கிடையில் பங்கீடு செய்யப்பட் டது. சுவிர்சலாந்து ஒரு நடுநிலை நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சுருக்கமாகக் கூறுவ தாயின் கத்தோலிக்க மதபீடம் போன்றதொரு பிறசக்தியின் ஆதிக்கத்திற்கு உட்படாத இறைமை நாடுகளின் பிறப்பு வெஸ்பாலியா அமைதி உடன்படிக்கை மூலம் ஏற்றுக்கொள் ளப்பட்டன.

வருவதற்கு வேண்டிய தகுதி புதிய நாட் டிற்கு இருப்பதைத் தனது பார்வையில் ஏற்றுக் கொள்ளல். எல்லா நாடுகளும் இப்படி அங்கீ காரம் வழங்கும் நாட்டைப்போல் புதிய நாட்டை அங்கீகரிக்கவேண்டும் என்ற கட்டுப்பாடுகிடையாது. ஆனால் தனி யொரு நாடு வழங்கும் அங்கீகாரம் பிற நாடுகளை அவ்வாறு தூண்டுவதற்கு உகந்த பயனுள்ள நடவடிக்கையாக அமையும். நடை முறையில் சர்வசேத சமூகத்தின் உறுப்பினர் கள் அனைவரும் ஒரே நேரத்தில் ஒட்டுமொத்த மாக அங்கீகாரம் வழங்கியதாக வரலாறு இல்லை. ஒருசில நாடுகள் இராசதந்திர தூது வர்கள் பரிமாற்றம், உடன்படிக்கைகள், ஒப்பந் தங்கள் செய்வது மூலம் அங்கீகாரச் செயற் பாட்டைத் தொடக்கிவைக்கின்றனர். பிறிதொரு தொகுதி நாடுகள் புதிய நாட்டுடன் தொடர்பை ஏற்படுத்தாமல் விலகி நிற்கும் வாய்ப்பு நிறைய உண்டு. அதே சமயத்தில் அங்கீகாரம் வழங் காத அல்லது மறுக்கும் நாடுகள் புதிய நாடு மீது தாக்குதல் நடத்துவதையோ பிற எதிர் நட வடிக்கை எடுப்பதையோ சர்வதேச ஒழுங்கு முறை தடைசெய்கின்றது, என்றாலும் அத்து மீறல்கள் நடக்கின்றன அல்லது தூண்டிவிடப் படுகின்றன. புதிய நாடு உதயமாகிவிட்டதா என்ற சந்தேகத்தை கூட சில நாடுகள் சர்வதேச மட்டத்தில் எழுப்பலாம். எதற்கும் எதிர்வு கூறல் கடினம்.

ஒரு இறைமை நாட்டிற்குள் ஆயுதபலத்தின் மூலம் விடுதலை அமைப்பு இன ஒடுக்குமுறை அரசிற்கு எதிராகப் போரிட்டு அதில் பெற்ற வெற்றி காரணமாக பாரிய அரசியல் இரா ணுவத்தளத்தை ஏற்படுத்த முடியுமானால் அது நிற்சயம் சர்வதேச சமூகத்தின் கவனத்தைப் பெற்றே தீரும். அத்தோடு தனக்கென ஒரு ஆள் புலத்தை ஏற்படுத்திய விடுதலை அமைப்பும் தனக்குரிய சர்வதேச அந்தஸ்தைக் கோரியே தீரும். இப்படியான ஆள்புலம் ஏற்பட்ட நாட்டின் அரசு குறிப்பிட்ட விடுதலை அமைப்பிற்குரிய அங்கீகாரத்தை வளங்கப்போவதில்லை. கிளர்ச்சியாளர்கள், பயங்கரவாதிகள், கிரு மினல்கள் போன்ற தரக்குறைவான வார்த் தைப் பிரயோகங்களை அந்த அரசு பயன் படுத்திக் கொண்டிருக்கும். சர்வதேச சமூகம்

# தமிழீழப் பிரசவமும் —— சர்வதேச சமூகப் பிரவேசமும்

என்று தங்களை அழைக்கும் நாடுகள் தமது தேசிய நலத்திற்கு உகந்த நிலைப்பாட்டை இந்த விவகாரம் தொடர்பாக எடுப்பார்கள். விடுதலை அமைப்பிற்குரிய அங்கீகாரத்தை வழங்குவார்கள். அல்லது தாமும் மேற்கூறிய அரசைப்போன்ற வார்த்தைப் பிரயோகங்களைச் செய்யக்கூடும். சுருங்கிவரும் உலகில் எப்பிரச்சினையாக இருந்தாலும் அது உலகின் பொதுப் பிரச்சினை என்ற நிலைப்பாடு சர்வதேச சமூகத்தில் நிலவுகிறது. விடுதலை அமைப்புகளுக்கு சர்வதேச சமூகம் அங்கீகாரம் வழங்குமாயின் அது தனிநாட்டு பிறப்பின் முதற்படியாக இடம்பெறும் சாத்தியம் ஏற்படும். புதிய நாடுகளின் தோற்றம் சம்பந்தமான நிலையான கொள்கை சர்வதேச சமூகத்திடம் இல்லை. தமது தேசிய நலனிற்குப் பொருத்தமான இடத்தில் புதிய நாட்டின் தோற்றத்திற்கு அனுசரணை வழங்குவார்கள். தேசிய நலனிற்கு இலாபம் இல்லையென்றால் வழங்கமாட்டார்கள். ஆனால் நிலைமை கட்டுமீறிச் செல்லுமானால் மாற்று உபாயங்களைக் கையாள்வார்கள். இறுதிக்கட்டமாக தவிர்க்க முடியாத கட்டம் தோன்றுமாயின் அங்கீகாரத்தை வழங்கிவிடுவார்கள்.




விடுதலை இயக்கத்திற்கு ஆள்புல தளம் அதிமுக்கியம் என்பதை இவ்விடத்தில் வலியுறுத்தவேண்டிய அவசியம் இல்லை. அதைப் பறிப்பதற்கு அரசும், அதற்கு ஆதரவான உலக நாடுகளும் இராணுவ ரீதியாகக் கடும் முயற்சி எடுப்பதற்கு இதுதான் காரணம். அத்தோடு சம்பந்தப்பட்ட விடுதலை இயக்கத்திற்கு இராசதந்திர அழுத்தம் கொடுத்து பேச்சுமேசைக்குக் கொண்டுசெல்வதும் அதைப் பலவீனப்படுத்தும் நோக்கில் தான். ஒரு விடுதலை இயக்கம் முன்வைக்கும் விடுதலைக் கோரிக்கையின் நியாயப்பாடு ஒடுக்குமுறைக்கு எதிரான அதனுடைய ஸ்திரமான போராட்டம், அது நிறுவிய தளம் என்பன வோடு அது வேண்டிநிற்கும் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையிலும் சம அளவில் தங்கியுள்ளது. அதாவது அதனுடைய தனிநாட்டுக் குறிக்கோளை சுயநிர்ணயக் கோரிக்கை மூலம் எட்டமுடியும் என்று அது நம்புகிறது. இக்கோரிக்கையின் வலுவீச்சை சர்வதேச சமூகம் குறைப்பதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு அச்சம் தான் காரணம். அதாவது சுயநிர்ணய அடிப்படையில் புதிய நாடுகள் பரவலாகத் தோன்றும் போது தலைமை நாடுகளின் அதிகாரங்கள் குறைவடையும் என்ற அச்சம். அரசியலின் அடிப்படை புவியியல் என்பார்கள். பிறக்கவிருக்கும் தமிழீழத்தைப் பொறுத்தளவில் இது மிகப் பெரிய உண்மை. பெரும் நிலப்பரப்பைக் கொண்ட இந்தியாவின் பக்கலில் நாம் அமைந்துள்ளோம். இதை மாற்ற எம்மால் இயலாது. ஆசியாவின் மையப்பகுதியில் இந்தியத் தரைப் பரப்பு அமைந்துள்ளது. மத்திய கிழக்கையும் கிழக்காசியாவையும் இணைக்கும் பெரும் கடற்பாதைகளின் மையப்பகுதியில் இந்தியா இருக்கிறது. இந்தியாவின் தென்பகுதியில் 22 கடல் மைல் தொலைவில் சிறீலங்கா இருக்கிறது. சிறீலங்கா விவகாரங்கள் இந்தியாவைப் பாதிக்கின்றன. வாசு தாய்வ் குடும்பகம் என்ற வடமொழிச் சுலோகத்தை தாரக மந்திரமாக இந்தியா கொண்டுள்ளது. உலகம் ஒரே குடும்பம் என்று பொருள். நடைமுறையில் வேறுபாடுகள் உண்டு. அயல்நாட்டு உறவுகளை புவியியலும் வரலாறும் தீர்மானிக்கின்றன. புவியியல் காரணிகளைக் கணக்கில் எடுப்பவன் யதார்த்தவாதி. புவியியல் காரணிகளுக்கு அப்பால் செல்லத் துணிவில்லாதவன் அதன் கைதி. புவியியல் காரணிகளை கணக்கில் எடுக்காதவன் மூடன் என்றும் சொல்வார்கள். இவை எமக்கு வழிகாட்டிகளாக அமையலாம். சிறீலங்காவைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இலக்குடன் நெடுகாலமாக இந்தியா செயற்படுகின்றது. இலங்கையின் கிழக்கு எல்லை இந்தியாவின் தெற்கு எல்லையின் ஒரு பகுதி என்பது இந் தியக் கொள்கை வகுப்பாளர் நிலைப்பாடு.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தோற்றம் புதிய சக்தி மையத்தை இப்பிராந்தியத்தில் உருவாக்கியுள்ளது. சிங்கள தேசத்தையும் தமிழீழத்தையும் சமாளிக்க வேண்டிய தேவை இந்தியாவிற்கு எழுந்துள்ளது. உலகின் மிகப்பலம் வாய்ந்த பொருளாதார வல்லரசுகளில் ஒன்றான இந்தியா படிப்படியாக சிறீலங்காப் பொருளாதாரத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதில் வெற்றிகண்டுள்ளது. திருகோணமலைத் துறைமுகத்தையும் அதைச் சூழவுள்ள பகுதியையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதில் அது ஓரளவு வெற்றிகண்டுள்ளது. திருகோணமலைப் பிராந்தியத்தில் ஒரு பொருளாதார வலையத்தை இந்தியத் தலைமையில் கட்டியெழுப்பும் இலக்கு இந்தியாவிற்கு உண்டு. சிங்கள அரசு ஒத்துழைப்பு வழங்கினாலும் தமிழீழப் பிராந்தியத்தில் திருகோணமலை இருப்பதால் இந்தியாவின் நோக்கம் முற்றாக நிறைவேற வாய்ப்பில்லை. சில அரசியல் ஆய்வாளர்கள் கணிப்பீட்டில் தமிழீழம் என்ற நாடு இந்தியாவிற்கு ஒரு நிரந்தர தலையிடியாக இருக்கும். தமிழீழம் நேசக்கரம் நீட்டினாலும் அதைச் சந்தேகக் கண்ணோடுதான் இந்தியா எதிர்கொள்ளும். சீனாவிற்கு ஒரு தாய்வான், இந்தியாவிற்கு ஒரு தமிழீழமாக அமையலாம் என்று அதே ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். மத்திய கிழக்கில் ஒரு இஸ்ரேல் தோன்ற அனுமதித்ததால் அரபு நாடுகள் நிம்மதி இழந்துள்ளன. அதைப்போன்ற தவறை மீண்டும் தெற்கு ஆசியாவில் செய்யலாமா என்றும் கேட்கிறார்கள். இந்தியா தனது ஒட்டுக்குழுவான ஈ.என்.டி.எல்.எப். அமைப்பை புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தத்திற்கு அனுப்பியுள்ளது. போராசிரியர் ஹன்ரிங்ரன் சுட்டிக்காட்டியது போல் இந்தியாவின் கையை 50 மில்லியன் தென்னிந்தியத் தமிழர்கள் கட்டிப்போட்டிருக்கிறார்கள். ஒரு யதார்த்தவாதியான ஏ.ஜே வின்சன் தனது சிறீலங்கா உடைவு என்ற நூலில் “பிரிவினை ஏற்படும்போது அது இந்தியாவின் அனுமதியோடு அல்ல, ஒருதலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனத்தின் அடிப்படையில் அமையும்” என்றுள்ளார்.

புவித்தகட்டு வெடிப்புப்போன்ற சிறீலங்காவின் தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையிலான பிளவை ஒட்டுவேலைச் சமரசங்களால் தீர்த்து வைக்க முடியாது. இந்தியா முன்னின்று போர் நடத்தினாலும் இத்தீவு இரண்டாவதைத் தடுக்க இயலாது. மனத்தளவில் இருபகுதியினரும் பிரிந்து நெடுங்காலமாகி விட்டது. இனி நிலத்தைப் பங்குபோடும் வேலை எஞ்சியுள்ளது. சர்வதேச சமூகம் சிறீலங்கா மீது வைத்திருந்த நம்பிக்கையைப் படிப்படியாக இழந்துவருகின்றது. கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத நாடு, ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் போன்றவற்றை உதாசீனம் செய்யும் நாடு என்ற அபகீர்த்தி சிறீலங்காவுக்கு ஏற்பட்டுள்ளது. 1987, 2002 ஆகிய ஆண்டுகளில் செய்யப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களை சிறீலங்கா மிக அண்மையில் செயலிழக்கச் செய்துள்ளது. எந்த ஒப்பந்தத்திலும் நான் கைச்சாத்திடுவேன். அதிலிருந்து நழுவும் மார்க்கத்தை நான் அறிவேன் என்று சொன்ன கிட்லரைப்போல் சிறீலங்கா ஆட்சியாளர்கள் நடக்கின்றார்கள். தமக்கிடையில் செய்த ஒப்பந்தத்தைக் கூட ஒரு கண்சிமிட்டும் நேரத்தில் கிழித்து வீசும் சிங்களத்தலைமையை யார்தான் நம்புவார்கள்?

வெஸ்ற்பாலியா அமைதி உடன்படிக்கை நாட்தொட்டு தனி மனிதர்கள் உரிமை பற்றிய கரிசனை சர்வதேச சமூகத்தினர் மத்தியில் நிலவுகிறது. வெஸ்ற்பாலியா உடன்படிக்கையின் முதற்கட்டமான 1648-1915 காலப் பகுதியில் மனித உரிமைகள் பெரியளவில் பேணப்படவில்லை என்பது உண்மையே. இரண்டாம் கட்டமான 1915-1945 காலப் பகுதியில் மனித உரிமைகள் பற்றிய கரிசனை சிறிதளவேனும் இருக்கவில்லை. அதன்பின் வெஸ்ற்பாலியா உடன்படிக்கை மூலம் தோன்றிய நாடுகளின் இறைமையை உதாசீனம் செய்யும் அளவுக்கு மனித உரிமைகள் விவகாரம் தலைதூக்கியுள்ளது. இப்படியான சூழலில் மனித உரிமைகளை மதியாத படுமோசமான நாடு என்று தன்னைச் சிறீலங்கா வெளிப்படுத்துகிறது. இந்த நடத்தைக்குரிய விலையைச் சிறீலங்கா கொடுக்கத்தான் போகிறது.

தமிழீழம் ஒரு சிறிய நாடாகத்தான் அமையும், அதனால் தாக்குப் பிடிக்கமுடியாது என்பவர்கள் கவனத்திற்கு; மூன்றாம் உலக நாடுகளில் இருபத்தைந்து வரையிலானவை தமிழீழ நிலப்பரப்பிலும் பார்க்கச் சிறியதைக் கொண்டுள்ளன என்ற உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றோம். உதாரணம்: தமிழீழம் 25,500 சதுர கீ.மீ. மாலைதீவு 298 சதுர கீ.மீ. இன்னும் பல பிரிந்துபோவதற்கு சாதகமாகச் சில பத்திரிகைகள் எழுதியுள்ளன. 1983 ஆகஸ்து 04 ஆம் திகதி வாஷிங்ரன் போஸ்ற் பத்திரிகை “ஒன்றாக வாழ்வது கடினம் என்றால் தமிழர்களுக்கு வடக்கில் தனிநாடு உருவாக்கினால் என்ன? ஐநாவின் பெரும்பாலான உறுப்பு நாடுகளின் உரிமை போன்று அவர்களுக்கும் உரிமை உண்டு” என்றுள்ளது. பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியரான டாக்டர் சுமணசிறி லயனகே 2001 ஒக்ரோபர் 03 ஐலன்ற் பத்திரிகையில் “மாற்றுத் தீர்வாகப் பிரிவினை” என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். “பிரிவினை பல நடைமுறை, அரசியல், சமூகப் பிரச்சினைகளை உருவாக்கலாம். எல்லாச்சமூகங்களின் தேவையையும் நலனையும் கணக்கில் எடுத்து அவற்றைத் தீர்க்கலாம” என்ற கருத்தை அதில் தெரிவித்துள்ளார். பிரிவினை சிங்கள - தமிழ் இனங்களுக்குச் சிறந்த எதிர்காலத்தையும் சமத்துவ அடிப்படையில் நட்புறவையும் ஏற்படுத்தும் என்பது பேராசிரியரின் கருத்து. தொடர்ந்து போராடுவோம், வெற்றி நிட்சயம்.

நன்றி: கலாநிதி க. சோமாஸ்கந்தன் - விடுதலைப்புலிகள் (தை, மாசி 2007)






# இலங்கையின் இனஅழிப்பு தொடர்பில் சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கான விரைவான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்

## – மனித உரிமை ஆணையாளருக்கு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கடிதம் –

பெப்ரவரி 20, 2022

கடந்த வருட அறிக்கையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையின் இனவழிப்பு தொடர்பில் பாரப்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அதற்கு ஏதுவாக உரிய படிமுறைகளையும் தாங்களும், தாங்கள் சார்ந்த ஐ.நா சபையும் விரைவாக ஆரம்பிக்க வேண்டுமென வடகிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வமைப்பு ஐநா மனித உரிமை பேரவை ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில்,வடக்கு,கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம் எமது உறவுகளை தேடும் தொடர் போராட்டத்தை கடந்த 20.02.2017 அன்று கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் ஆரம்பித்தோம்.இன்று எமது போராட்டமானது ஐந்து வருடங்களைப் பூர்த்தி செய்து ஆறாவது ஆண்டில் தொடர்கிறது. இறுதி யுத்தம் முடிவடைந்ததை தொடர்ந்து எமது உறவுகள் கையளிக்கப்பட்டும், சரணடைந்தும், விசாரணைக்கென கூட்டிச்செல்லப்பட்டும் 20000 க்கும் மேற்பட்டோர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். இது தவிர, இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் வெள்ளை வானில் கடத்தப்பட்டும், துணை இராணுவக்குழுக்களால் கடத்தப்பட்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். இவர்கள் அனைவரையும் தேடும் எமது போராட்டமானது நூற்றுக்கு மேற்பட்ட பெற்றோர், தம் உறவுகளை பிரிந்த துயரால் நோய் வாய்ப்பட்டு இறந்த பின்பும் தொடர்கிறது. இது எமக்கான நீதி கிடைக்கும்வரை அல்லது எம்மில் ஒருவராவது உயிர் வாழும் வரை தொடரும். இந்த இறப்புக்களின் காரணமாக அவர்களின் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கான சாட்சிகள், ஆதாரங்கள் அழிக்கப்பட்டு விட்டன. இத்துன்பியல் தொடர்ந்தால் இறுதியில் சாட்சிகள் இன்மையால் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை மூடுவது சிங்கள அரசுக்கு சுலபமாகிவிடும்.

இலங்கை அரசானது உள்நாட்டில் தீர்வை வழங்குவதாக சர்வதேசத்திடம் கூறிவருகிறது. இலங்கை அரசிடம் இருந்து நீதி ஒருபோதும் எமக்கு கிடைக்காது. தமது கையால் தமது உறவுகளை கையளித்த உறவுகள் சிலர் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு, வருடக்கணக்கில் விசாரணைக்கெடுக்காமல் இழுத்தடித்து, இறுதியில் சரணடைந்தவர்கள் ஏற்றிச் செல்லப்பட்ட பஸ் இலக்கத்தை முறைப்பாட்டாளர் தெரிவிக்காததால் சில வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. யுத்த சூழலிருந்து உயிர்ப் பயத்துடன் ஓடிவரும் ஒருவர் தனது பிள்ளை, கணவன் ஆகியோரைப் பிரியும் நேரத்தில் அழுது புலம்புவார்களா? அல்லது பேப்பர் பேனா தேடித் திரிவார்களா? அதற்குரிய மனநிலையிலா அவர்கள் இருந்திருப்பார்கள்? இலங்கையில் நீதித்துறை எவ்வளவு பாரபட்சமாக சிந்திக்கிறது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இலங்கையில் தமிழர்களுக்கு சரியான நீதி கிடைப்பதில்லை எனினும் நீதியாக செயற்பட்டும் ஓரிருவரால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் கூட சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதியின் அதிகாரத்தால் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. மிருசுவிலில் சிறுவர் உள்ளிட்ட 8 பேரை கொலை செய்த வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்னாயக்க என்பவருக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அவர் இராணுவத்தில் பதவி உயர்வுடன் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளார். எட்டு தமிழர்களை கொலை செய்ததற்கு வெகுமதியாகவே இவரது பதவி உயர்வு கருதப்பட்டு ஏனையோரும் இது போன்ற படுகொலைகளைச் செய்யும் வண்ணம் ஊக்குவிக்கப்படுவார்கள். அதே போலவே திருகோணமலை கடற்படைமுகாமில் 11 பேர் கடத்திச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கிலும், திருகோணமலை 5 மாணவர்கள் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட வழக்கிலும், முறையே சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை மீளப்பெறப்பட்டும், சாட்சியங்கள் போதவில்லை என்றும் வழக்குகள் மீளப்பெறப்பட்டுள்ளன. அன்று படையினரை வழிநடத்திய இன்றைய ஜனாதிபதிக்கு எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என தெரியாது என்று கைவிரிக்க முடியாது. இன்று கூட எமது உறவுகள் கையளிக்கப்பட்ட வட்டுவாகல், முள்ளிவாய்க்கால், மாத்தளன், ஓமந்தை ஆகிய இராணுவ காவலரண்களின் பொறுப்பாக இருந்த படை அதிகாரிகளை உள சுத்தியுடன் விசாரிப்பதன் மூலம் எமது உறவுகள் பற்றி அறிந்து கொள்ளலாம். அப்படை அதிகாரிகள் தற்போது வெளிநாட்டின் தூதுவராகவோ அல்லது பதவி உயர்வு பெற்று தளபதியாகவோ தான் அவர் இருப்பார்கள். ஆனால் இலங்கை அரசாங்கம் அதைச் செய்யாது. காரணம் அவர்களுக்கு உண்மை வெளிவரக்கூடாது. ஏனென்றால் சிறீலங்காவில் இறுதியுத்தத்தின்பின் பதவியேறற் அத்தனை ஜனாதிபதிக்கும், அமைச்சர்களுக்கும் ஒரு வாக்குறுதியை சிங்கள மக்களுக்கு கூறுகிறார்கள் அது 'யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த படையினரை காட்டிக்கொடுக்க மாட்டேன். அவர்களை பாதுகாப்பேன்' என்பதே அதை மிக துணிச்சலாக செய்தும்வருகிறார்கள். உதாரணம் மிருசுவில் படுகொலையாளி காப்பாற்றப்பட்டமை, வசந்த கரன்ன கொட பாதுகாக்கப்பட்டமை, இது போல பல உண்டு ஆனால் தமிழ் அரசியல்கைதிகள் நீண்ட காலங்களாக விசாரணையின்றி சிறையிலே வாடுகிறார்கள். அவர்கள் செய்த குற்றமாக விடுதலை போராட்டத்திற்கு ஆதரவாக உணவு வழங்கியதும் மற்றும் போராளிகளுடன் தொடர்பில் இருந்தமை போன்றவற்றை காரணம் காட்டி பலவருடங்களாக தடுத்து வைத்துள்ளார்கள்.

இந்த நாட்டில் தமிழர்களுக்கு நீதி வழங்குவதில் பாரபட்சம் காணப்படுகிறது. தமிழ் மக்களின் மத சுதந்திரம், தனி மனித சுதந்திரம் கேள்வியாக்கப்பட்டுள்ளது. இரவோடு இரவாக எமது மத அடையாளாங்கள் அழிக்கப்பட்டு விகாரைகள் உருவாகின்றன. எமது பூர்வீக நிலங்களை கையகப்படுத்துவதற்காகவே புது சட்டங்கள், திட்டங்கள் அமுலுக்கு வருகின்றன. மக்களுக்கு அனுபவங்கள் மூலமாக ஏற்படும் உயிர்ப்பயம் இவை எவற்றையும் பொருட படுத்தாது மௌனிக்கச்செய்துள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எமது மன நிலையை பாதிக்கும் வகையில் எம்மீது இலங்கை அரசின் புலனாய்வாளர்களின் கண்காணிப்பு தொடர்கிறது. பின்தொடர்தல் , தொலைபேசி அழைப்பு, வீடியோ எடுத்தல் என்பன எமது உறவுகளை அச்சமூட்டும் வகையில் உள்ளன. போராட்டத்தில் கலந்து கொள்பவர்கள் மிரட்டப்படுகிறார்கள். இப் போராட்டத்தில் முன்னிலை வகிப்பவரின் குடும்ப உறுப்பினர்கள் தேவையற்ற விசாரணைகளுக்கு உள்ளாகும் துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகிறது.




எமது நீதிக்கான இந்த போராட்டத்தை தொடராமல் செய்வதற்கான குழப்பங்கள் உருவாக்கப்பட்டும் எம்மில் பலரை வயதாகிய தாய்மார், தனியாக குடும்பங்களை தலைமை ஏற்று நடத்தும் பெண்கள் என்று கூட பாராமல், பயங்கரவாத தடுப்பு பிரிவினர் அழைத்து விசாரணை என்ற பெயரில் மன உழைச்சலை தருவதும் நீதிக்கான எமது பயணத்திற்கு பெரிய பின்னடைவை ஏற்படுத்துகிறது.




மதிப்பிற்குரிய மனித உரிமைகள் ஆணையாளர் அவர்களே,

எமது உறவுகளுக்கு நீதி கிடைப்பதற்காகவே நாம் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் போராடிக்கொண்டிருக்கின்றோம். எம்மில் 75 வீதமானவர்கள் வயது முதிந்தவர்களே. அவர்கள் இந்த வயோதிப காலத்திலும் நீதியை தேடி வீதியிலே போராடுகிறார்கள். நாம் மன அழுத்தத்தினாலும் நோய்வாய்ப்பட்டதாலும் 112 பெற்றோர்களை இழந்து விட்டோம் மிஞ்சியிருப்பவர்கள் இறக்கும் முன்பு நீதி கிடைக்க வேண்டும்.

தங்களின் கடந்த வருட அறிக்கையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையின் இனவழிப்பு தொடர்பில் பாரப்படுத்துவதற்கு பரிந்துரை செய்திருந்தீர்கள் அதை விரைவில் செய்வதற்கு ஏதுவாக உரியபடிமுறைகளையும் தாங்களும், தாங்கள் சார்ந்த ஐ.நா சபையும் விரைவாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.

# உலக வணிகம்
# ULAGA VANIKAM
# 2022

## வெளிவந்துவிட்டது

இப்பொழுது அனைத்து தமிழர்
வியாபர நிலையங்கள், உணவகங்கள், கோவில்கள்
அலுவலகங்களிலும் **'உலக வணிகம் 2022'**
கையேட்டினை
பெற்றுக்கொள்ளலாம்.




**மேலதிக தொடர்புகளுக்கு: 437.345.4203**